Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 12.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்-14 வெள்ளி-22 25-31யூலை 2003



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 25.07.2003

# அபாய அறிவிப்பு

யாழ்குடாநாட்டு மாணவர்கள் குறித்த மதிப்பீடு மிக அண்மைக்காலங்களில் பல்வேறு வகையிலும் கவலை தருவதாக உள்ளது.

கல்வித்தரம் மிக மோசமான வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

யாழ்.மக்களின் மூல வளமே அவர்களின் மூளைவளம் தான் என ஒரு காலத்தில் பலராலும், பலநாட்டவராலும் புகழ்கூறப்பட்ட பெருமைகுறித்த நினைவுகளே இக்கட்டத்தில் நெஞ்சில் வலியை ஏற்படுத்துகிறது.

கலாசாலைகளின் கட்டடங்கள் உயர்கின்றன. கல்வித்தரம் உயரவில்லை என்றால் எப்படி? ஏன்?

இந்த வினாக்களுக்கான விடை தேடல் ஒரு பெரும் ஆய்வுக்குரிய விடயமாகவே இருக்கும்.

யாழ்.இடப்பெயர்வுக்கு முன் இடர்களுக்கு மத்தியிலும் போரின் அழுத்தங்களுக் கிடையேயும், கல்வியே கருத்தென என்றிருந்த தமிழ் மாணவர்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் தமது கற்றலில் ஆர்வம் கொண்டு செயற்பட்ட பெருமைக்குரிய வரலாற்றைக்கொண்டவர்களாக இருந்தனர்.

அதன்பின் என்ன நடந்தது அவர்களுக்கு...?

அவர்களின் வீழ்ச்சிக்கு என்ன காரணம்...? பெற்றோர்களா? கல்விச் சமூகமா? மாணவர்களின் அக்கறையீனமா? பொதுவாகவே கல்விமீதான ஆர்வக் குறைவா?அல்லது இவையனைத்துக்கும் அப்பாலானவேறு புறக்காரணிகளா? தொலைநோக்கு திட்டங்களின் அடிப்படையிலான அரச - இராணுவ இயந்திரத்தின் அறிவையும் மனதையும் வெல்லும் (Winning Hearts and Minds) உளவியல் நடவடிக்கைகளா?

மிக நுணுக்கமாக, விரைவாக ஆராய்ந்து பிரச்சினைகளின்ஆதிமூலத்தை ஆராய்ந்தறிந்து அதனைக் களையவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கால தாமதம் ஒரு இனத்தின் - தமிழ் இனத்தின் எதிர்காலத்தலைமுறையை மந்த புத்தியுள்ள இனமாகதிசைமாறி அலையும் இலக்கற்ற சமுதாயமாக மாற்றும் பன்முகத்திட்டமிடல் சதி நடவடிக்கைக்கு பெரும் வாய்ப்பினை வழங்கியதாகிவிடும்.

யாழ்.குடாவில் இளம் சமுதாயத்தினர் - குறிப்பாக மாணவ் சமூகத்தினர் - மத்தியில் ஏற்பட்டுவரும் கலாச்சார சீரழிவின் அடிப்படையிலான இந்த 'கல்விப் புறக்கணிப்பு' நிலையானது. பொறுப்பானவர்களால் மிகப்பொறுப்புடன் அணுகப்பட வேண்டிய முதன்மைவிடயமாகும்.

அண்மைக்கால குடா நாட்டு மாணவ சமூகம் குறித்த செய்திகள் நம்பிக்கையளிப்பதாக இல்லை என்பது ஒரு புறம் இருக்க, அவமானம் தருவதாகவும் இருப்பது தான் வேதனைக்குரிய விடயம்.

கல்வியின் அடிப்படையிலான, அறிவுசார் கலாச்சாரிய பாரம்பரியமொன்று - ஒரு கலைத்துவமான இனத்தின் மரபொன்று கண்முன்னால் சிதையுண்டு போவதை அனுமதிக்கக்கூடாது.

போதைப்பொருட்கள், நீலப்படங்கள் கலாச்சார சீரழிவுக்குப்பைகளை காட்சிப்படுத்தி இளைஞர்களின் மனதில் ஆபாச எண்ணங்களை விதைக்கும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் ஒளிப்பிரவகிப்பு, 21ஆம் நூற்றாண்டின் மிகமோசமான கலாச்சாரச் சீரழிவின் வடிவங்களாக வெளிவரும் மூன்றாந்தர தமிழ் சினிமாக்களின் வன்முறைப் படையெடுப்பின் ஆக்கிரமிப்பு. மதுபானக் கடைகளில் கட்டுப்பாடற்ற தடை விரிப்பு...

சொல்லிக்கொண்டே போகலாம். எழுத்தில் வடிக்க முடியாதவைகளும் உண்டு. அறிந்தவர் உணர்வர்.

இவையனைத்தும் தெரிந்த பரகசியங்களாகும்.

பொங்குதமிழில் பூரித்த யாழ். குடாவில் இந்த நிலையும் உள்ளது என்பது தான் அவமானம்தரும் விடயம்.

பொங்குதமிழின் உணர்வு அதனை மங்குதமிழாக்க முனையும் அனைத்து தீய சக்திகளை வேரோடும் வேரடி மண்ணோடும் அளிக்க மேலும் மேலும் உருக்கொள்ள வேண்டும்.

ஒரு இனத்தையோ, ஒரு சமூகத்தையோ அழிக்க முனையும் அனைத்து நச்சுச் சக்திகளையும் அந்த இனமும் சமூகமும் தான் இனம் கண்டுஅழிக்கவேண்டும்.

இல்லை அந்த இனம் தனது தனித்துவ அடையாளத்தையே இழந்ததாகிவிடும்...

## தூரனின் பார்வை

# வெறுமனே பேச்சுக்களும்... பகட்டான அறிக்கைகளும்...

**ரணில் விக்கிரமசிங்க, சட்டத்திற்கு உட்படாத — அதாவது அரசியல்யாப்பின் விதிகளுக்குட்படாத — இடைக்காலநிர்வாகக் கட்டமைப்பு ஒன்றையே விடுதலைப்புலிகள் எதிர்பார்ப்பதாகவும், இத்தகைய கட்டமைப்பொன்றை உருவாக்கி வடக்குக்கிழக்கில் அமுல் செய்வது சாத்தியமா என்பது குறித்து தான் பல்வேறு மட்டங்களில் ஆலோசனை செய்து வருவதாகவும் குறிப்பாக இது தொடர்பாக கேம்பிரிஜ் பல்கலைக்கழக பேராசிரியரின் நிபுணத்துவ ஆலோசனைகளை தான் பெற்றுள்ளதாகவும் ஒரு புதுக்கரடியொன்றை அவிழ்த்து விட்டுள்ளார்.**

**தமிழீழ விடுதலைப்புலிகளின்** ஆய்வுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான சிறிலங்கா அரசதரப்பால் கையளிக்கபட்ட வடக்கு கிழக்குக்கான உத்தேச இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான, புலிகள் தரப்பினரின் அபிப்பிராயம் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் சர்வதேச சமூகத்தில் அதிகரித்துவரும் நிலையில் மிகவு[illegible] ரகசியமானது என்று அரசால் வர்ணிக்கப்படும் அந்த வரைபின் உள்ளடக்கம் குறித்த தகவல்கள் ஊடகங்களூடாகக் கசியத் தொடங்கியுள்ளது.

இந்தக் கசிவுகள் உண்மையானவையா அல்லது ஊகத்தினடிப்படையில் ஆனவையா என்பதை உறுதி கூறமுடியாது.

எனினும் இந்த வரைபின் உள்ளடக்கம் சிறிலங்காவின் அரசியல் யாப்பின் விதிமுறைகளுக்குட்பட்டதாகவே இருக்கும் என்று பிரதமராலும், அவரது அமைச்சரவை சகாக்களாலும், பல்வேறுகட்டங்களில்



தென்பகுதிப் பேரினவாதசக்திகளுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது தெரிந்த விடயமே.

எந்த அரசியல் யாப்பு சிறுபான்மை சமூகத்தவரின் அரசியல் உரிமைகள் தொடர்பான அபிலாஷைகள் அனைத்தையும் நிராகரிக்கும் வகையில், உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதோ அந்த அரசியல் யாப்புக்குட்பட்ட வகையில் ஒரு இடைக்கால நிர்வாகக்கட்டமைப் பொன்றைஉருவாக்குதல் பற்றிய அரசின் உத்தேச வரைபுகளைக் கொண்ட அறிக்கையே விடுதலைப் புலிகளின் மதிப்பீட்டு ஆய் வுக்கு வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் கோரியது, அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்டு சட்டத்திற்கு உட்பட்டாத இடைக்கால நிர்வாகக் [illegible]ப்பு ஒன்றேயாகும்.

[illegible]னவே கோரிக்கையின் அடிப்படை தன்மையைப் [illegible]தள்ளி விட்டே அரசு இந்த உத்தேச [illegible]னை தயாரித்துள்ளது என்பது தெ[illegible]

இந்த உத்தேச வரைபு தயாரிக் கப்பட்டு விடுதலைப்புலிகளின் மதிப்பீட்டு ஆய்வுக்கு வழங்கப்பட்ட பின்னர் அண்மையில்ஒரு நிகழ்வில் கலந்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க, சட்டத்திற்கு உட்படாத-அதாவது அரசியல் யாப்பின் விதிகளுக்குட்படாத- இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றையே விடுதலைப்புலிகள் எதிர்பார்ப்பதாகவும்,இத்தகைய கட்டமைப் பொன்றை உருவாக்கி வடக்குக் கிழக்கில் அமுல் செய்வது சாத்தியமா என்பது குறித்து தான் பல்வேறு மட்டங்களில் ஆலோசனை செய்துவருவதாகவும் குறிப்பாக இது தொடர்பாக கேம்பிரிஜ் பல்கலைக்கழக பேராசிரியரின் நிபுணத்துவ ஆலோசனைகளைத்தான் பெற்றுள்ளதாகவும் ஒரு புதுக்கரடி யொன்றை அவிழ்த்து விட் டுள்ளார்.

உண்மையில் விடுதலைப் புலிகளின் கோரிக்கையினை நியாய பூர்வமாகப் பரிசீலித்து, சமாதான நகர்வின் முன்னெடுப்பை-அமைதிப்பேச்சுவார்த்தைகளின் எதிர்காலத்தை வலுப்படுத்த அரசு ஆத்மார்த்தமான ஆர்வம் கொண்டிருக்குமேயானால், குறிப்பிட்ட உத்தேச இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசியல் யாப்புக் குட்பட்டவகையிலான ஒரு உத்தேச வரைபை உருவாக்க அவசரம் காட்டியிருக்காது.

தமிழர் தரப்பையும், சர்வதேச சமூகத்தையும் பேய்காட்டும் தன்மையுடன், பேரிவாதிகளின் மனதைத் திருப்திப்படுத்தும் இலக்குடன், ஆட்சிக்கு நிறைவேற்று அதிகார சனாதிபதியால் அச்சுறுத்தல் ஏற்படாதவகையில் ஒரு அரசியல் மூலோபாயத்தின் அடிப்படை யில்தான் இந்த உத்தேச இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பான வரைபு வரையப்பட்டுள்ளது என்பதும்தெளிவு.

நிதானமான ஒரு அரசு மிகவும் சிக்கலானதும் அதேசமயம் மிகவும் முக்கியமானதுமான ஒரு பிரச்சினையில், அவசர கோலத்தில் முடிவுகளை எடுக்காது. எனவே ரணிலின் மேற் குறிப்பிட்ட பேச்சு, இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அவரின் அரசு தயாரித்த வரைபு தொடர்பான- அதன் உள்ளடக்கம் தொடர்பான 'ஓமென்றால் பிரச்சினையில்லை... இல்லையென்றாலும் பார்க்கலாம்' என்ற அவரின் உறுதியற்ற நிலைப்பாட்டையே உணர்த்திநிற்கிறது. அவர் மேலும் அங்கு கூறுகையில் அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்ட இடைக்கால நிர்வாகம், சாத்தியமற்ற ஒன்றல்ல என்ற தொனிப்பட, சில முன்னு தாரணங்களைக்கூறி நியாயப் படுத்தவும் முனைந்துள்ளார்.

முன்னர் சிறிலங்காவில் மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்ட போது அதனை அரசியல் சட்டத்திற்குட்படாதவகையிலும் அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையிலும் மட்டுமே நடைமுறைப்படுத்தப் பட்டதாகவும் அவர் உதாரணம் காட்டியுள்ளார்.

அது அக்காலத்தில் ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் மற்றொரு அரசியல் மூலோபாயத்தின் அடிப்படையில், தமிழ் அரசியல்வாதிகளை 'பேய்காட்டும்' தந்திரோபாயத்துடன் மேற்கொள்ளபட்ட ஒன்றாகும்.

மாவட்ட சபைகளின் நிர்மாண நோக்கமே வேறு

இதேவேளை இலங்கையின் வரலாற்றில் நிர்வாகக்கட்டமைப்புச் சபைகள் இதற்கு முன்னரும்பல்வேறு சந்தர்ப்பங்களில் யாப்புக்கு அப்பாற்பட்ட நிலையில் உருவாக்கப்பட்டதாகக் கூறியுள்ள ரணில், இத்தகைய அமைப்புக்களை-அதாவது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புகளை, அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலமோ, அல்லது சுற்றறிக்கை ஒன்றின் மூலமோ நிறைவேற்றிடமுடியும் என்றும், மிகச் சாதாரணமாகக் கூறியுள்ளார்.

அவ்வளவு இலகுவான, வெறுமனே சுற்றறிக்கை ஒன்றின் மூலம் அமுல் படுத்தக்கூடியதான ஒரு அமைப்பாக இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கல் இருக்குமென்றால் ரணில் ஆதரவை வழங்குவதற்கு இத்தனை இழுத்தடிப்புகளை மேற்கொள்ளவேண்டியதன் அவசியம்தான் என்ன?

அதுவும் சமாதான நகர்வுகள் மீதான நம்பிக்கையை இத்தகைய, அரசின் இழுத்தடிப்பு மற்றும்காலம் கடத்தல் நடவடிக்கைகள் இழக்க வைத்து வரும் நிலையில் அரசு உறுதியான விரைவான நடவடிக்கைகளை எடுக்க ஏன் தயங்குகின்றது?

அமெரிக்காவுடன் ஆயுதக்கொள்வனவு தொடர்பாக ஒப்பந்தம் மேற்கொள்ள அவதிப்படும் அரசு..

(19ம்பக்கம் பார்க்க...)

# ஜுலை நினைவுகள்

**நிலாந்தன்**

ஜுலைக் கலவரம் நடந்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டது. கொழும்புமைய அரசியலில் தமிழருக்கு எதிரான கலவரப் பாரம்பரியத்தில் கடைசிக்கலவரம் அது. அந்தக் கலவரத்தை பின்னிருந்து தூண்டிய, நிறுவன மயப்படுத்திய ஜெயவர்த்தன இப்பொழுது உயிரோடு இல்லை. அவருடைய பிரதானிகளும் உயிரோடில்லை.

அப்படியொரு கலவரத்தை இனி எப்பொழுதுமே நடத்த முடியாத அளவுக்கு இலங்கைத்தீவின் அரசியல் ஒரு தலைகீழ் மாற்றத்துக்குப் போய்விட்டது. அப்படியொரு கலவரம் இனி நடந்தால் முடிவு தங்களுக்குச் சாதகமாக இருக்காது என்ற படிப்பினை இப்பொழுது சிங்களவரிடம் உண்டு. மட்டுமல்ல, அப்படியொரு கலவரம் நடந்தால் தமிழர்களின் பதிலடி எப்படியிருக்கும் என்ற பயமும் உண்டு.

இப்பொழுது ஈழப்போர் முன்னெப்பொழுதையும் விட சர்வதேசமயப்பட்டுவிட்டது. இதன் தொடக்கம் 1983 ஜுலைதான். அதுதான் இந்தியாவை இத்தீவினுள் ஈர்த்தது. அதிலிருந்து ஈழப்போர் முதற்கட்டமாக பிராந்தியமயப்பட்டது. அதன்பின் அது படிப்படியாக சர்வதேச மயப்பட்டுவிட்டது.

இப்பொழுது உலகில் உள்ள பெரும்பாலான பிரதான அரசுகள் சம்பந்தப்படும் ஒரு விவகாரமாக ஈழப்போர் மாறியிருக்கிறது.

இப்படியொரு விளைவை ஜெயவர்த்தன நிச்சயமாக ஊகித்திருக்கமாட்டார். சூதான விதத்தில் அவர் இரண்டாவது தடவை பதவிக்கு வந்து ஆறேமாதங்களில் கலவரம் வெடித்தது.

இல்லை, இதை இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால் - கலவரம் நன்கு திட்டமிடப்பட்டு நிறுவனமயப்படுத்தப்பட்டு நடாத்தப்பட்டது எனலாம். இத்தகைய அர்த்தத்தில் கூறின் அதை, நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஒருபடை நடவடிக்கை எனலாம்.

தமிழர்களுக்கு ஒரு பாடம் படிப்பிப்பது என்பது இதன் நீண்டகால நோக்கமாயிருக்கலாம். ஆனால், அதைவிட வேறு பலமான உடனடியான சமூக பொருளாதார உட்காரணிகள் இதன் பின்னால் இருந்தன.

கடந்த நூற்றாண்டின் 70களில் ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக உள்நாட்டில் உண்டாகிய அதிருப்தி, குழப்பம், ஸ்திரமின்மை போன்ற எல்லாவற்றையும் திசைதிருப்புவதும் இந்தக்கலவரத்தின் பிரதான இலக்குகளில் ஒன்று.

திறந்த பொருளாதாரத்தை நோக்கி இலங்கைத் தீவை நகர்த்தும் முயற்சிகளில் உண்டாகிய தேக்கங்கள், பின்னடைவுகள், விபரீத வளர்ச்சிகள் போன்றவற்றால் சாதாரண சிங்களச் சனங்கள் மத்தியில் குறிப்பாக கீழ் மத்திய தரவர்க்க மற்றும் அடிமட்டச் சிங்களச் சனங்களின் மத்தியில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கசப்பும் வெறுப்பும் வளர்ந்து வந்தன

யு.என்.பி.யின் திறந்த பொருளாதாரக் கொள்கையால் லாபமடைந்தது மேல்மத்தியதர வர்க்கமும், ஓரளவுக்கு மத்தியதர வர்க்கமும் ஏற்கனவே ஸ்தாபிதமாய் இருந்த முதலாளிகளும்தான். இதனால் அதிகம் சுரண்டப்பட்ட கீழ் மத்தியதரவர்க்க மற்றும் அடிமட்டச் சிங்களச் சனங்கள் கொதித்துக் கொண்டிருந்த ஒரு தருணத்தில் தின்னவேலித் தாக்குதல் நடந்தது.

ஜெயவர்த்தன இதை நன்கு பயன்படுத்தினார். கொழும்பு மைய அரசியலில் இருந்துவந்த தமிழருக்கு எதிரான கலவரப் பாரம்பரியமும் அவருக்கு வசதியாக இருந்தது. அரசுக்கு எதிரான அதிருப்தியை தமிழருக்கு எதிரானதாக நன்கு திட்டமிட்டு, அரசவளங்களைப் பாவித்து திசைதிருப்புவதில் அவர் உடனடி வெற்றிகளைப் பெற்றார். அரசோடு மோதவிருந்த சிங்களச் சனங்களை தமிழர்களோடு மோதவிட்டதில் அவர் தற்காலிகமாக வெற்றியும் பெற்றார்.

இதில் அவர் இரண்டு இலக்குகளை ஒரேயடியாக வீழ்த்த முடிந்தது.

முதலாவது, அரசுக்கு வர இருந்த ஆபத்தை தமிழர்களுக்கு எதிராக திசைதிருப்பி விட்டது.

இரண்டாவது, தனது திறந்த பொருளாதாரக் கொள்கையை வெற்றிகரமாகப் பயன்படுத்தி தென்னிலங்கையில் தம்மை ஸ்தாபித்து வந்த தமிழ் மற்றும் இந்திய வர்த்தகர்களை வீழ்த்த இந்தக் கலவரத்தைப் பயன்படுத்தியது.

எழுச்சிபெற்றுவந்த தமிழ் மற்றும் இந்தியவர்த்தகர்கள் தென்னிலங்கை நகரங்களில் மினுங்கிக் கொண்டிருந்தார்கள். தாம் வறுமையில் உழலும் போது தமிழர்கள் இப்படி தமது நகரங்களில் துருத்திக் கொண்டும் மினுங்கிக் கொண்டும் இருப்பதுஇயல்பாகவே அடிமட்டச் சிங்களச் சனங்கள் மத்தியில் ஒருவித பொறாமை உணர்ச்சியைத் தூண்ட போதுமானதாய் இருந்தது. இதையெல்லாம் ஜெயவர்த்தன மிகவும் நுட்பமாகக் கையாண்டார்.

இதன்மூலம் அரசுக்கு எதிராகப் பொங்கி வந்த சாதாரண சிங்களச் சனத்தின் கோபத்தை தமிழர்களுக்கு எதிராக தற்காலிகமாக திசைதிருப்ப அவரால் முடிந்தது.

சீனாவில் மாவோ சேதுங் செய்த கலாசாரப் புரட்சியும் இதைப் போன்றதே என்று கூறப்படுகிறது. கொமியூனிஸ்ற் கட்சிக்குள் மாவோவுக்கு எதிராக திரண்டு வந்த எதிர்ப்பலையை முறியடிக்க வேண் டியிருந்த ஒரு தருணத்தில் கட்சிக்கு எதிரான சனங்களின் அதிருப்தியை கட்சிக்குள் மாவோவுக்கு எதிராகக் காணப்பட்ட தலைவர்களுக்கு எதிராகதிசை திருப்புவதே கலாச்சாரப் புரட்சியின் மெய்யான இலக்காய் இருந்தது என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

ஜெயவர்த்தனவும் இதைத்தான் செய்தார். ஆனால் அதை அவர் இனமுரண்பாட்டுக் கூடாகக் கையாண்டார்.

ஆனால், அதை அவர் தற்காலிகமாகத்தான் செய்ய முடிந்தது.

அன்றைக்கு ஒத்திவைக்கப்பட்ட கிளர்ச்சி, ஐந்து ஆண்டுகளின் பின் வெடித்தது. அதுவும் ஜுலைக் கலவரத்தால் திடீரென்று வீங்கிய ஈழப்போருக்கு தீர்வாகக் கொண்டுவரப்பட்ட இந்தியப் படையின் பிரசன்னத்துக்கு எதிராக அந்தக் கிளர்ச்சி வெடித்தது.

அதுதான் ஜேவிபியின் இரண்டாவது கிளர்ச்சி. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசுக்கு எதிராகத் திரண்டுவந்த அதிருப்தியை ஜெயவர்த்தன தமிழர்களுக்கு எதிராகதிசை திருப்பிவிட்டார். ஆனால், ஒத்திவைக்கப்பட்ட அந்தக் கிளர்ச்சி ஐந்தாண்டுகளின் பின்பு முன்னரைவிட பயங்கரமானதாக மேலெழுந்த போது அதற்கு முன் ஜெயவர்த்தனாவால் நின்று பிடிக்க முடியவில்லை.

தமிழர்களையும் அவரால் வெல்ல முடியவில்லை. சிங்களவர்களின் அதிருப்தியையும் ஒரு கட்டத்துக்குப்பின் ஒத்திவைக்க முடியவில்லை.

83ல் அவர் தூண்டிவிட்ட கலவரங்களால் கொல்லப்பட்ட தமிழர்களை விடவும் பலமடங்கு தொகை சிங்களவர்களை சிங்களவர்களே கொன்று குவித்தார்கள். தெருக்களில் எரித்தார்கள், ஆறுகளில் வீசினார்கள்.

83 கலவரம் ஜெயவர்த்தனவைப் பொறுத்தவரை ஒரு பயங்கரமான பூமராங் ஆக மாறியது.

83ல் தமிழர்களைக் கொன்று போட்ட அதே தெருக்களில் சிங்களவர்களைச் சிங்களவர்களே கொன்றுபோடும் ஒரு காலம் ஐந்தாண்டுகளின்பின் வந்த போது ஜெயவர்த்தன மெய்யாகவே தோற்றுப்போனார்.

அவருடைய பிரதானிகளிலும் பலர் பின்நாட்களில் கொல்லப்பட்டு விட்டார்கள். ஜெயவர்த்தனவும் அதிகம் பரபரப்பின்றி இறந்தார். அவருடைய இறுதிக் கிரியைகளும் பரபரப்பின்றியே நடந்து முடிந்தன.

இப்பொழுது ஜெயவர்த்தன இல்லை ஆனால், அன்று விரட்டப்பட்ட தமிழர்கள் இன்று முன்னரைவிடப் பலமாக கொழும்பில் வந்து இறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

80களின் இறுதியில் கொழும்பில் வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் தமிழர்கள் வந்து தங்கும் சிறிய லொட்ஜ் ஒன்றின் உரிமையாளரான சிங்களவர் அடிக்கடி கூறுவார் "முன்பு தமிழர்கள் இருந்த இடங்களில் எல்லாம் இப்பொழுது முஸ்லிம்கள் வந்து விட்டார்கள். இவர்கள் எப்பொழுது அகற்றப்படுவார்களோ தெரியாது" என்று.

தமிழர்களிடமிருந்து பெற்ற வாடகையைவைத்தே சில ஆண்டுகளில் அவர் அந்த லொட்ஜ்க்குப்பின்புறத்தில் அடுக்குமாடி ஹொட்டல் ஒன்றைக் கட்டிவிட்டார். அவரும் அவரைப் போன்ற எல்லாச் சிங்களவர்களும் அப்பொழுது நம்பினார்கள், தமிழர்கள் ஒரேயடியாக அகன்று போய் விட்டார்கள் என்று. ஆனால், சுமார் பத்து ஆண்டுகால இடைவெளிக்குள் தமிழர்கள் பைநிறைய டொலர்களோடு கொழும்பில் வந்திறங்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஜெயவர்த்தன வளர்த்துவிட்ட ஈழப்போரின் அகதிகளாகி பிறதேசங்களுக்கு புகலிடம் தேடிப் போன தமிழர்கள் இப்பொழுது செல்வந்தர்களாகி ஈழப்போரின் காசுகாய்க்கும் மரங்களாகி கொழும்பில் வந்து இறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நோர்வேயில் இருந்து மட்டும் சுமார் பத்தாயிரத்துக்கும் குறையாத தமிழர்கள் வரும் குளிர்கால விடுமுறையில் இங்கு வருவதற்காக ரிக்கற் முன்பதிவு செய்திருப்பதாக ஒரு தகவல் கூறுகிறது.

முன்பு தேடப்படுவோராய் துரத்தி வேட்டையாடப்படுவோராய் இருந்த முன்நாள் போராளிகள் பலர் இன்று வெளிநாட்டுப் பிரசைகளாக கைதுசெய்யப்பட முடியாதவர்களாக ஊர்வந்து போகிறார்கள்.

அகதிகளாய்ப் போனவர்கள் காசுகாய்க்கும் மரங்களாய் மாறிவருவார்கள் என்று ஜெயவர்த்தன கற்பனை செய்திருக்கவே இடமில்லை.

அவர்கள் வெள்ளவத்தையிலும் ஏனைய இடங்களிலும் பெருந்தொகை கொடுத்து வீடுகளை வாங்குவார்கள் என்று ஜெயவர்த்தன கற்பனை செய்திருக்கவே இடமில்லை.

சிங்களவர்கள் இந்தப் புலம்பெயர்ந்த தமிழர்களின் டொலர்களோடு போட்டிபோட முடியாது தோற்றுப் போகும் ஒருகாலம் வரும் என்று ஜெயவர்த்தன கற்பனை செய்திருக்கவே இடமில்லை.

அண்மையில் டென்மார்க்கில் இருந்து வந்த ஒரு தமிழ் புத்திஜீவி சொன்னார்....கனடாத் தமிழர்கள் வெள்ளவத்தையை கனடாவில் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். வெள்ளவத்தைத் தமிழர்களோ கனடாவை வெள்ளவத்தைக்குக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள் என்று.

83ஜுலைக்குப் பின்னிருந்து கடந்த இரு தசாப்தகாலத்துள் வரலாறு ஒரு பயங்கரமான சுற்றுச் சுற்றிவிட்டு பழைய இடத்துக்கே வந்து நிற்கிறது.

டொலர்களோடு ஐரோப்பிய,அமெரிக்க, ஒஸ்ரேலியப் பிரசைகளாக அல்லது அந்த பிரசைகளின் பெற்றோராக, உற்றோராக கொழும்பில் வந்து குடியேறும் தமிழர்களை இனியொரு கலவரம் செய்து துரத்தமுடியாத ஒரு நிலை.


83ல் ஜெயவர்த்தன தமிழர்களுக்கு ஒரு பாடம்படிப்பிக்க நினைத்தார். ஆனால், பாடம்படித்தது சிங்களவர்கள் தான். தமிழர்களுக்கு பாடம்படிப்பிக்கப்போய் சிங்களவர்கள் கற்றபாடம் தான் மிகக்கொடுமையானது. சுமார் ஒருலட்சத்துக்கும் மேலான உயிர்களைக் கொடுத்தும், சுமார் பன்னிரண்டாயிரம் பேரை காணாமல்போகக் கொடுத்தும்கற்றபாடம் அது. அவர்கள் நினைத்தபடி தமிழர்களைத் துரத்தமுடியவில்லை. துரத்தப்பட்டு கடந்த 20 ஆண்டுகளிலும் படிப்படியாக ஐரோப்பியமயப்பட்டு வரும் தமிழர்கள் புதுப் பலத்துடன் கொழும்பில் வந்து இறங்கத் தொடங்கிவிட்டார்கள்.

இது ஜேர்மானிய தத்துவஞானி நீட்ஷே சொன்னதை ஞாபகப்படுத்துகிறது.

நீட்ஷே எழுதிய **யரதுஸ்ரிராவுடன் பேசுதல்** என்ற உலகப் புகழ் பெற்ற நூலில் இது வருகிறது. நீட்ஷேயின் கதாநாயகன் யரதுஸ்ரிரா ஒரு அதிமானுடன் ஒரு முறை காட்டில் அவரை விசப் பாம்பு கடித்துவிட்டது. ஆனால் யரதுஸ்ரிரா சாகவில்லை. அட்டகாசமாகச் சிரித்தார். பாம்பைப்பார்த்து அவர் சொன்னார். உன்னுடைய விசம் என்னை எதுவும் செய்யாது. நீ விசத்தை வீணாக்கிவிட்டாய். கடிவாயில் வாயைவைத்து விசத்தை உறிஞ்சி எடுத்துக் கொண்டுபோ... என்று இந்தக் கதையை யரதுஸ்ரா தனது சீடர்களுக்குச் சொன்னார். அப்பொழுது சீடர்கள் கேட்டார்கள் குருவே இதற்குப் பின்னால் இருக்கும் படிப்பினை என்ன என்று. யரதுஸ்ரா சொன்னார்.... "உனக்கு யாராவது தீமைசெய்தால் அவர்களுக்கு நன்மை செய்து கொண்டிராதே. பதிலாக அவர்கள் செய்த தீமையே உனக்கு நன்மையாக முடிந்தது என்று நிரூபித்துக் காட்டு."












விதி வரம்புகளும் முன்மாதிரிகளும், மேதையையும் கலையையும் அழித்து விடுகின்றன -வில்லியம் ஹேஸ்லிப்

# நறுக்கென...

## அமெரிக்கா-லங்கா இராணுவ ஒத்துழைப்பு; சமாதானம் தப்பிப் பிழைக்குமா?



அண்மைக்காலத்தில் சிறிலங்கா-அமெ ரிக்க உறவுகள் மிக வேகமாகவும், பகிரங்க மாகவும், பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி கண்டு வருவது கண்கூடு.

சர்ச்சைக்குரிய பல சந்தேகங்களுக்கு அது அடித்தளமிட்டு வரும் நிலையில், சிறிலங்கா மீதான அமெரிக்காவின் திடீர் கரிசனை, புவிசார் அரசியல் மற்றும் இராணுவ மூலோபாயங்களை அடிப்படையாகக் கொண்ட அபிலாஷைகளை இலக்கு வைத்தே உருவாக்கப்பட்டு வருகின்றதென்ற கருத்தும் அழுத்தம் பெறத் தொடங்கியுள்ளது.

கடந்த வாரங்களில், உயர்ரகசிய புலனாய்வு அதிகாரிகளின் கூட்டம் ஒன்றில் அமெரிக்க உளவு அமைப்பின் அதிகாரியொருவர் கலந்து கொண்டு கலந்துரையாடல் களில் பங்கு கொண்டார் என்ற செய்தி அமெரிக்க'உறவு ஊடுருவல்' செயற்பாட்டின் உச்சமான நிகழ்வாகும்.

அதையடுத்து ஆயுதக் கொள்வனவு தொடர்பாக அமெரிக்காவுடன் இலங்கை அரசு மேற்கொள்ளவுள்ள உடன்பாடு தொடர்பான செய்தி வெளியாகியது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா-சிறிலங்கா அரசுகளுக்கிடையேயான இரா ணுவ ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கும் என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் வெளிப்படையாகவே ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றைத் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தை வலியுறுத்தி வற்புறுத்திக் கொண்டு சனநாயகப் பாதுகாவலனாக தன்னைப் பிரகடனம் செய்துவரும் அமெரிக்காவின் 'போர்முகம்' இந்த நடவடிக்கைகள் மூலம் பகிரங்கமாக தெரியத்தொடங்கியுள்ளது.

அமைதியை வலியுறுத்தும் அமெரிக்கா, ஆயுதவிற்பனை, ஆயுதப்பயிற்சி, ஆயுத நடவடிக்கைகளுக்கான ஒத்திகைகள் எனத் தீவிரமான செயற்பாடுகளில் சிறிலங்காவுக்கு ஒத்துழைப்பும், ஊக்கமும் வழங்குவதானது உண்மையான சமாதானத்திற்கான அனுசரணையாளராக அமெரிக்காவை இனம்காட்டவில்லை.

மாறாக இலங்கையின்- அதாவது சிங்கள சிறிலங்காவின் இறைமைக்குள் அமெரிக்கா தனது ஆதிக்க ஆளுமையை மெல்லமெல்ல அழுத்தமாகப் பதித்து வரு வதாகவே உணரவைத்து வருவதாக தென்னாசிய அரசியல் நோக்கர்கள் வெளிப் படையாகவே கருத்துவெளியிடத் தொடங்கியுள்ளார்கள்.

போரிடும் இரு தரப்பில் ஒரு தரப்பினருக்கு ஆயுத அபிசேகம் செய்து, போரியல் மந்திரங்களை உச்சரித்து அதற்கு உருவேற்றிக் கொண்டு, சமாதான உபதேசம் செய்வது அமெரிக்காவின் மேலாதிக்க அணுகு முறைகளில் ஒன்று...

இந்தவகையில் சிறிலங்காவின் ஆளும் அரசு அமெரிக்க மந்திர தந்திர அரசியல் மற்றும் இராணுவ யுத்திகளுடன் கூடிய வியூகங்களுக்குள் மெல்ல மெல்ல சிக்கத் தொடங்கியுள்ளது.

'புத்தம் சரணம் கச்சாமி' என உரத்துக் கோசமிடுபவர்கள் இப்போது 'அமெரிக்கா சரணம் கச்சாமி' என்று கூறத்தொடங்கி விட்டார்கள்போல் தெரிகிறது. அமைதியற்ற சிறிலங்காவுக்கான உறுதியான அடித்தளத்தை அமைத்துக் கொண்டு சமாதான ராகத்தை ஆலாபனைசெய்ய நிர்ப்பந்திக்கும் அமெரிக்க அணுகுமுறை அரசுக்குத் தேவையான அவசியமாக இருக்கலாம்... ஆனால் சிறிலங்காவுக்கு... யுத்தம் சரணம் கச்சாமி!

## ஆணைக்குழு அறிக்கையும் ஆடிக்கலவரப்பதிவுகளும்...



'கறுப்புஜூலை இனக்கலவரத்துக்கு பொறுப்பேற்று அரசியல் வாதிகள் மன்னிப்புக் கோருக!'

இவ்வாறு சனாதிபதி ஆணைக்குழு கோரிக்கை 1983 இல் நடைபெற்ற இனக்கலவரத்திற்கு இருபது வருடங்களின் பின்னர் மன்னிப்புக் கோர சனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருப்பதானது ஒரு வகையில் காலம் கடந்த ஞானோதயம் என்றோ, கண்கெட்டபின் சூரிய வணக்கம் என்றோ கூறினாலும் இன்னொரு வகையில் இதனை ஒரு ஒப்புதல் வாக்குமூலம் என்று கூடக்கூறலாம்.

'1983 ஆம் ஆண்டின் கலவரங்கள் இலங்கை வரலாற்றில் கறைபடிந்த நிகழ்வுகளாகிவிட்டன. இலங்கையின் விதியையும் இச்சம்பவங்கள் மாற்றி அமைத்துவிட்டது. அப்பாவித் தமிழர்களுக்கெதிராக திட்டமிட்டு கட்டவிழ்த்து விட்ட இந்தச் செயலுக்காக நாட்டுத்தலைவர்கள் திட்டமிட்டு மன்னிப்புக்கோரவேண்டும்' -இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாம்.

நல்லது....

திட்டமிட்டுச் செய்த ஒன்று தவறாகாது. தவறை மன்னிக்கலாம்... ஆனால் சதியை ?

1958,1960,1977,1981 என ஒவ்வொரு காலகட்டத்தின் போதான தமிழ் மக்களுக் கெதிரான இனக்கலவரங்களை வடிவமைத்து நெறிப்படுத்திய அரசியல் தலைமைகள் இன்றும் கூட அரசியல் அரங்கில் இன்னமும் பேரினவாதப் போரியல் வாதம் பேசுபவர்களாக பவனிவரவே செய்கின்றனர்.

தமிழ் மக்களுக்கெதிரான இனக்கலவரங்களின் பிதாமகர்களான பண்டா, ஜே.ஆர், பிரேமதாச ஆகிய பேரினவாத சிந்தனாவாத வெறியர்களின் வாரிசுகள், பரம்பரையினர்தான் இன்னமும் சிறிலங்காவின் அரசியலைத் தீர்மானிப்பவர்களாக ஆட்சிப்பீடத்தில் உள்ளனர்.

போரா சமாதானமா? எனத் தமிழ் மக்களைக் கேட்டவர்களும், 'போர் மூலம் சமாதானம்' என யுத்தபிரகடனம் செய்தவர்களும் அவர்களே...

அவர்களை, அவர்களைச் சார்ந்தவர்களே மன்னிப்புக்கோருமாறு கூறுவது தான் வேடிக்கையானது.

1983க்குப் பின் எவ்வளவு அனர்த்தங்களை இதே சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்து விட்டுள்ளன.

இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

ஒரு ஆணைக்குழுவின் விசாரணைகளோ அதன் அறிக்கையோ, சிபார்சுப் பரிந்துரைகளோ இன்னமும் ஆத்மார்த்தமாக தம்மை மாற்றிக்கொள்வதாக சிங்க ளத்தலைமைகளின் மனதில் எதனையும் மாற்றம் கொள்ளச் செய்யப்போவது கிடையாது.

கறுப்புஜூலை நிகழ்வுகள் சிங்களப்பேரினவாதத்தின் நிரந்தர அசிங்கமான அடையாளங்கள்.

மன்னிப்புக் கோருதல் ஒருநாடகமாக இருக்கும் வரை மன்னித்தல் ஒரு சாத்தியமே இல்லை. இத்தகைய ஆணைக் குழுக்களும் அறிக்கைகளும் அவற்றின் பரிந்துரைகளும் எத்தனையோ, எப்படி மறக்கப்பட்ட, கிடப்பில் போடப்பட்ட விடயங்கள் ஆகின என்பது தமிழர்களுக்கு நன்கு தெரியும்...

சம்பிரதாயபூர்வ மன்னிப்புகள் மூலம் பாரம்பரிய கொடுமைகளை மறைக்கப் பேரினவாதிகள் முயலகின்றனர் அவ்வளவுதான்.

தவறுகள் தான் மன்னிப்புக்குரியவை குற்றங்கள் தண்டணைக்கு மட்டுமே உரியவை. அதுவும் திட்டமிட்ட குற்றங்கள் எனில்...!?

## தன் இருப்பைக் காப்பாற்றும் நகர்வுகளில் தீவிரம் காட்டும் சிறிலங்காப்பிரதமர்...!



இடைக்கால நிர்வாகத்திற்கான உத்தேச வரைபு உருவாக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் ஆய்வுக்கு வழங்கப் பட்டுள்ளது.

இந்த உத்தேசவரைபு தொடர்பாக சனாதிபதியுடன் கலந்தாலோசனை செய்யப்படவில்லை என்ற எதிர்க்கட்சிகளின் முறைப்பாடு சற்று வன்மத்துடனேயே வெளிப்படுத்தப் பட்டுள்ளநிலையில், அந்தவரைபின் முழுமையான உள்ள டக்கமும்,அதன் அதிகாரவலுவும் இன்னமும் தெளிவாகப் பகிரங்கமாகவில்லை.

இந்த வரைபு எதனைக் கொண்டிருந்தாலும் அதனை நிறைவேற்ற அதிகார சனாதிபதியோ பௌத்தமத பீடங்களின் அதிபதிகளோ அதனை அங்கீகரிப்பார்களா மாட்டார்களா என்பது வேறுவிடயம்.

அது தமிழ்மக்களின்- விடுதலைப்புலிகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்றதாக இருக்கிறதா என்பதே பிரதான கேள்வி

அப்படியே அமைந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் பல்வேறுபட்டதாகும்.

வரைபை ஒருவாறு, ஒருவகையில் உருவாக்கிவிட்டார்கள். ஆனால் எந்த வரைபு கூறும் இடைக்கலாநிர்வாகக் கட்டமைப்பை எவ்வாறு உருவாக்கப்போகிறார்கள்?

இது பலதரப்பினராலும் கேட்கப்படும் வினா இதுவே ஆகும்.

உண்மையில் அரசிற்கே இன்னமும் இக்கேள்விக்கான தெளிவான உறுதி யான பதில் தெரியாது.

'அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலமோ அல்லது சுற்றறிக்கை ஒன்றின் மூலமோ இடைக்கால நிர்வாகக்கட்டமைப்புக்கான தீர்மானத்தை நிறைவேற்றலாம்' என்று சிறிலங்காப்பிரதமர் ரணில் கூறினாலும் கூட 'அதுசாத்தியமாகும் சந்தேகம் அவருக்கும் இருக்கவே செய்கிறது.

'சமாதானம் இன்னும் ஏற்படவில்லை... போர்நிறுத்தம் மட்டும்தான் இந்த ஒன்றரை வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.' என்று கூறும்ரணில், ' போர்நிறுத் தம் சமாதானமல்ல.' என்ற கருத்தை வலியுறுத்துபவராகவே உள்ளார்.

அவரது கருத்தில் இன்னொரு தொனியும் ஒலிக்கவே செய்கிறது. அதாவது 'போர் நிறுத்தப்பட்டுள்ளதே அன்றி போர் முடிந்துவிடவில்லை என்பதே அதுவாகும். இந்தக் கருத்து நோக்கில் ரணிலைப்பார்க்கும் போது அவரது அரசியல் தந்திரோபாய உத்திகள் தனது பதவிக்காலத்தை - குறைத்தது. சனாதிபதியின் ஆட்சிக்காலம் முடியும் வரையாவது சிக்கலின்றி கடத்தும்நகர்வுகளை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்படுவதாக தெரிகிறது.

எதனையும் தெளிவாகவும், உறுதியாகவும் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் தெரிவிக்கும் நேர்மை, நேர்மையான துணிச்சல் அரசிடம் இன்னமும் இல்லை என்பதையே ரணிலின் பேச்சுக் காட்டுகிறது...


போர்நிறுத்தம் சமாதானம் ஆகாது எனத்தெரிந்து கொண்டும், அதனைச் சமாதானத்திற்கான தளமாகமாற்ற இந்த ஒன்றரை ஆண்டு காலமும் தீர்க்கமான ஒன் றையும் மேற்கொள்ளாது சமாளித்து காலம் கடத்துவது என்பது வெறும் பதவியைக்காப் பாற்றும் உத்தி மட்டுமேயாகும்.

அமெரிக்காவுடன் இராணுவ உறவுகளை மேம்படுத்துவதிலும் இராணுவ உபகரணங் களை கொள்வனவு செய்வதிலும் அரசுகாட்டும் வேகமும் தீவிரமும் ' சமாதான ' இலக்கி லிருந்து அதுதிசைமாறுகிறது என்ற சந்தேகத்தையே வலுப்படுத்துகிறது...

இது பேரினவாதப்பண்பின் வெளிப்பாடேயாகும்.

செங்குட்டுவன்

## மதவடி மயிலர்



**செய்தி :** *சர்வாதிகாரி இடிஅமீன் 'கோமா' நிலைக் குள்ளானார்...*

**மயிலா :** இடி...இடி... யென்று சிரித்துக்கொண்டே இரக்கமற்ற ஆட்சியை நடாத்திய கோமான் 'கோமா' நிலையில் குடங்கிப் போனார்... சர்வாதிகாரியின் சர்வாங்கமும் அடங்கிப் போட்டுது எண்டு சொல்லலாம் தானேபாருங்கோ.

**செய்தி :** *இடைக்கால நிர்வாக திட்ட வரைபு நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து... சிகல உறு மயவின் சம்பிக்கரணவக்க கண்டனம்...*

**மயிலர் :** இடைக்கால நிர்வாக திட்ட வரைபுக்கே இந்தக்குதிகுதிக்கிறார்... நிரந்தரத்தீவுத்திட்டம் ஒன்று குறித்த பேச்சுவந்தால் உலகின் பாதுகாப்புக்கே ஆபத்தென்று உளரத்தொடங் கீடுவார்போல... பேரினவாதம் அமைதியை ஒருபோதும் விரும்பாது பாருங்கோ.

**செய்தி :** *வீதியின் நடுப்பகுதிவரை இராணுவக்காவலரண் விஸ்தரிப்பு... விபத்து அபாயம் அதிகரிப்பு...*

**மயிலர் :** வீதியின் நடுவிலை குந்தியிருந்து விண்ணாணம் பார்க்கப்போகினம் போலை... உயர்பாதுகாப்பு வலயத்தில உயிர்பாதுகாப்பிற்கு உத்தரவாத மில்லைப்பாருங்கோ...

**செய்தி :** *பொதுசன ஐக்கிய முன்னணி விரைவில் செயலிழக்கும்...*

**மயிலர் :** ஓமோம்... சிங்கள இனவாத 'தேசபக்தர்கள்' முன்னணி அமைத்தால்... அது பொதுசன ஐக்கியத்தை கவனிக்காது பாருங்கோ... ஒவ்வொரு முன்னணியின் பின்னணியிலும் கன விஷயம் இருக்கு... தேசபக்தர்கள் என்ற பேரில தேசவிரோதிகள் முன்னணி அமைக்கிறதை பொதுசனம் ஐக்கியப்படாது பார்த்துக் கொண்டிருந்தால் ஆபத்துப் பாருங்கோ... இது சிங்களச்சனத்துக்குதான்சொல்லுறன்.



# அமைதி காக்கும் ஒரு மோதல்

**சிறி.இந்திரகுமார்**

இன்னும் கண்காணிப்புக் குழுவால் கடலில் மோதல் ஏற்படக் கூடிய சூழ்நிலையை தவிர்க்க முடியவில்லை.

அல்லது கண்காணிப்புக் குழுவால் இன்னும் அரசிற்கும் புலிகளுக்கும் கடலில் ஏற்படுகின்ற முறுகல் நிலையை தணிக்கக்கூடிய எந்தவொரு உடன்பாட்டிற்குள்ளும் கொண்டுவர முடியாமலிருக்கிறது.

இதற்குள் தான் எந்தவொரு கணமும் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் யுத்தத்திற்கான தூண்டல் பொறியாக இழுக்கிறது எனலாம்.

கடலில் அரசிற்கும் புலிகளிற்குமிடையில் ஏற்பட்டபாரதூரமான விவகாரமாக மூன்று சம்பவங்கள் நடந்து விட்டன.

ஒன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று போராளிகளை புலிகள் இழந்துள்ளார்கள். இரண்டாவது முல்லைத்தீவிலிருந்து இருநூற்று நாற்பது கடல்மைல்களுக்குஅப்பால் புலிகளின் 'பாவுரா' கப்பல் மூழ்கடிப்பில் பதினொரு போராளிகளை இழந்துள்ளார்கள்.

மூன்றாவதாகவும் முல்லைத்தீவுக் கடலுக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் 'சோஷின்' கப்பல் மூழ்கடிப்பில் பன்னிரெண்டு போராளிகளைபுலிகள் இழந்துள்ளார்கள்.

ஆக கண்காணிப்புக் குழுவின் பணி ஆரம்பித்த பின்னர் புலிகள் இருபத்தாறு போராளிகளை இழந்துள்ளனர்.

அதிலும் இந்த இருபத்தாறு போராளிகளில் பலர் புலிகளின் நீண்டகால கடல்சார் அனுபவங்களைப் பெற்றவர்கள்.

ஆயினும் இன்னும் புலிகள் கடலிலும் அமைதிகாக்கின்றனர்.

இது எதுவரைநீளும் என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை இந்த அமைதிநீளும் வரை தான் இது வரைகட்டிக்காத்த யுத்த நிறுத்தமும் நீளும்.

உடன்படிக்கையில் கடல் தொடர்பாக சரியாக வரையறுக்கப்படாதிருக்கும் நிலையில்.

இதுவரையில் இரண்டு தரப்பையும் ஒரு கடல் வரையறைக்குள் கொண்டுவரப்படாதிருக்கும் நிலையில்.

இன்னும் கடலில் ஒரு போர் மூளாதிருக்கிறதே தவிர. ஒரு போர் மூளலாம் என்ற நிலையைக் கொண்டிருக்கிறது.

எனவே மூன்றாம் ஈழப் போரிற்கு பின்பு நிறுத்தப்பட்ட யுத்தம் கடலிற்குள்ளிருந்துதான் எழ வேண்டும் என்றிருக்கிறது பொலத் தெரிகிறது.

ஏனென்றால் இன்னும் யதார்த்தத்தை புரிந்து கொண்டபோதும் ஒரு இணக்கத்திற்கு வரமுடியாதவர்களாக அரசதரப்பு இருக்கிறது.

அதாவது சிறிலங்காவின் கடற்படையினர் ·இருக்கின்றனர்.

முன்னாள் கண்காணிப்புக் குழுத்தலைவராக இருந்த ரொன் புருவ்ஹொவ்டேக்கு பியாவிடையளித்து. புதிய தலைவராக பதவியேற்ற ரெலிவ்சனுக்கு கடல் தாக்குதல் ஒன்றின் மூலம் தான் சிறிலங்கா கடற்படையினர் வரவேற்பளித்தனர்.

அதனால்தான் என்னவோ இந்தப்பிரச்சினை இன்றுவரை நீள்கிறது.

இதில் முக்கிமான பிரச்சினையென்னவென்றால் தரையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை ஏற்றுக் கொள்பவர்களால் கடலில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்தை ஏற்றுக் கொள்ளமுடியாதி ருப்பது தான்.

இந்த விவகாரம் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும் ஒரு புதிய அனுபவ விவகாரமாகத்தான் இருக்கிறது.

எப்படியென்றால் ஒரு மரபு வழி அரசிற்கு எதிராக போராடும் ஒருவிடுதலைஅமைப்பு உருவாக்கி வைத்திருக் கும் ஒரு கடற்படையும்

முன்னுதாரணங்களாகவோ அனுபவரீதியாகவோ கொள்ளத்தக்கதாக உலகில் எந்த விடுதலை அமைப்புகளிடமோ போராடி வென்று அரசமைத் தவர்களிடமோ இத்தகைய ஒரு கடற்படை இல்லாமல் இருந்தது அல்லது இருப்பது.

இதுவே ஒரு புதிய அனுபவமாக கண்தாணிப்புக் குழுவிற்கு இருப்பது. அதிகம் கடற்புலிகளின் பலத்தை புரிந்து கொண்டும் கடற்புலிகளின் கடலாதிக்கத்தை தெரிந்து கொண்டும் ஒரு உடன்பாட்டிற்கு கடற்படையினர் வர மறுப்பது கண்காணிப்புக் குழு விற்கு ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினையாக இருக்கிறது.

இந்த பிரச்சனையை தீர்க்கக் கூடியதாக கண்காணிப்புக் குழுவினரால் முன்மொழியப்பட்டவையெல்லாம் சிறிலங்கா கடற்படையினரால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இத்தகைய நிலையில் கடலில் ஒரு பாரதூரமான வொரு நிலை தோன்றலாம் என கண்காணிப்புக்குழுவினரும் எதிர்பார்க்கின்றனர்.


இதனைத்தான் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இறுதியாக மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் கப்பல் விவகாரம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் பரிந்துரைத்துள்ளனர்.

அதாவது அரசும் புலிகளும் கடலில் இடம்பெறும் மோதல் களைத் தவிர்ப்பதற்காக இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் விரைவில் உடன்படிக்கை ஒன்றை எட்டவேண்டும் என்று கேட்டுள்ளனர்.

இதுநிலைமை மோசமாகிவிடக் கூடாது என்பதனை அரசிற்கும் உணர்த்தும் வகையி லானதே.

கடற்புலிகளின் கடற் கட்டுப் பிரதேசத்தை புரிந்து கொள்வதற்கு ஓயாதஅலைகள் ஒன்று இராணுவ நடவடிக்கையின் பின்னர் எந்தவொரு தரையிறக்கல் நடவடிக்கையும் யுத்தம் நிறுத்தப்படும் வரைசிறிலங்கா கடற் படையினருக்கு சாத்திய மாகவில்லை என்பதி லிருந்தும்.

நடந்த எல்லா கடற் சண்டைகளும்



சமர்களும் ஆழ்கடற் சமர்களாகவே நடந்தன என்பதிலிருந்தும் விளங்கிக்கொள்ளலாம்.

ஆழ்கடலைத்தாண்டி கடற்பிரதேசங்களிற்குள் சிறிலங்கா கடற்படையினரை கடற்புலிகளின் போராற்றல் அனுமதித்ததேயில்லை.

இந்தநிலையில் சிறிலங்கா படைத்தரப்பை வலுப்படுத்தும் வகையில் புதிய ஆயுதக் கொள்வனவிற்கும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படுகின்றன.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளில் இவ் ஆயுதக் கொள்வனவிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும்.

இதைவிட சிறிலங்கா கடற்படையினரை வலுப்படுத்த இந்தியாவின் உதவிகளும் பெற இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் கடற்புலிகளின் சம வலுவையும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் கடற் பிரதேசத்தையும் சிறிலங்கா கடற் படையினர் ஏற்க மறுதலிப்பது கடற் பிராந்தியம் சமாதான நகர்வுகளிற்கு பாரிய பங்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

அத்தோடு நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றிற்கு எந்த வொரு நிலையிலும் விழிவகை செய்யப் போவதில்லை என்பதை காட்டும்.

இதற்கிடையில் ஓமந்தை சோதனைச் சாவடியூடாக செல்லும் பிரயாணிகளிடம் சிறிலங்கா புலனாய்வுத் துறையைச் சார்ந்த ஒருவர் கேட்டாராம்.

"கடலல புலிகளின் இரண்டு கப்பல்களை நாங்கள் தாக்கி அழிச்சாச்சு ஏன் இன்னும் புலிகள் சண்டை தொடங்கவில்லை... புலிகள் சண்டை தொடங் கமாட்டார்களா?" என்று

நாம் இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம் சண்டையொன்றை எப்படி தொடங்கலாம் என்ற வகையிலேயே சிறிலங்காப் படைத்தரப்பு எல்லா நடவடிக்கைகளையும் செய்கிறது என்பதை.

இந்நேரம் கடந்த வாரம் வன்னிவந்து சென்ற கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலிவ்சன் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை அவர்களை சந்தித்துச் சென்றுள்ளார்.

கொழும்பு சென்ற அவர் பிரதமர் ரணிலையும் சந்தித்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என கேட்டுள்ளார். இதனை ரணில் செய்வாரா? அல்லது ரணிலால் இதனை செய்யமுடியுமா? அப்படி ரணிலால் முடியுமாயின் கடலில் ஏற் படக்கூடிய ஒரு பாரிய முறுகல் நிலையை தவிர்க்கவும் முடியும். •

## ஒரு பயணியின் குறிப்பு



# "வன்னியில் இருந்தா...?"

அன்று வெள்ளிக்கிழமை.

வீடு செல்வதற்காக கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் காத்திருந்தேன். காலை 9.00 மணிக்குப் பயணம் ஆரம்பித்தது.

மென்சூடேறிய வெட்ட வெளிக் காற்று ஓடிக்கொண்டிருந்தது சொகுசு பஸ்ஸினுள் புகுந்து உடலையும் உள்ளத்தையும் வருடிச் சென்று கொண்டிருந்தது.

மாதத்தில் ஒருமுறை வீட்டிற்குச் சென்று வருவதால், வீட்டு எண்ணங்கள் மெல்லியதான கனவு அலையில் மிதந்து நகர்ந்தன. பேருந்து முகமாலை தடைமுகாமை அடைந்தது.

மூட்டை முடிச்சுக்களுடன் எமது மக்கள் கூட்டம் வரிசையிட்டுச்செல்ல நானும் மெதுவாக இணைந்து கொண்டேன். எமது மண்ணுக்கல்ல, எனது வீட்டிற்கே செல்ல எத்தனை தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது என்பதை நினைக்க நெஞ்சம் கனத்தது. போதாக் குறைக்கு, "பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளின் எதிர்காலக் கல்வியைப் பாழாக்காதீர்கள்" என்ற பெரிய எழுத்து வாசகங்கள், எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல இருந்தது.

பொருமிய மனத்தோடு பருத்தித்துறை பேருந்தை அடைந்தபோது, தூரத்துப்பார்வைக்கு ஆட்கள் இல்லாதது போலஇருந்தாலும் உள்ளே ஏறிப்பார்த்த போது எல்லா இருக்கைகளிலும் ஒவ்வொரு பார்சல்கள், பைகள் உரிமைபேசின. பின்பக்கமாக எனக்கு ஒரு ஆசனம் காத்திருந்தது போலக் கிடைத்தது.

எனக்கு அருகில் ஒரு வயோதிபர், கிட்டத்தட்ட 55 வயதிருக்கும், வெள்ளை வேட்டி, சேட், வெள்ளைத்தொப்பி அணிந்திருந்தார். கையில் 'ஈழநாதம்' பத்திரிகை வரிகளை அவரது கூசிய கண்கள் தடவிக் கொண்டிருந்தன.

அந்த வயோதிபருக்குத் தொந்தரவு கொடுக்காமல் பேசாமல் இருந்து கொண்டேன். சாரதி ஏறிக் கொண்டதும் பைகளும், பார்சல்களும் உயிர் பெற்று எழுந்தன போன்று உலவின. நடத்துநர் மணிக்கயிற்றை இழுத்ததும் பேருந்து உறுமிக் கொண்டு நகர்ந்தது.

"ரிக்கற் எடுக்காதவை எடுத்துக் கொள்ளுங்கோ"

நடத்துநர் தனக்கே உரிய பாணியில் நாலைந்து தடவை உரத்துக்கூறிக் கொண்டு எனது முகத்தைப் பார்த்து, "ஐயோ எவடம்",

"பருத்தித்துறை"

"எத்தினை?"

"ஒண்டு"

வயோதிபர் என்னைப் பார்த்தார். பருத்துறை எவடம்?"

"காளி கோவிலடி-நீங்கள்?"

"நான் தும்பளை"

"அப்ப கிட்டத்தான்" நான் கூறியபோது அவர் மெல்லச் சிரித்தார். "ஓமோம்!" "தும்பளையிலை 'றவுண்டப்' எண்டு பேப்பரிலை கிடக்கு. என்ன நாசமோ தெரியேல்லை" சலிப்போடு சொனனவர் மீண்டும் பத்திரி கையைத் தடவினார்.

பேருந்து கொடிகாமத்தைக்கடந்து கொண்டிருந்தது.

எங்களுக்குப்பின் ஆசனத்தில் இரண்டு யுவதிகள். ஒரேகலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். கணிப்பீடுக ளைப் பற்றிக் கதைத்துக் கொண்டதிலிருந்து அவர்களை ஆசிரியைகள் எனக்கணிப்பிடக் கூடியதாக இருந்தது. இடையிடையே படக்கதைகளும் கலந்து வந்தன.

வயோதிபர் ஈழநாதத்தை மடிக்கவும், பின்புறத்திலிருந்து "ஐயா ஒருக்காப் பேப்பரைத்தாறீங்களா?" என்று கேட்கவும் சரியாக இருந்தது. ஈழநாதம் கைமாறியது. அன்று வெள்ளிநாதமாகையால் அவர் களையும் சுண்டியிழுத்தது போலும்.

வயோதிபரின் கண்கள் வலப் பக்கமாகத்திரும்பின. கண்களுக்குத் தெரியும் தூரத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் "மாவீரர்துயிலும்இல்லம்"காட்சியளித்தது. வயோதிபரின் கைகள் தானாகவே தலையிலிருந்த தொப்பியைக் கழற்றிக் கொண்டன. எனது உள்ளம் அப்படியே நைந்து போனது. இந்த வயதிலும் இப்படி ஒரு உணர்வு ஊன்றப்பட்டுள்ளதா?எனது தலையில் தொப்பி இல்லாததால் எனக்குத் தோல்வியில்லாமல் போனது.

பின்னாலிருந்து, ஈழநாதத்தை வாசித்துக் கொண்டிருந்தவரின் வாயிலிருந்து "ஐயா! வன்னியிலை இருந்தாவாறீங்கள்" ஆச்சரியமான வார்த்தைகள் வழுக்கின.

எனக்குச் சந்தேகம் எழுந்தது. ஈழநாதம் கொண்டு வந்ததாலா? தலையிலிருந்து தொப்பியைக் கழற்றியதினாலா? எதனால்?

மாவன்னா

# படைப்புகள் மாற வேண்டுமென்றால்; விமர்சனப்பார்வை வேண்டும்

## கற்கண்டு அவர்களுடனான செவ்வி

1993ம் ஆண்டு "புலிகளின் குரல்'' வானொலியில் ஒரு நிகழ்ச்சித்தயாரிப்பின் போதுதான் இவருடனான அறிமுகம் ஏற்பட்டது.இவர் ஒரு வானொலி, அரங்கக்கலைஞர். குறும்பட நடிகர் என்ற பரிமாணங்களோடு சில சிறு கதைகளையும் எழுதியுள்ளார். ''விடுதலை'' சார்ந்ததான இவரின் கலைப்பயணத்தடங்களில் இன்று இவரின் மகள்கள் "சிவரதி" ஒரு சிறந்த பாடகியாகவும் "செம்பருத்தி" படைப்பாளியாகவும் கால்களைப் பதித்துகொண்டிருக்கிறார்கள். இவருடன் பகிர்ந்து கொண்டதிலிருந்து சில...

எனது ஐயாவுக்கு கலையென்றால் என்ன வென்று தெரியாது. கலைகளில் ஈடுபாடுகளுமில்லை. ஆனால், "சின்னக்குட்டி ஆத்தை" யென்றால் காணும்; சாப்பாடும் வேண்டாம். அண்ணாவியார் சிதம்பரியார் "அல்வாய் வடக்கு" வீரபத்திரர் கோயிலடியில் காவோலைகளைக்கொளுத்திவிட்டு கூத்துக்கள் போடுவார். அக்கூத்துக்களில்வரும் கதைகளை.... பாடல்களை... ஆத்தை எனக்குச் சொல்லுவா பாடிக் காட்டுவா நான் விரும்பிக் கேட்டுக் கொண்டிருப்பேன்.

அண்ணாவியாருக்கு ஊரிலை நல்ல மதிப்பு. அப்ப எனக்கு ஏழெட்டு வயதிருக்கும். அவரைப்பற்றி, அவரின் கூத்துக் களைப்பற்றி "ஆத்தை" எனக்குச் சொல்லேக்கை அவரைப் போலை நானும் வரவேணுமென்ட எண்ணம் அந்தப்பராயத்திலையே எனக்கு வந்து விட்டது.

மூன்றாம் நான்காம் வகுப்புக்கள் படிக்கேக்கை, பள்ளிக் குடத்திலை "துருபன்" "பக்தமார்க்கண்டேயர்" போன்ற நாடகங்களில் நடித்தேன். நடிக்கும் போதே இன்னும் பல நாடகங்களில் நடிக்க வேணும் என்ற எண்ணங்கள் வளர்ந்தபடி இருந்தன.

எனது பதின்மூன்றாவது வயதில் ஊர் இளைஞர்கள் எல்லோரும் சேர்ந்து "மந்திரியின் சூழ்ச்சி'' என்ற அரச நாடகத்தையும் "பிரேமராஜன்" "புரட்சிப்பெண்", "பாட்டாளியின் காதலி" போன்ற சமூக நாடகங்களையும்மேடையேற்றினார்கள். அந்த நாடகங்களில் நான் பெண்வேடங்கள்ஏற்று நடித்தேன்.

அந்தக்காலங்களில் நாடகங்களை நெறிப்படுத்துபவர்களுக்கு பாடல்கள் எழுதக் கூடிய புலமைகள், இசை ஞானம், எதுவும் கிடையாது. அந்தக்காலங்களில் பிரபல்யமான சினிமாப் பாடல்களையே நாடகங்களில் சேர்ப்பார்கள். கூடுதலாக "தேன் உண்ணும் வண்டு- மாமலரைக் கண்டு'' என்ற பாடலையே எல்லா நாடகங்களிலும் காணக்கூடியதாகயிருக்கும். இதனால் சில சலிப்புத்தன்மைகளும் ஏற்படும். எனது பதினெட்டாவது வயதில் வேலை காரணமாக கொழும்புக்குப் போனேன். 22 வயது வரை கொழும்பு வாழ்வில் நிறையப் புத்தகங்களை வாசித்தேன். பார்த்தசாரதி, அகிலன், சாண்டிலியன், கண்ணதாசன், கல்கி, செகசிற்பியன், ராஜேந்திரன், மு. வரதராஜன் போன்றோரின் கதைகளையே விரும்பிப்படிப்பது வழக்கம். இவர்களின் கதைகளை படித்துப் படித்தே சிறுகதைகளையும் எழுதினேன்.

அப்ப கதைகளை எழுதினால் காணும், கதைகளில் காத்திரம் பார்க்க மாட்டார்கள். ஆசிரியருக்கு அறிமுகமானவர். ஒருவர் இருந்தால் காணும் அவருக்கு லஞ்சமாக ஏதாவது கொடுத்தால்காணும், உடனே கதை பிரசுரமாகும்.

எனது முதலாவது கதையையும் அப்படித்தான் செய்தேன். எனது கதை பிரசுரமாகவேணும் என்பதற்காக எனது நண்பர் ஒருவரின் உதவியோடு ஒரு சாராயப் போத்தலோடுதான் எனது கதை "திருமலைக் குமரன்" என்ற பெயரில் பிரசுரமானது.

அப்ப நான் எழுதிய கதைகளும், அப்போதைய நடை உள்ளடக்கம், உவமைகளோடான ஆரம்பங்கள், வெறும் சம்பவப் படையல்களாகத்தான் இன்றைய கதைகளும் இருக்கின்றன. இந்தக் கால நீட்சியில்,சிறுகதைகளின் அமைப்புகளில், நகர்வுகளில், மொழிகளில் பெரும்பாலான சிறுகதைகள் மாற்றமடையவில்லை.

பாத்திரங்களின் பெயர்களில் கூட, சரசு பாக்கியம், கந்தையா, கமலம் என்ற பெயர் களைத்தான் இப்பவும் வைக்கின்றார்கள். இன்றைய சிறுகதைகள் வளர்ச்சிப் படிகளில் ஏறாமல் தனித்து நிற்பதனால் தான் எமது பெரும்பாலான சிறுகதைகள் பேசப் படாத சிறுகதைகளாகவே இருக்கின்றன.

எனது மகள் "செம்பருத்தி'' கூட சிறுகதைகளை எழுதி வருகின்றாள். மகளுக்கும் நான் "மாற்றம் வேணும்- மாற்றம் வேணும்'' என்று அடிக்கடி கூறுவதுண்டு.

படைப்புகளில் மாற்றம் வேணுமென்றால், இங்கே சரியான விமர்சனப்பார்வை வேணும். சில விமர்சன அரங்குகள் கூட சார்பு நிலைகளில் தான் இப்பவும் நடக்கின்றன. இந்த சார்பு நிலைப் போக்குகளால் தான் இப்பவும் எங்கள் படைப்புகளில் பெரும் பாலானவை சரிந்தவைகளாகவே இருக்கின்றன.

சிறுகதைகள் எழுதிய அந்தக் காலப்பகுதியில் திருகோணமலையிலை கலைஞர் ''கருணாநிதியின் இழந்த காதல்'' எனும் நாடகத்தில் நடிகர் M.R ராதா நடித்த அதே "அழகப்பன்" எனும் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்தேன். அந்த நாடகம் பலரின் பாராட்டைப் பெற்றது.

''தம்பலகாமத்தில் அந்த நாடகத்தைப் போட்ட போது எனது மனைவியாக நடித்த "ரூபி" என்ற நடிகையை நான் துன்புறுத்திக் கொண்டிருந்த வேளை அதைப் பார்த்து சகிக்க முடியாத தாயொருத்தி எழும்பிடேய் நாயே.... இனியும் அவள் மேலை தொட்டியென்றால் உன்னைக்கொல்லுவேன்" என்று கூறிவிட்டு கல்லால் எறிந்தார். அந்தக்கல்லு எனது முதுகில் வந்து விழுந்தது. உண்மையில் அந்த சம்பவமானது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஏனென்றால், எனக்குரிய அந்தப் பாத்திரத்தை நான் சரியாகச் செய்துள்ளேன். அந்தச் சம்பவத்தை என்னால் எப்பவும் மறக்கமுடியாது.



**பாத்திரங்களின் பெயர்களில் கூட, சரசு பாக்கியம், கந்தையா, கமலம் என்ற பெயர் களைத்தான் இப்பவும் வைக்கின்றார்கள். இன்றைய சிறுகதைகள் வளர்ச்சிப் படிகளில் ஏறாமல் தனித்து நிற்பதனால் தான் எமது பெரும்பாலான சிறுகதைகள் பேசப்படாத சிறுகதைகளா கவே இருக்கின்றன.**

### கருணைரவி

அந்தக் காலப்பகுதியில் தான் " சொர்க்கமும் நரகமும்" எனும் நாடகத்தை நானே எழுதி நெறிப்படுத்தினேன். பின் 62 காலப்பகுதியில் ''நீதி யெங்கே...?" என்ற நாடகத்தை எனது ஊரில் வந்து மேடையேற்றினேன்.

அதுக்குப்பிறகு எனது திருமணம் நடந்தது. பொருளாதார முன்னேற்றத்திற்காக நாடகத்தை தற்காலிகமாக நிறுத்தினேன்.

77 கலவரத்தின் பின் நான் அரியாலையில் வந்து குடியேறினேன். அரியாலையிலுள்ள பல சனசமூகநிலையங்கள் கலை நிகழ்ச்சிகள் செய்வதுண்டு, என்னையும் தங்களோடு இணைத்தார்கள். ''புயல்'' எனும் நாடகத்தை நானே இயக்கிநவீன முறையில் மேடையேற்றினேன்.

85 இற்குப் பிறகு ந.கிருஸ்ணசிங்கம் அவர்களின் நெறியாள்கையில் "வீடுகள் விழிக்கின்றன", "வர்க்கம் விரிகின்றது", "போர்க்குயில்" ஆகிய நாடகங்களையும் "உறவுகள்" எனும் நாடகத்தை நானே எழுதி நெறியாள்கை செய்துள்ளேன். அரியாலை சனசமூக நிலையத்தில் சுதேசியக் கொண்டாட்டத்துக்கு தற்போது G.A ஆக இருக்கும் பத்மநாதன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ''பண்டார வன்னியன்" இசை நாடகத்தில் நடித்தேன். இந்த நாடகத்தை கவிஞர் ஐயாத்துரை அவர்கள் எழுதியிருந்தார். இசைக்கலைஞர் ரத்தினம் அவர்கள் இசையமைத்தார். இதில் பண்டார வன்னியனாக நானே நடித்தேன். இந்த நாடகம் பல இடங்களில் மேடை யேற்றப்பட்டது.

நான் 50 இதற்குப்பிறகு நடித்த சமூக நாடகங்களில் பூரண கலையறிவுள்ளவர்களால் அரங்கேற்றப்பட்ட நாடகங்களாக நான் கருதவில்லை. ஏனென்றால், நாடகத்தில் போடப்படும் பாடல்கள் அனைத்தும் சினிமாப்பாடல்களாகவே இருக்கின்றன. அதே பாணியில்தான் நாடகத்தையும் எழுதுவார்கள். சில வேளைகளில் அந்தச் சினிமாவையே எழுதி நடிப்பார்கள். நடிப்பைக் கூடியே அதே நடிகர்களின் சாயல்களிலே நடிப்பார்கள். தங்கள் சொந்தக்கலையனுபவத்தை வைத்து சுயமாக அவர்கள் எதையும் செய்யவில்லை.

80 இற்குப்பிறகு சமூக நாடகங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டது. 85 இன் பின்காலத்தின் தேவையறிந்து சுயமான எழுத்தாக்கங்கள், பாடல்கள், இசைகள் என்பன ஆக்கப்பட்டு ஒரு நவீன வடிவம் கொண்டு வரப்பட்டது.

இசை நாடகங்களைப் பொறுத்தவரை சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய, மெட்டுக்கள் அமைத்து எப்படி பாடி ஆடி அன்றைய கலைஞர்கள் நடித்தார்களோ அதே போலத்தான் இப்போதும் எந்த வளர்ச்சிகளுமில்லாது, எந்த மாற்றங்களுமில்லாது, எந்தத்தேடல்களுமில்லாது இன்றுவரையும் கலைஞர்கள் செய்து வருகிறார்கள். ஆகவே அந்த நாடகங்களை இன்றைய தலைமுறைகள் ரசிப்பது கிடையாது. அந்த இசை நாடகங்களை நவீனமயப்படுத்தினால் ஒரு வேளை இன்றைய தலைமுறையினர் அதை ரசிப்பதாயிருக்கும்.

எதைவைத்துச்சொல்கின்றேன் என்றால் பாடல்களை குறைத்து வசனங்களை அமைத்து நடிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து நவீன மேடைய லங்காரங்கள், காண்பியங்கள் என அமைத்தலேயாகும்.

நாட்டுக்கூத்துகள் (தென்மோடி, வடமோடி) காத்தவராஜன் போன்ற மரபுவழிக் கூத்துகள் எங்கள் கலையடையாளங்கள் அவைகளை மாற்றமுடியாது. சிங்களச் சமூகத்தின ரின் மரபு வழியான " கண்டி நடனத்தை" பொக்கிஷமாக அவர்கள் இப்போதும் காத்துவருகின்றார்கள். அதே போலத்தான் நாங்களும் எங்கள் கூத்துகளை கட்டிக்காத்து வளர்க்கவேணும்.

நாடகங்கள் என்றில்லாமல் சின்னத்திரைப்படங்களையும் தயாரித்து, சின்னத்திரைப் படங்களிலும் நடித்திருக்கின்றேன்.

87ம்ஆண்டு திரு. கேசவராஜா அவர்கள் இயக்கிய " தாயகமே தாகம்", ஓவியர் க.ராஜன் தயாரித்த " அக்கினிக்குஞ்சு ", கேசவராஜா எழுதிய " சுகிர்" அவர்கள் இயக்கிய " மரணம் வாழ்வில் முடிவதில்லை", 90 ன் பின் ''தாயகக்கனவு'' போன்ற படங்களில் நடித்துள்ளேன்.

90 காலப்பகுதியில் தான் நானும் ஒரு படத்தை தயாரித்தேன் அது வெளிவரவில்லை. அதற்குப் பிறகுநான் சின்னத்திரை இயக்கம் பற்றிசிந்திப்பதை விட்டுவிட்டேன்.

இப்போது அதிகமான குறும்படங்கள் வந்துவிட்டன. வந்து கொண்டுமிருக்கின்றன. அன்றைய குறும்படங்களுக்கும் இன்றைய குறும்படங்களுக்குமான வித்தியாசம் பற்றி கட்டாயம் கூறவேண்டும்.

சின்னத்திரைப்படங்களானது இன்றை மக்களுடைய வாழ்க்கையில் சந்தோசத்தைத் தரக்கூடிய சாதகமாக உருவாகிவிட்டது. சிங்களப்பிரதேசத்தில் எத்தனையோபடங்கள் அமோகமாக பிரமிக்கத்தக்க வளர்சியடைந்துவிட்டன. ஆனால், எமது பிரதேசத்தில் ஏன் வளர்ச்சியடையவில்லையென்றால் இதை மக்கள் மயப்படுத்தவில்லை. - இதை மக்கள் மயப்படுத்தினால் எத்தனையோ கலைஞர்கள் சேர்ந்து பலபடங்களை உருவாக்குவார்கள். அதன் மூலம், விரிந்த ஒரு கலைப் பரப்பு விரியும் என்பதே என்நிலை.


குறை கூறுபவன் அழிவுத்தொழிலைச் செய்கின்றான். சேவை செய்ய நீ முன்வா —கேப்ரியாலா மிஸ்ட்ரால்

## சிறுபான்மையைப் பெரும்பான்மையாக்கும்

# ரணிலின் இடைக்கால நிர்வாகசபை உத்தி

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக புலிகள் காட்டிவந்த மிக இறுக்கமான நிலைப்பாடு பேச்சை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதை தடுக்கும் என்ற விமர்சனம் பலமாக முன்வைக்கப்பட்டது.

புலிகள் இடைக்கால நிர்வாக அமைப்பை யாப்புக்கு வெளியில் கோரியிருந்ததுதான் இதற்குக்காரணம்.



அரசியல் அமைப்பின்படி அதற்கு வெளியே இடைக்கால நிர்வாக கட்டமைப்பை அமைப்பது சாத்தியமில்லை என்றும் நம்புவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் கோரிக்கை நடைமுறைச்சாத்தியமற்ற ஒன்றிற்கான வற்புறுத்தல் என்றும் அதற்கு வேறு உள் நோக்கங்கள் இருக்கலாம் என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தாஜ்சமுத்திரா ஹொட்டலில் ------ ஆசிய தாராள சிந்தனாவாதிகள், சனநாயகவாதிகள் பேரவையில் உரையாற்றும் போது, மேற்சொன்ன கருத்தையே ஏறத்தாள கொண்டிருந்ததை வெளிப்படுத்தினார். இதன் பின் அரசினால் முன்வைக்கப்பட்ட இரண்டு இடைக்கால நிர்வாகசபை தொடர்பான வரைபுகள் அரசியல் யாப்பிற்கு உட்பட்டிருந்ததுடன், 'சிறான்'க்கு இருந்த அதிகாரங்களைக் கூட இது கொண்டிருக்கவில்லை. இவை புலிகளால் பரிசீலனைக்கு எடுக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்டன.

இவ்விரு வரைபுகளின் நோக்கம் அரசியல் யாப்பை மீற முடியாதென்றும், அதற்கான அகப்புற வாய்ப்புக்கள் இல்லையென்றும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவதோடு புலிகளை யாப்பிற்குள் இழுத்துவர சர்வதேச அழுத்தத்தை எதிர்பார்த்து செய்யப்பட்டனவாக இருக்கலாம்.

இது விடயத்தில் புலிகளின் இறுக்கமான நிலைப்பாடும் ஒப்பீட்டளவில் புலிகளின் நிலைப்பாட்டிற்கு எதிர்க்கருத்தைக்கொண்டிருக்காத சர்வதேசத்தின் மனப்போக்கும் இப்போது ரணில் அரசாங்கத்தை யாப்பிற்கு வெளியில் அதேநேரம் அரசியல் யாப்பை மீறாமல் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கான வழியை கண்டுபிடிக்க வைத்துள்ளன.

இப்பொழுது விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக திட்டவரைபு அரசியல் அமைப்பிற்கு முரணானது அல்ல. ஆயினும் அரசியல் யாப்பிற்கு உட்பட்டதுமல்ல. அதாவது பாராளுமன்றிற்கு நேரடியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய அமைப்பு அல்ல. இதை விடவும் நாட்டில் ஏற்படும் அரசியல் நிலையை கருதி செயலாற்றுக்குழுவை அமைக்கும் முறைமையின் பிரகாரம் பாராளுமன்றிற்கு பதில் சொல்லாத ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்க முடியும் என்ற வேறு மார்க்கங்களையும் ரணில் பிரஸ்தாபிக்கிறார்.

தாஜ்சமுத்திரா ஹொட்டலில் பேசிய ரணிலின் நிலைப்பாட்டிற்கும் இப்போதைய ரணிலின் நிலைப்பாட்டிற்கும் இடையில் ஒரு பெரும் பாய்ச்சல் நிகழ்ந்திருக்கிறது.

இப்பொழுது ரணில் கண்டு பிடித்துள்ள மார்க்கம் ஓர் இரவில் கண்ட கனவின் பயனாக வந்துதித்ததாக இருக்க முடியாது. ஆயின் ரணில் முன்பு சொன்னதைப்போல புலிகள் சாத்தியமற்ற கோரிக்கையை வற்புறுத்தினார்கள் என்பதல்லாமல் அரசாங்கம் தன் உள் நோக்கங்களுக்காக புலிகளை யாப்பிற்குள் இழுத்துவர வலிந்து நின்ற தென்பதே சரியானதாக இருக்கும்.

எப்படியோ புலிகள் கோரிய யாப்பிற்கு வெளியேயான இடைக்கால நிர்வாகம் நடைமுறைச்சாத்தியமானது என்பதை மெய்ப்பித்து ரணிலின் நிலைப்பாடு வந்துவிட்டது. இது பேச்சில் ஏற்பட்ட தேக்க நிலை உடைவதற்கு சாதகமானதே. இனிப் பிரச்சினை ரணிலின் இடைக்கால நிர்வாக திட்ட வரைபு கொண்டிருக்கும் விடயங்கள் பற்றியதே.

இதில் சர்ச்சைக்குரிய பல விடயங்கள் இருப்பினும், மிகவும் அடிப்படையானதாக இருக்கும் ஒரு சட்டத்தை நிராகரிக்கும் அதிகாரம் பற்றி ரணிலின் இடைக்கால நிர்வாக திட்ட வரைபில் கூறப்பட்டவற்றை ஆராய்தல் பொருத்தமானதாக இருக்கும்.

இடைக்கால நிர்வாக சபைக்கு தலைவரை உருவாக்க இரு வழிகளை ரணில் கூறுகின்றார். முதலாவது வழி நிர்வாகசபை வாக்கெடுப்பின் மூலம் ஒரு தலைவரைத் தெரிவு செய்வது. அத்தகைய முறை அமையுமிடத்து சிறுபான்மையினரின் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவைப்பெறும் ஒரு சரத்தே சட்டமாக்கப்பட முடியுமென்று கூறுகிறார்.

எப்படியாயின் இத்திட்டத்தின்படி அமையப்பெறும் சபையில் சிறுபான்மை அங்கத்தவர்களில் (வட-கிழக்கில் உள்ள சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகளில்) அரைவாசிப் பேருக்கு மேலானவர்கள் தமக்கு பாதகமானது என ஒரு சட்டத்தை எதிர்த்தால் அது நிறைவேற்றப்படமுடியாது என்றிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் வாழும் சிறுபான்மையினருக்கு (சிங்களவர்கள், முஸ்லிம்கள்) இது ஒரு நல்ல பாதுகாப்பு ஏற்பாடென்றும் அவசியமானதென்றும் கருதினால் இதையே சிங்கள அரசு நாட்டின் சிறுபான்மையோருக்காக இலங்கை அரசியல் யாப்பில் ஏன் கொண்டுவரவில்லை? ஏன் கொண்டுவரக்கூடாது. அதாவது கொழும்பிலுள்ள தேசிய அரசுப் பேரவையில் சிறுபான்மைஇனத்தின் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கைப் பெறாமல் நாட்டில் எந்த ஒரு சட்டத்தையும் கொண்டு வர முடியாதென்று. அப்படிச் செய்திருந்தால் இதனையும் சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் சனநாயகப் பண்பு என நாம் விளங்க வாய்ப்பிருக்கும்.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தினால் கொண்டு வரப்பட்ட ஐம்பதுக்கு ஐம்பது என்பதையே கேலிக்குரியது என எதிர்த்தவர்கள் நீங்கள். அதில் சிறுபான்மையினரின் ஐம்பது விகிதத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத்தமிழர்கள், பறங்கியர்கள் என்ற அனைவரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இந்த 50:50 முறை உருவாகியிருந்திருந்தால் இதில் ஒரு துரையப்பாவையோ ஒரு தேவானந்தாவையோ ஒரு பெருமாளையோ விலைக்கு வாங்குவதன் மூலம் நீங்கள் பெரும்பான்மையை பெற்றுவிட முடியுமாக இருந்ததும் அப்போது அதை எதிர்த்தவர்கள் இப்போது இடைக்கால நிர்வாகசபையில் சிறுபான்மையோரின் பாதுகாப்புப்பற்றி சொல்லும் விடயம் குறித்து எச்சரிக்கை கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

அதுபற்றி ஒரு எடுகோளைக் கொண்டு விளக்குவது பொருத்தமாக இருக்கும். 90 பேர் கொண்டு அமையப் பெறும் ஒரு சபையில் 60 பேர் விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படுபவர்களாயும் மிகுதி 30 பேர் சிறுபான்மையினராயும் இருக்கும் பட்சத்தில் சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகளில் பதினாறுபேரின் வாக்குகளினால் தமக்கு பாதுகாப்பானது அல்ல என்ற பெயரில் ஒரு சட்டத்தை தடுத்து நிறுத்திவிட முடியும். இங்கு 74 வாக்குகளும் அர்த்தமற்றதாகி விடுகின்றன. ஆயின் 74 வாக்குகளினால் சாதிக்க முடியாததை 16 இனால் சாதிக்க முடிகிறது. இப்படியிருக்க புலிகளின் பெரும்பான்மை அங்கத்துவத்தோடு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படும் என்பது கேலிக்குரிய விடயமாகி விடாதா?

வடக்கு கிழக்கின் சிறுபான்மையினரது பாதுகாப்பு மறுதலிக்கப்படவேண்டுமென்பது இதன் கருத்தல்ல. மத்தியில் கொண்டு வராததை மகாணத்தில் கொண்டுவர வற்புறுத்துவது தான் சந்தேகத்துக்குரியதாகிறது. அதுவும் ஏனைய சிங்கள மாகாணங்களில் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இதைத்தர முன்வராத போது இங்குமட்டும் ஏன் வற்புறுத்தப்படுகின்றது என்பதில் ஐயங்கள் எழுகின்றது.

இடைக்கால நிர்வாகசபைக்கான தலைவரை உருவாக்குவதற்கான ரணிலின் இரண்டாவது முறையின்படி நிர்வாகசபை இரு தலைவர்களை கொண்டிருக்கும். அதிலொன்று விடுதலைப்புலிகளால் நியமிக்கப்படுபவர். மற்றையது அரசாங்கத்தால் நியமிக்கப்படுபவர். இதில் எந்தவொரு தலைவரும் தனது 'வீட்டோ' எனப்படும் ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்த வொரு சட்டத்தையும் கொண்டுவராது தடுத்துவிடலாம் என்று கூறப்படுகிறது. இது வண்டிலுக்கு முன்னாலும் வண்டிலுக்குப் பின்னாலும் இரண்டு மாடுகளை பூட்டுவதற்கு சமன்.

- ஜீ.கே -

---

## காப்பாற்றிய வீரர்

ஒரு பெரிய யானை.அந்த யானையின் கால்களுக்கிடையே ஒரு நடுத்தர வயதுப் பெண் வீழ்ந்து கிடக்கிறாள் பதறித்துடித்தபடி!

யானை இன்னும் அப்பெண்ணை மிதிக்கவில்லை.பெண்ணை மிதிக்கத் தூக்கிய கால்களை யானை அப்பெண்ணின் மேல் பதிக்காமல்அப்படியே வைத்துக்கொண்டுநின்றது. காரணம்

பெண்ணின் கணவரின் அலறல் கேட்டு ஓடிவந்த துப்பாக்கிக்காரர்கள் அந்த யானையின் முன் சிறிது தூரத்தில் துப்பாக்கிகளைத் தயாராகப் பிடித்துக் கொண்டு நின்றார்கள்.

இதனைப் பார்த்தபடி தான் யானை செயலற்று நின்றது.

துப்பாக்கிக்காரர்கள் சுடத்தயாராய் நின்றார்கள் சுடவில்லை. எப்படிச சுடுவது? யானையின் காலடியில் அப்பெண்... அந்தப பெண்ணை மீட்கவேண்டுமே!



அவ்வேளைஅங்கே ஓடி வந்த ஒருவர் துணிச்சலுடன் சென்று யானையின் காலடியில் கிடந்த பெண்ணைத் தரதரவென்று இழுத்து வந்து விட்டார். பெண் காப்பாற்றப்பட்டு விட்டார்.

துப்பாக்கிக்காரர்கள் சுடமுயன்றபோது அப்பெண்ணின் கணவர் தன் மனைவிக்குத் தீங்கு செய்யாதஅந்த யானையைச் சுடவேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டாராம்.

துப்பாக்கிக்காரர்கள் யானையைச் சுட்டார்களா விட்டார்களா? அதை விடுவோம். இப்போது விடயத்துக்கு வருவோம்!

யானையின் காலடியில் சிக்கிச் சாவடைய இருந்த தனது மனைவியை மீட்டுஉயிர் தப்பவைத்த அந்த வீரருக்குப் பாராட்டும் பரிசும் அளிக்க அப்பெண்ணின் கணவர் விரும்பினார். தகுதியானவர்களையும் ஊர்மக்களையும் அழைத்து அதற்கென ஒரு விழாவினையும் எடுத்தார். பரிசினையும் பாராட்டுப்பத்திரத்தையும் பெற அந்த வீரர் வரவில்லை. அவரது அண்ணன்தான் வந்திருந்தார்.

வீரர் வராததற்கான காரணம்:- அவரையும்நாலு வார்த்தைகள் மேடையில் பேச வேண்டும் என்று கேட்டதுதான்.

அத்தகைய வீரரின் நிலை இதுவென்றால்மற்றையோரின் நிலை எப்படி இருக்கும்?

நன்றி வழிகாட்டி

---

வரலாற்றை விடக் கவிதை,தத்துவ வளமும், உயர்ந்த மதிப்பும் மிக்கது —அரிஸ்ட்டாட்டில்

# தென்னாபிரிக்க நிபுணரின் காட்டமான விமர்சனம்



கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இரண்டு இலட்சம் மக்கள் கலந்து கொண்ட பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெற்றது. அதிலே தமிழர் தாயகத்தில் சிறிலங்கா படையினரின் இருப்பை பலமாக மறுதலித்து மக்கள் குரல் எழுப்பினார்கள். அதற்கு பின்பாக இம்மாதம் 09ம் திகதி குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய ஆய்வுப்பட்டறை ஒன்று பண்டத்தரிப்பில் இடம் பெற்றுள்ளது.

ஜேர்மனி நாட்டின் பேகவ் ∴ பவுண்டேஷன் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த அந்த ஆய்வுப்பட்டறையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளோடு தென்னாபிரிக்கா, ஜேர்மன் நாடுகளின் பாதுகாப்பு நிபுணர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிலங்கா படை உயர்அதிகாரிகளும் அதில் பங்குபற்ற அழைக்கப்பட்டிருந்தார்கள். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் இரு உயர்அதிகாரிகளை அதில் பங்கேற்குமாறு பணித்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் குறித்த இரு படை உயரதிகாரிகளும் ஆய்வுப்பட்டறைக்கு அழைக்கப்பட்டவர்களின் பதிவேட்டில் தமது பெயர்கள் இடம்பெறக்கூடாது என்று நிபந்தனை விதித்திருந்தார்கள். இறுதியில் கீழ்நிலை அதிகாரிகள் இருவரே அதில் பங்கேற்றார்கள்.

இந்த ஆய்வுப்பட்டறை உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்ந்து, கடுமையான விமர்சனங்களையே முன்வைத்தது. அதில்சிறப்புரையாற்றிய தென்னாபிரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரி றொக்ஸி வில்லியம், உயர் பாதுகாப்பு வலயத்தை மனிதாபிமானத்துடன் நோக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். குறிப்பாக சிறிலங்கா இராணுவம் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இந்திய நிபுணர் சதீஸ் நம்பியாரிடம் பெற்ற சிபார்சுகளை அவர் காட்டமாக விமர்சித்திருந்தார்.

உயர்பாதுகாப்பு வலயத்தை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடனேயே நோக்க வேண்டும் எனவும் அதில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வே முக்கியமாகக் கருத்தில் எடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்ட அவர், விடுதலைப்புலிகள் கனரக ஆயுதங்களை சர்வதேசக் கண்காணிப்பாளர்களின் பார்வையில் வைக்கவேண்டும் என்ற கருத்தையும் நிராகரித்தார். அந்தத் தென்னாபிரிக்க முன்னாள் இராணுவ நிபுணர் ஏறத்தாழ தமிழ் மக்களின் கருத்தை அங்கே பிரதிபலித்தார் என்று கூறலாம்.

பத்து நாள்களுக்கு முன்னர் பொங்கு தமிழ் எழுச்சி மூலம் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியதன் பின்பு அந்த ஆதாரத்தோடும் பலத்தோடும் அவர் அந்தக் கருத்துக்களைக் கூறியிருக்கக்கூடும். அதே செய்தியைத்தான் அதில் கலந்து கொண்ட யாழ் மாவட்டத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் முன்வைத்தார்கள்.

ஆனால், பொங்கு தமிழ் எழுச்சியையும் அதன்பின்னான ஜேர்மனிய நிறுவனத்தின் ஆய்வுப்பட்டறையையும் சிறிலங்கா இராணுவத்தரப்பும் அதன் நலனில் அக்கறை கொண்டுள்ள வெளிச்சக்திகளும் விரோத மனப்பாங்கோடு தான் நோக்குவதாகத் தெரிகின்றது. குறிப்பாக ஹிந்துஸ்தான் டைம்ஸின் கொழும்புச் செய்தியாளர் வெளியிட்டுள்ளதகவல் இந்தியா இதனைஏற்றுக்கொள்ளவில்லை என்றே கூறுகின்றது.சதீஸ் நம்பியாரின் உயர்பாதுகாப்பு வலய விவகார அறிக்கையை விமர்சித்து தமிழ் மக்களின் இயல்பு வாழ்வை முன்னிறுத்தியமை தொடர்பில் இந்தியா அதிருப்தி கொண்டுள்ளதா கவே தெரிகின்றது.

உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தை விமர்சித்த முன்னாள் தென்னாபிரிக்க பாதுகாப்பு நிபுணரை விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்று வர்ணித்திருப்பதோடு ஒரு ஜேர்மனியத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் எவ்வாறு இலங்கையின் உயர்

**ஞாபகன்**

பாதுகாப்பு வலயம் பற்றி ஆராய முடியும் என்றும் இந்தியா கேள்வி எழுப்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இது இந்தியாவின் அரசியல் நோக்கு, பிராந்திய நலன் பாற்பட்டதாக இருப்பினும் தமிழ் மக்களின் அபிலாசைக்கு மாறானதாகவே இருக்கிறது. அத்துடன் அண்மைக்கால சிறிலங்கா படையினரின் நடவடிக்கைகளுக்கு உற்சாகமளிப்பதாகவும் அமைகின்றது எனலாம்.

கடந்த ஒரு மாதகாலமாக படையினரின் நிலைப்பாடு இறுக்கமான இராணுவ மனோபாவத்தின் வெளிப்பாடாகவே இருக்கிறது. பல்வேறு சூழ்ச்சிகளோடு கடந்த மாதம் 14ம் திகதி விடுதலைப்புலிகளின் கப்பல் சர்வதேசக் கடலில் வைத்து அழிக்கப்பட்டதோடு இந்நிலைப்பாடு தீவிரமடையத் தொடங்கிவிட்டது. புதிது புதிதாகக் காவலரண்கள் அமைக்கப்படுவதும் ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும், சோதனைகளைச் செய்வதும் அதிகரித்துவிட்டன.

> இதுவரை காலமும் தமிழ் விரோதசக்திகள், விடுத்லைப்புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகளையே மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிடம் செய்துவந்தன. இப்போது என்றுமில்லாத அளவிற்கு படையினருக்கு எதிராக அவை பதியப்படுகின்றன. இதனால், உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். சிறிலங்கா படைத்தளபதியிடம் விளக்கம் கோரியிருந்தது. அதற்கு வழங்கப்பட்ட விளக்கம் சரியானதாக அமையவில்லை.

இவற்றுக்கெல்லாம் படைத்தரப்பு தமிழ்த்தேசவிரோதக் கும்பல்களின் பாதுகாப்பை காரணமாகக் கூறுகின்றன. அவற்றின் மீது அண்மைய காலத்தில் இனந்தெரியாதோர் மேற்கொள்ளும் தாக்குதல்கள் இதற்கு ஒரு சாட்டு மட்டுமே ஆகும். உண்மையில் தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கம் நிலவ வேண்டும் என்றே சிறிலங்கா அரசும் படைகளும் விரும்புகின்றன. அதனை மேற்படி காரணங்களை அடிப்படையாகக்கொண்டு செய்கின்றன.

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்பு மக்கள் குடியிருப்பு, பொது இடங்கள் என்பவற்றில் இருந்து படைநிலைகள் அகற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆயினும், அவ்விடங்களுக்கு அருகாகவும், புதிதாகவும் நூற்றுக்கு மேற்பட்ட படைநிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் யாழ் - நகர மத்தியில் உள்ள ஞானம்ஸ் மற்றும் சுபாஸ் விடுதிகளில் உள்ள படைத்தளம் அகற்றப்படவில்லை. மாறாக சுபாஸ், ஹோட்டலில் உள்ள 52வது பிரிகேட் தலைமையகம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது. தண்டவாளங்கள், சீமெந்து என்பன கொண்டு வரப்பட்டு புதிய கட்டுமானங்கள் நடக்கின்றன. மேலதிக படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளதும், சிறிலங்கா படையினரதும் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடைப்பட்ட சூனியப்பிரதேசங்களில் கூட புதிய படைமுகாம்களை அமைத்து வருகிறார்கள். முகமாலை, கிளாலி, நாகர்கோவில் யுத்த சூனியப்பிரதேசங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முரணாக படையினர் முகாம்களை அமைத்திருப்பதை புலிகள்கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு நேரில் காண்பித்துள்ளார்கள்.

பொது இடங்களுக்கு அருகே உள்ள படையினர் மக்களை பழிவாங்கும் தனத்தோடும் நடக்கத்தலைப்படுகின்றார்கள். வேலணை, துறையூர் ஐயனார் வித்தியாலயச் சிறுவர்கள் விளையாடும் நேரம், முட்கம்பிகளின்மின் இணைப்பை ஏற்படுத்தி மாணவன் ஒருவன் படு காயமடைந்தமை அந்த வகையிலானதாகும். ஏற்கனவே சிறுவர்கள் முட்கம்பியை தொட்டு விளையாடிய போது மின்பாய்ச்சப்பட்டிருக்கவில்லை. இடையில் தான் மின் இணைக்கப்பட்டு அப்பாவிச் சிறுவன் ஒருவன் தண்டிக்கப்பட்டுள்ளான்.

இதேபோன்றே பருத்தித்துறை சுப்பர்மடத்தில் பாடசாலை மாணவனை படையினர் பீல்ட் பைக்கினால் மோதி காயப்படுத்தியுள்ளனர். இது தவிரவும் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்களைச் சுற்றிவளைப்பதும் சோதனையிட முயல்வதுமாக முறுகல் நிலையை அடிக்கடி படையினர்ஏற்படுத்தி வருகின்றார்கள். சிறிலங்கா இராணுவப்புலனாய்வு பிரிவினர் அரசியல் போராளிகளைக் காரணமின்றி வழிமறிப்பதும், தாக்க முயற்சிப்பதும் அடிக்கடி யாழ்ப்பாணத்தில் நிகழ்கின்றன. போராளிகள் மீது வலிந்து குற்றங்களைச்சுமத்திஅவர்களை நீதிமன்றம் விசாரணை என அலைக்கழிக்க இராணுவம் பெரும் பிரயத்தனப்படுகின்றது. திடீரென வீதித்தடைகள் போடப்பட்டு மக்கள் சோதனையிடப் படும் சம்பவங்கள் வடமராட்சியில் அதிகரித்துவிட்டன .இறுதியாக கடந்த வெள்ளியன்று வடமராட்சி தம்பசிட்டி, முதலாம் கட்டைச் சந்தி, மந்திகை, ஆலடிச் சந்தை ஆகிய இடங்களில் படையினரால் இத்தகைய கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டன.

இறுதியாக இடம் பெற்ற பொங்கு தமிழில் இரண்டு இலட்சம் மக்கள் கூடி விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக உரைத்தமையும் இயல்பு வாழ்வை அவாவியமையும், படையினர் எதிர்பாராத ஒன்றாகிவிட்டது. அதிலும் உயர்பாதுகாப்பு வலய மாதிரி ஒன்றை மக்கள் ஆக்ரோசத்தோடுதகர்த்தெறிந்தமை படையினர் தமது இராணுவ மேலாதிக்கத்துக்கு கிடைத்த அடியாகவே கருதுகின்றார்கள் போல் உள்ளது. இதனால், இப்போது மாற்று வழியாக மக்களை அச்சுறுத்தும் பாணியிலான ஒத்திகைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்

யாழ் நகர வீதிகளில் படையினருக்கு கலகமடக்கும் பயிற்சி வழங்கப்படுகின்றது. மக்களை விலகிச் செல்லுமாறும் இல்லையெனில் சுடப்படுவீர்கள் என்றும் கூறும் அட்டைகளைத்தாங்கி மக்கள், படைகள் என இரு அணிகளாகப்பிரிந்து ஒத்திகைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளிப்படையாக சிறிலங்காப் படையினர் மேற்கொள்ளும் இந்த நகர்வுகள் யாவும் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த போது நிகழ்ந்ததை ஒத்ததாகவே இருக்கின்றன.


அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிட்ட இன்றைய நிலையில் இது நியாயமற்ற ஒன்றே ஆகும். இந்த நடவடிக்கைகள் குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டு ள்ளன. பாதுகாப்பு எனக் கூறி படையினர் மேற்கொள்ளும் அநியாயங்கள் குறித்து நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் செய்யப்பட்டிருக்கின்றன.

இதுவரை காலமும் தமிழ் விரோதசக்திகள், விடுதலைப் புலிகளுக்கு எதிரான முறைப்பாடுகளையே மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் செய்து வந்தன. இப்போது என்றுமில்லாத அளவிற்கு படை யினருக்கு எதிராக அவை பதியப்படுகின்றன. இதனால், உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக மனிதஉரிமைகள் ஆணைக்குழு யாழ். சிறிலங்கா படைத்தளபதியிடம் விளக்கம் கோரியிருந்தது. அதற்கு வழங்கப்பட்ட விளக்கம் சரியானதாக அமையவில்லை. இதனால் மீள படைத்தரப்பிடம் மேலதிக விளக்கத்தை அது கோரியுள்ளது.

இனிமேலும் படைத்தரப்பு கொடுக்கவுள்ள விளக்கம் அவற்றை நியாயப்படுத்தியதாக தேசிய பாதுகாப்பு என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். இதையே பண்டத்தரிப்பில் கலந்து கொண்ட கீழ்நிலை இராணுவ அதிகாரிகளும் கடுமையான விமர்சனங்களுக்குப் பதிலாகக் கூறியிருந்தார்கள். இத்தகைய பதில்கள் மூலம் அது திரும்பத் திரும்ப தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தைப் பேண விரும்புவதையே உணர்த்துகின்றது.

இந்த நிலையே தொடர்ந்து பேணப்படுமானால் தமிழர்களுக்கு இயல்புவாழ்வு என்பது தொலைவாகிக்கொண்டேயிருக்கும். இயல்பு வாழ்வு தொலைவாகும் போது நிரந்தர சமாதானமும் தொலைவாகும். உயர்பாதுகாப்பு வலயத்தை நியாயப்படுத்தும் தரப் பினர்யாராக இருப்பினும் சமாதானத்தை தொலைவாக்குபவர்களாகவே கருதப்படுவர்.

## அத்தியாயம் - 06



# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

கிளிநொச்சிக்கு சிவம் வந்து ஒரு மாதமாகிவிட்டது. இங்குள்ள வாழ்க்கை முறை, உணவுவகை , வயல் வேலைகள் எல்லாமே அவனுக்கு புதிய அனுபவமாய் இருந்தது.

முதல் மழைக்கு உழுது வைத்தவர்கள் அடுத்த மழைக்கு விதைத்தார்கள். பத்துச்சோடி எருமைமாடுகள் ஏர் பூட்டி வயல் உழுதன. அவைகளை வைத்து உழுவதற்கு ஊரிலிருந்து ஆட்களைக்கூட்டி வந்திருந்தார்கள். இவர்களைக்கூட்டிவர வேலாயுதத்துடன் சிவமும் ஊருக்குப் போயிருந்தான். ஒரு நாள் நின்று ஆட்களைச் சேர்த்துக்கொண்டு மறுநாளே கரிக் கோச்சியில் திரும்பி வந்திருந்தார்கள். கரிக் கோச்சியில் அன்றுதான் சிவம் ஏறியிருந்தான். அதில் நிறையப்பேர் பிரயாணம் செய்வதை அவன் ஆச்சரியத்தோடு பார்த்தான். அவர்களின் மத்தியில் ஒரு மனிதன் மட்டுமே சேட்டு அணிந்திருந்தார். மற்றவர்கள் இவர்களைப்போலவே நாலுமுழ வேட்டி மட்டுமே கட்டியிருந்தார்கள். அவன் அறிந்தவரை மிகச்சிலரே சேட்டு அணிந்திருக்கிறார்கள். உடையார்... விதானையார்..... அவர்கள் பள்ளிக்கூட வாத்தியார்...அவன் வியப்புடன் பார்ப்பதைக் கண்ட வேலாயுதம் விபரம் சொல்லியிருந்தான். " கிளிநொச்சியில சேர்பொன் இராமநாதன் எண்ட ஒரு ஆளின்ர காணி ஆயிரம் ஏக்கர் இருக்கு. காணி பார்க்கிறதுக்கு மனேச்சர்மார் இருக்கினம்.. உழவு விதைப்புக்காலம் தொடங்கியிட்டுது தானே. காணியில வேலைசெய்யிறதுக்கு புத்தூர், ஆவரங்காலிலயிருந்து ஆட்களைக்கூட்டிப் போகினம். கனக்கப்பேர் தேவையல்லே."

" கோச்சியில போய் இறங்கி அங்கால காணிக்கு எப்பிடிப்போவினம். "

" உதில ஆட்களைக்கூட்டிப்போறது ஒரு மனேச்சர். வேற மனேச்சர்மாரும் அங்க இருக்கினம். பரந்தன் ஸ்ரேசனுக்கு இவைக்கு வண்டிலுகள் அனுப்புவினம் அல்லாட்டி நடந்துபோவினம். இவைக்கு கரிக் கோச்சியில வாறது போறதுக்கு காசு இல்லை. கிளிநொச்சியில அம்பது ஏக்கருக்குமேல காணி இருக்கிறவை தங்கட வேலையளுக்குஆட்களை இதில காசு இல்லாமல் கூட்டிவரலாம். அப்பிடி அம்பது ஏக்கர் வைச்சிருக்கிற நிலைக்கு நாங்களும் வரவேணுமடா."

வேலாயுதத்தின் குரலில் இருந்த ஏதோ ஒரு உணர்வு அவன் மனதின் ஆழத்தையும் தொட்டு நின்றது.

விதைப்பு தொடங்கிய போது அவனுக்கும் ஓய்வு என்பது இல்லாமல் போய் விட்டது. எல்லோருக்கும் பெரிய மண் பானையில் பச்சையரிசிச்சோறும் கருவாட்டுக் குழம்பும் காலையிலேயே செய்துவைத்து விடுவார்கள். இந்தச்சமையல் வேலை சிவத்தின் பொறுப்பில் வந்தது. அன்றைய உழவு முடிந்ததும் எருமை மாடுகளை அவிழ்த்துவிட்டுவிடுவார்கள். அவை தம்பாட்டில் மேய்ந்துகொண்டு திரியும். விடியற்காலையில் மற்றவர்களுடன் அவனும் சேர்ந்து தேடித்திரிந்து எருமைகளை சாய்த்துக்கொண்டுவரவேண்டும். குளத்தில் உள்ள சேற்று நீருக்குள் அமிழ்ந்து கிடக்கும் எருமைகளை உசுப்பி எழுப்பி சாய்த்து வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். ஊரில் விடியவிடிய நித்திரை கொண்டுபழகியவனுக்கு மிகவும் அதிகாலையில் எழுவது மிகப்பெரும் துன்பமாய் இருந்தது. அதைவிட துன்பம் இந்தக் கிடாமாடுகளைச்சாய்த்துவருவது.

விதைப்பு வேலைகளில் பண்டாவும், அருநோசும் கூட வந்து உதவி செய்தார்கள். விதைப்பு முடிந்து ஆட்கள் திரும்ப ஊருக்குப்போனதும் அவர்களுக்கும் சிறிது ஓய்வு கிடைத்தது. பண்டா கமம் விதைப்புக்கு வேலாயுதமும் சிவமும் போய்நின்று உதவிசெய்தார்கள்.

வயல்காணியின் முன்புற மேட்டுப்பகுதியில் சிறுகுடிசைபோட்டுத் தான் வேலாயுதம் இருந்தான். காட்டுத் தடிகளினால் பரண் மாதிரி கட்டி அதில் ஓலைப்பாய் விரித்துப்படுத்தார்கள்.

"இங்க விசப்பாம்புகள் கனக்க. அதால நிலத்தில படுக்கப்பயம் "

வேலாயுதம் சொன்னது இரவிலும் அவனைப்பயமுறுத்தியது. சின்னக்கை விளக்கு காற்றுக்கு அணைந்து விட்டால் விடிய விடிய அவனுக்கு நித்திரைவராது. இருட்டு பயமுறுத்தும். தூரத்தே யானைகளின் பிளிறல்களும் மயில்களின் அகவல்களும் கேட்டுக்கொண்டிருக்கும். ஆரம்பத்தில் இவைகளைக்கேட்டு அப்படியே நடுங்கிப்போவான். இப்போது கொஞ்சம் பழகிவிட்டது. யானைகளின் பிளிறல் கேட்டதும். எச்சரிக்கைஉணர்வு ஏற்படுகிறது. காட்டுத்தடிகளைச்சேர்த்து மூட்டும் நெருப்பு விளாசிக்கொண்டெரியும் பெரிய தகரத்தைத்தட்டி பெரும் சத்தம் எழுப்புவார்கள். யானைகள் வெளிச்சத்தை நெருங்காது..... சத்தம் கேட்டுவிலகிப் போகும் என்ற துணிவு. மழைக்காலம் என்பதால் நுளம்புகளும் அதிகமாய் இருந்தது. வாய்அகன்ற சட்டிக்குள் வேப்பமிலையும் சுள்ளித்தடிகளும் போட்டு எரித்துப்புகை போட்டுக்கொள்வார்கள்.

நெல் முளைத்து ஊசிஇலையாக நிமிர்ந்து பச்சை நிறமாகப்படர்ந்து கிடப்பதைப்பார்க்க வியப்பாக இருந்தது. இத்தனை பெரிய வயற்பரப்பை அவன் இதுவரை பார்த்ததில்லை. ஊரில் என்றால் வயல் எல்லாம் பரப்புக்கணக்குத்தான். இங்கே ஏக்கர் கணக்கு என்று சொல்கிறார்கள். ஒரு மாதப்பயிர் தண்ணீர் வெள்ளத்துக்குள் தழும்பிக்கொண்டு நிற்கும் அழகு மனதுக்குஇனிமையான உணர்வை ஏற்படுத்தியது. அதையும் தாண்டி வீட்டு நினைவுதான் மனதை அழுத்திக் கொண்டிருந்தது. இரவில் படுத்தாலும் நித்திரை வருவதில்லை. அடிக்கடி அப்பு ஆச்சியின் நினைவு வரும். சின்னய்யனும் அன்னமும் எப்பிடி இருக்கிறார்களோ என்ற யோசனைவரும். சிவலையும் வெள்ளையும் எப்பிடி இருக்கின்றனவோ என்ற கவலை வரும். அன்னத்தின்கைச்சாப்பாட்டுக்கு மனம் ஏங்கும் ஒடியல் புட்டும் குரக்கன் புட்டும் சாப்பிட்டுப்பழகியவனுக்கு தொடர்ந்து சோறு சாப்பிடுவது சிரமமாக இருந்தது. உடனேயே ஊருக்குப்போகவேண்டும் போல இருக்கும்.

தாமோதரியைக்கண்டால் அவன் வண்டிலிலேயே போய்வரலாம். கரிக் கோச்சியில் தனிய ஏறிப்போய்வரப்பயமாய் இருந்தது. அதன் சத்தம் காதுகளை அடைக்கச்செய்து விடும். காசும் செலவு. அண்ணையோடுபோவதென்றால் இப்போதைக்கு முடியாது. பகல் எல்லாம் வயலுக்குள் ஓயாத வேலை இருக்கும். வேலாயுதம் ஒரு நிமிடம் ஓய்ந்திருப்பதில்லை. எப்படி அவனால் இப்படி உழைக்க முடிகிறது என்று ஆச்சரியமாக இருந்தது.

வரம்புகளில் படர்ந்திருக்கும் ஆனைஅறுகுகளை வேலாயுதம் அரிவாளால் அறுப்பதைப்பார்த்து தானும் அறுக்கப் பழகினான். பயிருக்குள் நிற்கும் கோழிச் சூடன், நெற்சப்பி, கோரை போன்றவற்றை கையில் எடுத்துவைத்து ஒவ்வொன்றின் வேறுபாடுகளையும் வேலாயுதம் சொல்லிக்கொடுத்தான். இரவில் சட்டிக்குள் நெருப்பை மூட்டிவிட்டு இருவரும் பரண்களில் படுத்திருக்கும்போது வேலாயுதம் சொல்வான்.

" இப்பநுளம்புக்கும் பாம்புக்கும் யானைக்கும் பயந்தம் எண்டால் வாழ்க்கையிலமுன்னேற ஏலாது. இந்த மண்ணில கஷ்டப்படுறது வீணாய்ப்போகாது. பக்கத்தில பண்டாகமம் பாத்தியே... பண்டா சொந்தக் காணியில வயல் செய்யிறான். சின்னக் கல்வீடுகட்டியிருக்கிறான். நாங்கள் குத்தகைக்காணியில உழைக்கவேண்டியிருக்கு. இங்க வேற இடங்களிலும் காணியள் குடுக்கப்போகினமாம். கிளிநொச்சியில கனக்க குடியேற்றத்திட்டங்களை உருவாக்கப் போகினமாம் எனக்கும் உனக்கும் காணிக்கு டி.ஆர்.ஓ விட்ட விண்ணப்பம் எப்பவோ குடுத்திட்டன். எங்களுக்கெண்டு சொந்தமாய் ஒரு காணி வேணும். கஷ்ரப்பட்டு உழைச்சா நாலைஞ்சு வருசத்தில கல்வீடு வளவு எண்டு நல்லாய் இருக்கலாமடா"

வேலாயுதத்தின் முகத்தை அவனால் பார்க்கமுடியவில்லை. ஆனாலும் அந்தக்குரல் மெல்லிய இருட்டுக்குள் அவன் மனதை வந்து ஊடுருவியது.

இந்த மண்ணில் ஏதோ ஒரு அற்புதம் இருக்கிறது என்று உணரும் அந்த உணர்வு......

" எங்களுக்கெண்டு ஒரு வண்டில் மாடுஇருந்தால் நல்லது. பலசரக்குக்கடை மயிலரிட்ட சொல்லி வைச்சிருக்கிறன். வாற கிழமை வண்டில்மாடு அவிட்டுத் தாறதெண்டு சொன்னவர்.

வண்டில் என்றதும் சிவத்திற்கு உற்சாகமாய் இருந்தது.

"எங்களிட்ட வண்டில் இருந்தால் அதிலயே ஞாயிறு சந்தைக்கும் ஆனையிறவுக்கு போயிட்டு வரலாம். மற்றவையின்ர வண்டிலுக்கு காவலிருக்கத்தேவையில்லை"

"ஓமடா அதுதான் இன்னும் எவ்வளவு செய்ய இருக்கு " வேலாயுதத்தை நினைக்க அவனுக்குக்கொஞ்சம் பயமாகக் கூட இருந்தது. அண்ணைக்குள்ள ஏதோஒரு வெறியும் மூர்க்கமும் குடிகொண்டு இருபதாகவே அவனுக்கத்தோன்றியது. இரவில் வெகுநேரம் இருட்டை வெறித்துக்கொண்டு தான்படுத்திருப்பான்.

அன்று பண்டா தன்வண்டிலில் கிளிநொச்சிக்கு போகும் போது சிவத்தையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு போனான். இங்கே வந்து இவ்வளவு நாளாகியும் அவன் பரந்தனுக்கப்பால் போனதில்லை. கண்டிவீதி நீளத்துக்கு எந்தக் குடிசைகளையும் காணமுடியவில்லை. காடுதான் அடர்த்தியாய்இருந்தது.

"இந்த ரோட்டு நீளத்துக்கு குடியிருக்க காடுகளைப்பிரிச்சு கொடுக்கப் போறாங்களாம். டி.ஆர்.ஓ. கூட்டத்தில் தீர்மானிச்சாங்களாம்." பண்டா சொன்னான்.

கிளிநொச்சியில் ஏற்கனவே இருந்த பெரியகாக்கா சின்னக்காக்கா கடைகளுடன் வேறுகடைகளும் இப்போது முளைத்திருந்தது. அந்த கொட்டில்களுக்கு நடுவே ஒரு சிறிய சீமெந்து கட்டிடமும் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

"இது டி.ஆர்.ஓ வின்ர அலுவலுகளுக்காக கட்டிறாங்களாம்."அந்த பிரதான வீதியில் காட்டு மரங்களுக்கு நடுவே சிறிதுதள்ளி இருந்த ஒரு கல் வீட்டைக் காட்டி "அதுதான் வெற்றிவேலு விதானையாற்ற வீடு." என்றான் பண்டா. அண்ணை உதாரணமாக கொண்ட வெற்றி வேலு விதானையார்..... இப்படி கல்வீடு வாகனமுமாய் வாழ்வில் உயரும் கனவோடு இருக்கும் அண்ணையின்ர ஆசைகள்... அதற்காகவே எந்நேரமும்பாடுபடும் அவனின் ஓயாத உழைப்பு..... சிவத்துக்கு வேலாயுதத்தை நினைக்கையில் பெருமையாகக் கூட இருந்தது.

அன்றைக்கு நல்ல மழை. இடி மின்னலுடன் கொட்டித்தீர்த்தது. குளிர்காற்று சுழன்று சுழன்று அடித்தது. தலையோடு கால்வரை நடுங்கியது. அந்த மழைக்குள் நனைந்து கொண்டே வேலாயுதம் வயலைச் சுற்றிப்பார்த்து கடவான் கட்டிக்கொண்டிருந்தான்.

சிவத்தால் குடிசையை விட்டு வெளியே வரமுடியவில்லை. நாலுமுழத் துண்டால்தலையோடு கால் வரை போர்த்திக் கொண்டு பரணிலேயே சுருண்டு படுத்துக் கொண்டான். காய்ச்சல் வந்துவிடும்போல் தோன்றியது.

இரவும் மழைதொடர்ந்து பெய்து கொண்டேயிருந்தது. நெருப்பு எரிக்கவும் வழியில்லை. விடிகின்ற வரை நிம்மதியாய் நித்திரை கொள்ள முடியவில்லை.

இந்தக்காட்டுக்குள் யானை அடித்து இறந்தவர்கள் பற்றியும் கரடி கடித்து கிழித்து இறந்தவர்கள் பற்றியும் வேலாயுதம் சொன்ன கதைகள் இரவெல்லாம் நினைவுக்கு வந்து நடுங்க வைத்தது.

பண்டா கமத்திலிருந்து தகரம் அடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. பயத்திலும் ஏக்கத்திலும் படுத்திருந்ததில் விடிய அவனுக்கு நல்ல காய்ச்சல் வந்துவிட்டது. கண்களைத்திறக்க முடியவில்லை. நெருப்பாக எரிந்தது. நடுக்கத்துடன் உடம்பு தூக்கித்தூக்கிப்போட்டது. பகல் எல்லாம் அப்படியே படுத்திருந்தான்.

நெற்றியில் வேலாயுதம் கைவைத்துப்பார்ப்பதையும் சிவம்... சிவம்... என்று கூப்பிடுவதையும் உணர்ந்தான். கண்திறக்க முடியவில்லை.

பண்டாவந்து பார்த்து விட்டுபோன சிறிது நேரத்தில் நந்தாவதிஒரு பேணிக்குள் சுடச்சுட மல்லித்தண்ணி கொண்டு வந்தாள். வேலாயுதம் அவனை எழுப்பி தன் மீது சாய்த்துக்கொண்டு குடிக்கக்கொடுத்தான் வாங்கி வாயில்வைக்க ஒரே கசப்பாக இருந்தது. விழுங்க முடியவில்லை. முகம் சுளிக்க ''ஐயோ வேண்டாம். கைக்குது." என்றான். "எங்கட ஊரில காய்ச்சலுக்கு இது தான் தம்பி மருந்து. ரெண்டு தடவை குடிச்சால் காய்ச்சல் போயிடும். குடியுங்கோ தம்பி"

பண்டாவின் குரல் எங்கோ தூரத்தில் கேட்பது போலிருந்தது.

"கொஞ்சம் குடியடா.இந்தா"

வேலாயும் வற்புறுத்தி குடிக்கவைத்தான்.

"இனி படுத்துக்கொள்" சிவத்தை படுக்க வைத்துப்போர்த்தி விட்டான்.

நெற்றியை தடவிவிட்டபடி பக்கத்திலேயே இருந்தான்.

இரண்டு நாட்கள் எப்படிப்போனது என்று தெரியவில்லை. காய்ச்சல் விட்டு விட்டது. உடம்பு இன்னமும் வலித்துக் கொண்டுதான் இருந்தது. தொண்டையெல்லாம் காய்ந்துபோய் கதைக்கவே இயலாமல் இருந்தது.

மூன்றாம் நாள் காலையில் எழுந்து அமர்ந்தவன் கண்களில் நீர் முட்ட "என்னால ஏலாது அண்ணை. நான் ஆச்சியிட்ட போப்போறன்" என்று அழுதான்.

(தொடரும்...)






# மாண்டவர் கனவு மெய்ப்பட.....

இருள் கவிந்து கொண்டு வர பரிமளத்துக்கு இருப்புக்கொள்ள வில்லை. பல்கலைக்கழகத்திலிருந்து வந்த சொரூபி அலுப்புத்தீரகுளித்துவிட்டு தூங்கிப்போனாள். காலையில் நேரத்தோடு எழுப்பி விடட்டாம். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள மக்கள் எழுச்சி நிகழ்வுக்கு கிராமங்கள் தோறும் சென்று விழிப்பூட்டல் கருத்தரங்குகள் மேற்கொள்ளவேண்டுமாம்.

'க்கூம்... இந்த பெட்டச்சிகளுக்கொல்லாம். இத்துணிவு எங்கிருந்து வந்தது. இரண்டு வீடு கடந்தால்எதிர்ப்படும் சந்தியில் காவலரணமைத்து குந்தியிருக்கும் சிப்பாய்கள் பல்லிளித்ததினால் காலில் கிடந்த செருப்பை தூக்கிக் காட்டப்போய்... அதனால் விளைந்த விபரீதத்தினால் ஒரு வாரம் பல்கலைக்கழகம் போகாமலிருந்த மகளாஇவள்....!

' ஆனாலும் நடப்பவற்றை கழுகுக் கண்களால் மௌனமாகப் பார்த்தபடியிருக்கும் 'அவர்கள் இந்த அமைதி குலையும் சந்தர்ப்பத்தில் கடும் மூர்க்கத்தனத்தோடு என்ன செய்வார்களோ.....?

பரிமளத்துக்கு உள்ள கவலையெல்லாம் ஒரே மகன் மதன் மீதுதான்! நெசவாலை போய் வந்த அந்த வீட்டுப்பெண் மதன் கோப்பாய் நோக்கி இன்னும் இருவருடன் சென்றுகொண்டிருந்ததாக சென்னாள். பழையபடி இளைஞர்கள் அணிதிரண்டு ஒவ்வொரு குழுவிற்கும் சினிமாப்படங்களின் பெயரை சூட்டிக்கொண்டு வன்முறைக் கலாச்சாரத்தில் இறங்கி விட்டார்களோ!

நினைத்தாலே பரிமளத்துக்கு குலை நடுங்கியது. கல்லூரி விளையாட்டுப் போட்டியில் ஏற்பட்ட தகராறு இறுதியில் ஊரிலுள்ள இளவட்டங்கள் சேர்ந்து பிரச்சினையை பூதாகரமாக்கி ஊர்ச்சண்டையாக்கி வாள்வெட்டு பொல்லடியில் முடிந்ததே! போதனாவைத்தியசாலையில் கால்கள் இரண்டிலும் மூடிக்கட்டிய பன்டேச்சுடன் மகன் கிடக்க, மூன்று வாரங்கள் நடந்த அலைச்சல் அவளுக்கல்லவா தெரியும்....! சொரூபி அவனை அந்த நிலையில் ஒருநாள் தன்னும் சென்று பார்க்க வில்லை; வீட்டுக்கோ அல்லது நாட்டுக்கோ எதையும் செய்யாது ஊர்வம்பை விலைக்கு வாங்கியதன் பலனை அனுபவிக்கட்டும் என்ற வெறுப்பு.

தகரப்படலையைத் திறந்து கொண்டு சைக்கிளை உருட்டி வந்தவனிடம், " மதன் மதியம் சாப்பிடவராமல் எங்கை போனனீ? பழையபடி உந்த பாழ்பட்ட வாள் வெட்டுக்காரரோடு சகவாசம் தொடங்கிவிட்டுது போல..." என்று உறுத்து விழித்தாள்.

எதுவும் சொல்லாமல் திண்ணையில் அமர்ந்தான்.

"இன்னும் நீ சின்னப் பிள்ளையில்லையடா..... தேவையில்லாத பிரச்சினையளுக்கை தலையைக்குடுத்து மாட்டுப்பட்டாய் என்றால் நான் ஏனெண்டு திரும்பியும் பார்க்கமாட்டன்; என்ர ஆம்பிளைப்பிள்ளை செத்துப் போச்செண்டு தலை முழுகிப் போடுவன். அப்பா ஊர் மெச்ச வாழ்ந்தவரடா.... அவரின்ர பேரைக் கொடுத்துப்போடாதை....!"

" அம்மா, நான் உனக்குப்பிடிக்காத வழியில போக மாட்டனெண்டு சத்தியம் பண்ணித்தந்தனானல்லோ.... பிறகேன் என்னை வார்த்தைகளாலே வதைக்கிறாயம்மா....! நான் இப்ப மாவீரர் துயிலும் இல்லத்திலயிருந்து வாறன், என்னை நம்பு"

" ஏன்.... என்ன நடந்தது? ஆர் பொடியன்....?" என்று நெற்றியைச் சுருக்கினாள்.

" நாலுவரியத்துக்கு முன்னம் நடந்தது." அதனால அந்த போராளி பெயருக்கு நடுகல் மாத்திரம் நட்டப்பட்டது. என்றவன் நல்லூர் ஆலய வடக்கு வீதியின் தொடர்ச்சியாகச்செல்லுமிடத்திலிருந்த அந்த மாவீரனின் வீட்டு விலாசத்தைச் சொன்னான். கையிலிருந்த நாளேட்டை தாயிடம் நீட்டினான்.

" மதன், இங்க பார்....! அப்பாவின்ர 15ஆம் ஆண்டு அஞ்சலிப்படம் அரைப்பக்கத்தில வந்திருக்கு.எல்லாம் அப்பாவின்ர கட்சிக்காரர்களின் உபயம்.'' பின்பக்கத்தைத்திருப்பி தலைப் பாகை, சால்வை சகிதம் நவரத்தினத்தின் எடுப்பான தோற்றத்தைக் காட்டினாள்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பதினைந்தாண்டு களில் இப்போது ஏது திடீர் கரிசனை...? திரும்பி உள்ளறைச் சுவரில் தொங்கும் அப்பாவைப் பார்த்தான். பளிச்சென்ற வேட்டி, கழுத்தில்லாத மேற்சட்டை, தலைப் பாகை, கழுத்தை வளைத்துப் போட்ட உத்தரியம்..... எடுப்பாகத் தான் காட்சியளித்தார்.

பாவம் அப்பா, கடைசி மட்டும் பாட்டாளிகள் உரிமை, கட்சி, தேர்தல் என்று ஓயாமல் உழைத்துத் தேய்ந்தவர். அவர் சார்ந்திருந்த சுத்தியலையும் அரிவாளையும் சின்னமாகக் கொண்ட சமவுடைமைக்கட்சி மக்கள் மத்தியில் செல்லாக்காசாகி விட்டிருந்தாலும் அப்பாவின் பெயர் நீடித்து நிற்கிறதே!

வானொலிச்செய்தி உள்ளூராட்சித்தேர்தல் பற்றி நீட்டி முழங்கியது.

" அம்மா, கேட்டாயா செய்தியை... இப்போதாவது புரிகிறதா, அப்பா மீது காட்சிக்காரர்களுக்கு ஏற்பட்ட திடீர் அக்கறையை ...."

" நிறுத்துடா, பெரியவங்க பற்றியெல்லாம் வாயில வந்ததை உளறாதே! அப்பாவின் விருப்பமும் கட்சி பலமடைய வேணுங்கறது தானே.

நாளைமறு நாள் அப்பாவோட ஆண்டுத்திவசத்தை சிறப்பாக செய்ய வேணும் அப்படின்னு கட்சிமாவட்ட அமைப்பாளர் செலவுக்குப்பணம் அனுப்பியிருக்கார். ஒரு கொப்பித்தாளை எடுத்து வந்து வேண்டிய சாமான்களை நான் சொல்ல குறித்துக்கொள்" மகனை ஏவிவிட்டு முன்பக்கம் பார்த்தவளுக்கு தூக்கிவாரிப்போட்டது.

பிரதான செய்தியின் கீழ் பெட்டிச்செய்தியில் அச்சாகியிருக்கும் அந்தப்போராளியின் படம்....

"உந்தப் பெடியனுக்குத் தான் இண்டைக்கு நடுக்கல் திரைநீக்கம் செய்தவை! வெற்றுடம்பைக்கூட காணாமல் அவன்ர உறவுகள் கதறித் துடிச்சதை பார்க்க வேதனையாக இருந்ததம்மா."

பரிமளம் திகைப்போடு புகைப்படத்தை மீண்டும் பார்த்தாள். அது அவன்தான்..! மனம் ஹோவென்று இரைந்தது.

உள்ளே ஓடிச்சென்று துணிகளில் அடியில் பத்திரப்படுத்தியிருந்த கண்ணாடி நகைப் பெட்டியை எடுத்துவந்தாள்.

மதனுக்கு விசித்திரமாயிருந்தது. "அம்மா...நகைப்பெட்டியிலிருக்கிற காவித்துண்டை பிடிச்சுக்கொண்டு உனக்குள்ளே என்னம்மா புலம்பிறே"

"நான் தப்புப்பண்ணிட்டேன்டா..." மகனின் தோளில் முகம் பதித்து ஆற்றாமையோடு அழுதாள்.

"அம்மா, நீ விஷயத்தை சொல்லாம அழுதிட்டிருந்தா என்ன அர்த்தம்?" பரிமளம் விம்மலூடே சொல்லத்தொடங்கினாள்.

* * *

இந்த ஊரடங்கு வேளையில் தடதடவென படியேறி வருவது யாராயிருக்கும்...?

பரிமளத்தின் நெஞ்சுக் கூட்டினுள் இதயம் வேகமாகத் துடித்தது. கணவன் 'ஹார்ட் அட்டார்க்'கில் போனதோடு பூ, பொட்டு மற்றும் அனைத்துச்செல்வங்களுடன் மனத்துணிவும் கூட அகன்றுவிட்டதே!

கதவை நெருங்கி கதவிடுக்கினூடு ஏதேனும் மனித அசைவுகள் தென்படுகின்றதா என உற்றுக்கோட்டாள்.

**தயாபரன்**

'ஊரடங்கை அமுல் படுத்தும் படையினரோ...?'

பப்பி வேறு அயல் வீட்டு நாய்களுடன் சேர்ந்துகொண்டு அகோரமாகக்குரைத்தது. இந்த நேரம் கள்ளருக்கும் வாய்ப்பானதே! கதவைத்திறந்தால் அடுத்து என்ன நடக்குமோ...? என்ற விடை தெரியாத

"அ.....ம்...மா...அம்மா'' ஈனஸ்வரத்தில் அழைக்கும் ஆண் குரலுக்குரியவன் யாராயிருக்கும்..?

மனதை திடப்படுத்திக் கொண்டு இலாந்தரை தீண்டிவிட்டு கதவைத்திறந்தாள்.

வெளியே கதவில் சாய்ந்தவாறு நிற்பது...

"யார்நீ... உனக்கென்ன வேணும்?" எச்சில் விழுங்கினாள்.

"அம்மா தயவுசெய்து என்னை உள்ளே அனுமதியுங்கோ..."

"முடியாது, இந்த ஊரடங்கியபொழுதில் அத்துமீறி வீட்டிற்குள் வந்து...இது வயசுப் பிள்ளைகள் உள்ள வீடு" பரிமளம் வாசலை மறித்து நின்றாள். வந்தவன் நிற்கமுடியாமல் பொத்தென தரையில் சரிந்தான். அப்போது தான் பார்த்தாள். அவன் நின்ற இடத்தை மையமாகவைத்து பொட்டுப்பொட்டாக குருதி தெறித்திருக்க... வலது முழங்காலின் கீழ் தசைபிளந்து எலும்பு நீட்டிக் கொண்டிருந்தது.

" குடிக்கத்தண்ணீரும், பழைய துண்டொன்றும் கொடுங்கம்மா.... முதுகை சுவரோடு சாய்த்து இருந்து கொண்டான். அணிந்திருந்த உடுப்பைக்கிழித்து ஏற்கனவே அவன் போட்டிருந்த கட்டை மீறி குருதி கசிந்தவாறு......

' கடவுளே இவன் இங்கிருப்பதை படையினர் மணந்து பிடித்தால் வேறு வினையே வேண்டாம். ஆபத்து.. ஆபத்து! என உள்மனம் அலாரம் அடித்தது. பின்னறையில் தூங்கிக் கொண்டிருக்கும் மதன், சொரூபி இருவரும் கண்ணுக்குள் வந்துபோனார்கள்.

இவளின் இக்கட்டு புரியாமல் சுவரில் நவரட்ணம் அட்டகாசமாகச்சிரித்துக்கொண்டிருந்தார். நாய்களின் ஓலம் இப்போது மேலும் பல வீடுகளுக்கு வியாபித்திருக்க பிரதான வீதியில் தொலைவில் கனரக வாகன இரைச்சல் வேறுபீதியை மேலும் அதிகரிக்க....

"இல்லை, இங்கிருந்து போயிடு.... என்னால உனக்கு அடைக்கலம் தரமுடியாது" அவசரமாக கதவை அறைந்து, குறுக்குச்சட்டத்தைக் கொழுவினாள்.

பிள்ளைகள் இருவருக்குமிடையே உடலைக்குறுக்கிக் கொண்டு படுத்தவளுக்கு அவனின் "அம்மா....அம்மா'' என்ற வேதனையின் வெளிப்பாடு தொடர்ச்சியாக செவிகளில் இரைந்து கொண்டிருந்தது.

சற்றைக்கெல்லாம் இராணுவ வாகன இரைச்சல் இவள் வீட்டைக்கடந்துபோனது.

காலை இருள் விலக முன்னரே எழுந்து தரையில் தெளித்திருந்த தடயங்களை ஈரத் துண்டினால் ஒற்றியெடுத்தாள். அவன் அவிழ்த்துப்போட்டிருந்த குருதிபடிந்த துணியை குப்பைக் கிடங்கில் வீசினாள்.

'அவன் என்னவானான்....?' தெரியவில்லை. ஏதோ இந்தச் சூழலிலிருந்து அகன்றதே போதுமென்றிருந்தது.

விடிந்ததும் ரியூட்டரி வகுப்பிற்கு மதனை அழைத்துப் போக வந்த சிநேகிதன் கோபி பரபரப்பாக அந்த விடயத்தைச் சொன்னான்.

நாயன்மார்க்கட்டு வீதி பிரதான தெருவில் வந்து மிதக்குமிடத்தில் சூட்டுக்காயத்துடன் சடலமொன்று கிடப்பதாக....

சடலமொன்று கிடப்பதாக....

பரிமளம் துணுக்குற்றாள். இரவு வந்தவனின் 'அம்மா' என்ற வேதனையொலி உள்ளத்தில் உறைக்க, மதனுடன் சைக்கிளிலேறி அங்குவிரைந்தாள்.

அது.... அவன்தான்! சிதைந்து வீங்கிப்போன கால்காயத்துடன் மேலதிகமாக தலையிலும் குருதி பீச்சியிருந்த இரு பொட்டுக் காயங்கள்.

'கடவுளே, இந்தப்பிள்ளையின் சாவுக்கு ஒரு வகையில் நானும் காரணமாகிவிட்டேனே!' மனம் ஊமையாய் அழுதது.

மதியமளவில் இராணுவ ட்ரக்கில் அந்த அடையாளம் தெரியாத இளைய போராளியின் உடலை தூக்கிப்போட்டுக்கொண்டு போனதாக அயல்வீட்டுக்காரர் வந்து குசுகுசுத்தார்.

ஓடிப்போய்க் குப்பைக் கிடங்கில் பார்த்தாள், குருதி தோய்ந்த அந்தத்துணிக்கு இரு நாய்கள் ற்றை விரட்டிவிட்டு அதில் மொய்த்திருந்த எறும்புகளை உதறினாள்.



துணியின் இயல்பான நிறத்தை மறைத்து செம்மை பரவியிருந்தது. துணியில் குருதி சீரற்றுப் படிந்திருந்ததனால் ஆங்காங்கே உள்வளைந்தும் வெளிநீட்டியும் அமைந்த புறவுரு அவளுக்கு புதிதாய் எதையோ உணர்த்த -

குருதிமையினால் இந்த தேசத்தின் எல்லைகள் வரையப்படும் உண்மை அவளுக்குப்புரிய ஆரம்பித்தது.

* * *

பரிமளம் ஏமாற்றம், துயரம், அவநம்பிக்கை அனைத்தும் கலந்த உணர்வில் ஆடிப்போயிருந்தாள். சற்றுமுன் கோபி தந்துவிட்டுப்போன வெள்ளைத் தாளில் தன் முடிவை உறுதியாகக் கிறுக்கியிருந்தான் மதன்.

....அப்பா கனவுகண்ட சமத்துவ சமுதாயத்தை சிருஷ்டிக்க உதிர்ந்துபோனவர்களின் உன்னதத்தை உணர்ந்துகொண்டதன் வெளிப்பாடே அதே அடிச்சுவட்டில் நானும்..

என்னை எங்கும் காணவில்லையென்று அனுதினமும் அழுதுவடித்து என் புனித யாத்திரையின் நோக்கத்திற்கு களங்கத்தினை ஏற்படுத்த மாட்டீர்களென திடமாக நம்புகிறேன்.

அப்பாவின் பதினைந்தாம் ஆண்டு நினைவில் அவரின் கனவு நனவாகவேண்டுமென்ற பிரார்த்தனையோடு - உறுதியோடு நடக்கிறேன்.

கூட்டற்ற வாழ்வு கைகூடும் வரை களத்திலே நானிருப்பேன்! அதுவரை...

திருப்பித் திருப்பி அதைப்படிக்க அவளுக்கு அனைத்துமே துலக்கமானது கையிலிருந்த கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த அந்த குருதிசேற்றில் நனைந்த துணியுடன் மதனின் மடலையும் பத்திரமாக மூடினாள். •

மில்டன் கண்பார்வை இழந்து குருடானபோதுஅவர் கண்டது கவிதை. —டான் மார்க்ஷிஸ்

# நூல்நோக்கு

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முதற்காலம் ' ஓயாத அலை'காலம். ஓயாதஅலைக்கு முதற்காலம் வன்னி மீதான படையெடுப்புக்காலம் அது வன்னியின் நெருக்கடிக்காலம். இந்தக்காலத்தை இன்னொரு வகையிலும் சொல்லலாம்.

வன்னியின் நெருக்கடிக் காலம் = வன்னியின் எழுச்சிக் காலம் என்று. ஆனால் அதனை வேறொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். ஆக, இந்த நெருக்கடிக்கால வாழ்க்கை அசாதாரணமானது மிகவும் பயங்கரமானது.

எல்லா வழிகளும் அடைக்கப்பட்ட நிலையில், இறுக்கங்கள் ஒருபுறமாகவும் தொடர்ச்சியான படையெடுப்புகள் இன்னொரு புறமாகவும் அன்றைய நாட்கள் மிகப்பயங்கரமானவையாக இருந்தன. சுற்றி வளைத்து இறுக்கத்தை மேலும் மேலும் இறுக்கி ஒரு சிறு வட்டத்திற்குள் எல்லாரையும், எல்லாவற்றையும் கொண்டு வந்திருந்தார்கள் படையினர். அன்றைய அந்தப்பயங்கர நாட்கள் எப்படியிருந்தன? அந்த நாட்களில் எப்படியெல்லாம் இருந்தோம் என்பதற்கு ஒரு சாட்சியமாக, ஒரு பதிவாக, ஒரு அடையாள நன் முயற்சியாக 'சுடர்' என்றொரு மலர் வெளியிடப்பட்டிருக்கிறது.

சுடர் ஒரு முக்கியமான வெளிப்பாட்டு அடையாளம்.

ஒடுக்குமுறையின் உச்ச விசையைச்சனங்கள் சந்தித்த காலம் எப்படியிருக்கும் என்பதற்குச் சுடர் நல்லதொரு பதில். சிங்களவர்கள் தமிழர்களின் மீது அன்றைய நாட்களில் எப்படியெல்லாம் போரை நடத்தினார்கள்என்றும், போரின் பேரால் எப்படியெல்லாம் நடந்துகொண்டார்கள் என்பதற்கும் ஒரு சாட்சிக் குரல் அது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை ' சுடரை' வெளியிட்டிருக்கிறது.

சுடர் ஒரு காலகட்டத்தின் நிகழ்வுகளைப்பதிவாக்கியிருக்கிறது. அந்த நிகழ்வுகளின் ஊடாகவும், அந்த நிகழ்வுகளில் பங்கேற்றவர்களின் ஊடாகவும் பல சேதிகளைச்சொல்கிறது.

'சத்ஜெய' நடவடிக்கையோடு கிளிநொச்சி நகரம் முற்றாக அழிந்துபோனது. அப்போது அந்த நடவடிக்கை தொடங்கிய போதே முதலில் இலக்குவைக்கப்பட்ட குறி அங்கிருந்த வைத்தியசாலைதான். 1996 ஜூலை 17ஆம் திகதி வைத்தியசாலையை நோக்கிய ஷெல்லடியுடன் தொடர்ந்த இடப்பெயர்வு அக்கரயானை நோக்கி எல்லாவற்றையும் நகர்த்தியது - இடம் பெயர வைத்தது. அப்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் MSF பணியாற்றிக்கொண்டிருந்தது. கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலை, அக்கராயனிலுள்ள கிராமிய வைத்தியசாலைக்குக்கொண்டுசெல்லப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்டு செயற்படத்தொடங்கியது. MSF மல்லாவிக்குப்போய்விட்டது. போதிய வசதிகளற்ற நிலையில் பெருந்தொகையான அகதிச்சனங்க ளையும் தாங்கிக்கொண்டு எப்படி அக்கராயனில் மருத்துவச்சேவை நடந்தது என்பதுதான் சுடர் சொல்லும் கதை.

அகதிகள் எல்லா இடங்களிலிருந்தும் வன்னியை நோக்கி, பாதுகாப்பு உணர்வோடு வந்த சனங்கள் வன்னியின் பெருநகரமாயிருந்த கிளிநொச்சி படையெடுப்புக்குள் சிக்குண்ட போது அங்கிருந்து லட்சக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்து அக்கராயன்- ஸ்கந்தபுரம் பகுதிக்கும் அதனையண்டிய ஊர்களிலும்தான் பெருமளவில் குடியேறினார்கள்.

தொழிலில்லை,வருமானம் இல்லை, போவதற்கு இடமில்லை, வாழ்வதற்கு வழியில்லை, பசி, நோய், போசாக்கின்மை, நுளம்புக்கடி, பாம்புக்கடி, வெள்ளப்பெருக்கு, சுத்தமான நீரின்மை மனநெருக்கடிகள்,உறவுகளின் ஆதரவற்ற நிலை என்று விரிந்த அவல வாழ்க்கை எல்லோரையும் அடிக்கடி வைத்தியசாலைக்கே அனுப்பியது. பலர் திரும்பத்திரும்ப வைத்தியசாலைக்கே வந்தார்கள். பலருக்கு நோய் குணமாவதற்குரிய போசாக்கின்மை. பலருக்கு மலேரியா திரும்பத்திரும்பத்தாக்கியது.

வருவோருக்குரிய நோய்களைத்தீர்ப்பதற்கான மருந்துகளும் போதியளவில் இருப்பதில்லை. சில மருந்து வகைகள் முற்றாகவே இல்லை.



ஆனால் தினமும் வெளிநோயாளர் பிரிவுக்கு மட்டும் இரண்டாயிரம் பேருக்குமேல் வந்துகொண்டிருந்தார்கள். மருத்துவர்களுக்கும் பெரும்பற்றாக்குறை. வரும் நோயாளரில் முக்கால் வாசிக்கும் மேலானவர்கள் விடுதியில் நின்று சிகிச்சை பெறவேண்டிய நிலையிலுள்ளோர். ஆனால் விடுதிகளில்அதற்குரிய வசதிகளில்லை. இந்த நிலையில் எப்படி அந்தப்பெரும் நெருக்கடிகளை சமாளிக்கவும் தீர்க்கவும் முடிந்தது என்றும் முயற்சியெடுக்கப்பட்டது எனவும் சொல்கிறது சுடர்.

நூலின் பெயர்:- சுடர்
பதிப்புரிமை :- இதழாக்கக்குழு கிளிமாவட்ட சமூகசுகாதார அபிவிருத்திச்சபை
முதற்பதிப்பு:- மே 2002



கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார
அபிவிருத்திச்சபையின் ஐந்தாவது ஆண்டு நிறைவுச்சிறப்பிதழ்

அன்றைய நாட்களில் வைத்தியசாலை சந்தித்த அனுபவங்களை வைத்தியசாலையில் வேலை செய்தவர்களே எழுதியிருக்கிறார்கள். அக்கராயனுக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இடம்பெயர்ந்தபின், அக்கரயானிலிருந்து அது இயங்கியபோது அதன் மீது படையினர் மேற்கொண்ட ஷெல்லடியும் பதிவாக்கப்பட்டுள்ளது. தவிர, நேயாளர் தொகை, பெரும்பாலும் அவர்கள் எத்தகைய நோய்களால் தாக்கப்பட்டார்கள், திரும்பத்திரும்ப அவர்கள் நோய்களால் தாக்கப்படவேண்டிய காரணமென்ன? வைத்தியசாலையில் நிகழ்ந்த பிறப்பு வீதம்+இறப்பு வீதம்,வைத்தியசாலையிலிருந்த வளங்கள், ஆளணிப் பிரச்சினை என எல்லாவற்றையும் தரவுகளோடு பதிந்திருக்கிறார்கள்.

ஏற்பட்ட நெருக்கடி நிலையை சமாளிக்கவும் உதவியற்ற நோயாளர்களுக்கு உதவவும் ஒரு உபாயமாக உருவாகிய சமூக சுகாதார அபிவிருத்திச்சபை வெளியேயிருந்து - மக்களிடமிருந்தே உதவிகளைப் பெற்றது. பொதுநிறுவனங்கள், வர்த்தகர்கள், தொண்டர் அமைப்புகள் என்பவையும் அந்த அபிவிருத்திச் சபைக்கு உதவியிருக்கின்றன. அபிவிருத்திச்சபை நோயாளர் பராமரிப்பையும் செய்திருக்கிறது.

அத்தோடு, மேலதிக சிகிச்சைக்காக வவுனியா, அனுராதபுரம், கண்டி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைக்குச்செல்லும் வசதியற்ற நோயாளருக்கு உதவிப்பணத்தை கொடுத்து அவர்கள் சிகிச்சை பெறவும் உதவியிருக்கிறது. முதலில் மேலதிக சிகிச்சை பெறவேண்டிய நிலைமையிருந்த போதும் கையில் சிறு தொகைகாசு கூட இல்லையே என்ற காரணத்தால் பலர் வெளியேறுவதைத்தவிர்த்து வந்தனர். அபிவிருத்திச்சபையின் உதவி இதற்கு மிகமுக்கியமாக இருந்தது. இவையும் இங்கே பதியப்பட்டிருக்கின்றன.

நெருக்கடிமிக்க ஐந்தாண்டுகளில் - யுத்தத்தின் அந்த நாட்களில் பொதுச்சுகாதாரத்தரப்புச்சந்தித்த அனுபவங்களின் பதிவை சுடர்தான் செய்திருக்கிறது.

யுத்த களமருத்துவப்பதிவுகளை போராளிகள் பல சந்தர்ப்பங்களிலும் பதிவாக்கிவருகிறார்கள். ஆனால் அப்போது பொதுச்சுகாதார தரப்பின் பிரச்சினைகளையும் பொது மக்களின் மருத்துவப்பிரச்சினைகளையும் வேறெங்கும் எவரும் பதிவாக்கியதாகவோ வெளிப்படுத்தியதாகவோ தெரியவில்லை.

வன்னியில் அதிலும் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டம் யுத்த நாட்களில் சந்தித்த மருத்துவப்பிரச்சினைகளின் பதிவாகத்தான் சுடர் இருந்தாலும் இதுஒரு முக்கியமான ஆவணமாகவும் பல சேதிகளைச் சொல்லும் ஒரு சாட்சிக்குரலாகவும் இருப்பது கவனிக் கத்தக்கது.

இந்த மலரில் வைத்தியசாலையின் பணியாளர்கள், பொறுப்பதிகாரிகள், மருத்துவர்கள் தொடக்கம் அபிவிருத்திச்சபையைச் சேர்ந்தோர்கள் மற்றும் அதன் சூழலுடன் இணைந்த படைப்பாளிகள், பொது அமைப்புகள், நிறுவனங்களைச் சேர்ந்தோர், அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள அதிகாரிகள் என்று சகல தரப்பினரும் தங்கள் அனுபவங்களுக்கூடாகவும் தாங்கள் அவதானித்தவைகளுக்கூடாகவும் பல விடயங்களை கூறியிருக்கின்றனர்.


விடுதலைப்போராட்டத்தின் போதான யுத்தகாலமொன்றில் ஏற்பட்ட மருத்துவநெருக்கடியை எவ்வாறு மக்கள் எதிர்கொண்டார்கள் என்பது தான்சுடர் தருகின்றசாரம். ஒரு மக்கள் மயப்பட்ட நடவடிக்கையின் மூலமே இவையெல்லாம் சாத்தியமாகியிருக்கின்றன என்பது இதற்கூடாக நமக்குக்கிடைக்கின்ற சேதி.

இவையெல்லாவற்றுக்கும் ஒருமையமாக நின்று செயற்பட்ட மாவட்ட வைத்தியஅதிகாரி Dr. ச. விக்னேஸ்வரனும் அவரோடு இணைந்து நின்ற அனைவரும் மெய்யாகவே பாராட்டப்படவேண்டியவர்கள்.

சுடரை நீங்கள் நிச்சயம் வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். அது நமது கடந்த காலத்தின் ஆய்க்கினைகள் நிறைந்த வாழ்க்கையின் நிரூபணம். நாங்கள் எதிர்கொண்ட போரினதும், போர்முறையினதும் அடையாளம். உலகத்திற்கு அதனூடாகப்பல செய்திகளை ஆதாரத்தோடு சொல்லத்தக்கசான்று.

**கருணாகரன்**

# வளரும் பயிர்



ஒண்டு...ரண்டு....மூண்டு...
நாலு...அஞ்சு....
ஆறு.....
..............

சங்கக்கடையில்
வாங்கிய அரிசிக்குள்
ஒன்றொன்றாய்ப்
பொறுக்கியெடுத்த பயறு
காக்கிலோ தேறும்

'என்ர செல்லம்
எலிக்குஞ்சுச் செட்டியார்
மாதிரி
நாளைக்குப் பெரிகிய
பணக்காரியாய் வரும்"

அம்மா புடைக்கத் தந்த
அரிசிக்குள் பொறுக்கிச்
சேர்த்த
பயறு
என் வீட்டுத்தோட்டத்தில்
பயிரானதைக் கண்டு
அம்மா வாயாரப் பாராட்டினவா

பயிர் விளைந்த
பணம் கைக்கு வந்தால்
கம்யூட்டர் வாங்கலாம்
கவிதை எழுதலாம்

பயிருடன் போட்டியாய்
என்னாசையும் வளர்ந்தது.
ஐயோ........

அயல் வீட்டுக் கோழி
வேலியேறிக் குதித்து
என் பயிரை
அழித்து விட்டது.

கோழிக்கு நானென்ன
கொடுமை செய்தேன்?

சுயமாய் முன்னேற
விரும்பியது குற்றமா?

அயல் வீட்டான்
எம்மை வாழவே
விட மாட்டானா?

செட்டியார்களை உருவாக்கும்
காலம் மலையேறிவிட்டதா?

நிவாரணப் பிச்சை தான்
எமக்கிங்கே நிரந்தரமா?

குப்பையைக் கிளறும்
கோழியா அறியும்
வாழ்தலின் பெறுமதி?

**ஞா.மணிமேகலை**

# எவருக்காவது தெரியுமா?

எல்லாவற்றுக்கும்
நிறங்களும் மணங்களும்
உண்டு
நல்லது நறுமணம்
கெட்டது துர்மணம்
இரண்டையும் முகர்வது
மூக்கு
நுகரவும்
ஒதுக்கவும் தீர்மானிப்பது
மனது
மனதின் மணமும் நிறமும்
எவருக்காவது தெரியுமா?

தேயிலைக்கொழுந்து
பச்சை
அரைத்தபிறகு கறுப்பு
அதன் சாயம் சிவப்பு
அருந்தினால் தெம்பு

மனித நெஞ்சுகளிலிருக்கும்
நஞ்சு,
பொறாமை,
எரிச்சல்,
கொதி,
என்பனவற்றின்
நிறமும் மனமும் என்ன!?



**ஆவரங்கால் சுதன்**



# இளையநாதம்

## குட்டிக்கதை

## புதுமனிதனாக...

அந்தப் பாடசாலையில் குணாவும், அறிவும் ஒரே வகுப்பில் படித்து வந்தனர் இருவரிலும் அறிவுபடிப்பிலும், விளையாட்டிலும், பொதுவிடயங்களிலும் கூடக் கெட்டிக்காரி. வகுப்பில் நடைபெறும் பரீட்சைகளில் அவள் தான் முதன்மைப் பெறுபேற்றைப் பெறுவாள். அதனால் அவளைத் தெரியாத மாணவர்கள் இல்லை. எவ்விடயங்களிலும் அவள் மிகவும் கெட்டிக்காரி. பலரிடம் பாராட்டுக்களையும் பெற்றிருந்தாள்.

எப்படியிருந்தும் குணாவுக்கு மட்டும் அறிவைப் பிடிப்பதில்லை. அவள் பலரிடம் பாராட்டுக்களைப் பெறுகின்றாள்என்ற பொறாமை குண்ாவிற்கு. குணா அறிவைப் போன்று வளர வேண்டுமென்று முயற்சி செய்வதில்லை.

அறிவு வகுப்பில் கெட்டிகாரியாக இருக்கிறாள் என்பதை மட்டும் அவனால் தாங்க முடியாமல் இருந்தது.

ஒரு நாள் ஆசிரியர் கட்டுரை எழுதும்படி கூற 'குணா 'விசித்திரமான பெண்' என்ற தலைப்பில் அவளைப்பற்றியே தாறுமாறாய் எழுதினான். அதை மாணவர்களுக்கும் வாசித்துக் காட்டினான். அறிவுக்கு அது தான் என்பது விளங்கியது.

அறிவு ஆத்திரப்படவில்லை. அவனுக்காய் வருந்தினாள். குணாவைக் கூப்பிட்டாள். குணா ஒருவர் முன்னுக்கு வருவதையிட்டுப் பொறாமைப்படக்கூடாது. அவர்களைப்போல் நீயும் வர முயற்சிக்க வேண்டும். அதை விட்டுட்டுப் பொறாமைப்படுவதனால் ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை என்று நட்போடு விளக்கிக் கூறினாள்.

குணாவும்புரிந்து கொண்டான். தான் புரியாமல் இவ்வளவுகாலமும் இருந்திருப்பதை எண்ணி வருந்தினான். அன்றிலிருந்து பொறாமையை அகற்றி புது மனிதனாக வாழத் தொடங்கினான்.

இ.சுடரொளி

# விடுகதைகளும் விடைகளும்

*01.* இலை உண்டு கிளை இல்லை. பூ உண்டு மணம் இல்லை. காய் உண்டு விதை இல்லை. பட்டை உண்டு கட்டை இல்லை. கன்றுண்டு பசு இல்லை அது என்ன?

வாழை மரம்

02. தோளிலே ஏறியிருக்கும் தொங்கலிரண்டும் தொங்கும் ஆளை உருப்படுத்தி அலங்காரமாயிருக்கும். அது என்ன?

சால்வை

03. மண்ணிலே மரம். மரத்திலே குளம். குளத்திலே நெய் நெய்யிலே கொடி. கொடியிலே பூ பூவிலே புகை அது என்ன?

குத்து விளக்கு

04. உச்சியில் குடுமியுண்டு. மனிதனல்ல உடம்பெல்லாம் உரோமமுண்டு குரங்குமல்ல. உருள் விழிகள் மூன்றுண்டு சிவனும் இல்லை. உருண்டையான வடிவமுண்டு முட்டையல்ல அது என்ன?


தேங்காய்

05. உச்சி சலசலக்கும் உடல் கறுத்து நீண்டிருக்கும் நிமிர்ந்து பார்த்தால் கழுத்து வலிக்கும் அது?

பனைமரம்

சு.லயாசினி
கிளி/ம.வி

# நகைச்சுவை




"நேற்று எதுவரை பாடம் நடத்தினேன் என்று ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டார் வகுப்பு ஆசிரியர். உடனே ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து.

"நேற்று 2.55 மணிவரை தான் சேர் பாடம் நடத்தினீங்கள்" என்றான்.

சு.கௌரீஷன்

## புள்ளிகளை இணைத்து உருவத்தைக் கண்டுபிடியுங்கள்





# வினோத உயிரினங்கள்

பறக்கும் முலையூட்டி - வௌவால்கள்
பல்லில்லதாத முலையூட்டி - தேவாங்கு
பித்தப்பையில்லாத முலையூட்டி - எலி
அதிக நீர் அருந்தும் பறவை - புறா
மிகச்சிறிய முட்டையிடும் பறவை - தேன்சிட்டு
கடல் நீர் பருகும் பறவை - பென்குவின்
ஞாபக சக்தி கூடியவிலங்கு - ஒட்டகச்சிவிங்கி
நீல நிறம் உடைய கடல் உயிரினம் - நண்டு, றால
கண்கள் மூலம் வியர்வை வெளியேற்றும் விலங்கு - முதலை
தோலினால் சுவாசிக்கும் ஊர்வன - மண்புழு

க.சுபீதா, தரம் -05,
ஜெ/அ.த.க.பாடசாலை.

# நாடு கண்டவை




நன்றி :- Funday Times




# வாரம் ஒரு குறள்

ஈதல் என்பது எல்லோரும் அறிந்ததே ஆயினும் எல்லோராலும் செய்ய முடியாததாகவே உள்ளது. ஏனெனில் இன்றைய நாகரீக உலகில், இல்லாதவர்களுக்கு கொடுப்பதென்பது இல்லாமலேயே போய்விட்டது. இருப்பவர்களுக்கு கொடுப்பதே இன்று மேலோங்கியுள்ளது. இது பலனை எதிர்பார்த்து செய்யப்படுவதால் எல்லோராலும் செய்யப்படக் கூடியதாக கருதப்படுகின்றது. ஆனால் இந்தவகையில் அடுத்தவருக்குக் கொடுத்தல் ஈதல் ஆகாது.கொடுக்கல் வாங்கலாகவே இருக்கும். இதை விடுத்து நாம் இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவப்பழக வேண்டும். இதற்கான குறளாக

**"வறியவர்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து"**

என்று வள்ளுவர் கூறியதைக் கவனிப்போம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 30




### இடமிருந்து வலம்

01. மன்னன்.
07. சீதனம்.
13.திருக்கேதீஸ்வரம் இங்கே உள்ளது.
23. வீட்டுமிருகம்.
28. முறம்.
32. பாம்பு குளம்பியுள்ளது.

### மேலிருந்து கீழ்

01. மானத்திற்கு எதிரானது.
06. கற்பகத்தரு
11. ஊதியம்.
14. காதணி.
21. பூ

## குறுக்கெழுத்துப்போட்டி இல.28 இன் விடைகள்

### இடமிருந்துவலம்

01. குண்டலகேசி.
07. செருக்கு
13. கடகம்.
20. பம்பரம்.
27. மரணம்.
31. பூ
33. பாசம்.

### மேலிருந்துகீழ்

01. குருடன்.
02. செண்பகம்.
06. சித்திரம்.
22. பாரம்.
23. பணம்.

## குறுக்கெழுத்துப்போட்டி இல.28 இன் பரிசுக்குரியவர்

**கா. தனுஷான், தரம் -04A, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை.**

## குறுக்கெழுத்துப்போட்டி இல.28இன் பாராட்டுக்குரியவர்கள்.

01. முல்லை, 4ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
02. பெ.கார்த்திகா, ஸ்கந்தபுரம்.
03. வி. விஷ்ணுஜன், 'ஸ்ரீரங்கம்' கொக்குவில் மேற்கு.
04. ஜஃபர்ஜவசியா, வவுனியா.
05. வே. நந்தினி (மாதுளா) பூநகரி.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.30
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# பாட்டி சொன்ன கதையினிலே

வடையை எடுத்த காகமொன்று
வாகாய் மரத்தில் இருந்ததுவாம்
வழியால் வந்த நரியதுவோ
பாடச் சொல்லிக் கேட்டதுவாம்
பாவம்! காகம் வாய் திறந்து
பாடிட வடையும் விழுந்ததுவாம்
வடையை வாயால் நரி கௌவி
வாலை ஆட்டி ஓடியதாம்.
பாடிய காகம் ஏமாந்து
விழிகள் கலங்கிப் போனதுவாம்.

## தம்பிப் பாப்பா கதையினிலே....

கடையில் வடையைக் காகமொன்று
கவ்விக் கொண்டு பறந்ததுவாம்
ஆலமரத்துக் கிளையினிலே
அதுபோய் அழகாய் அமர்ந்ததுவாம்
வழியால் வந்த நரிபார்த்து
காக்கா! காக்கா! பாடுவாயாம்
பாட்டொன்று அழகாய்ப் பாடென்ன்
வடையைக் காலால் பற்றியதாம்
வாயப்பார்த்துப் பாடியதாம்
வாயைப் பார்த்த நரி திரும்பி
காட்டைப் பார்த்து ஓடியதாம்.

கண்ணன்

பகுதி–03



## தொடர்கதை

### அத்தியாயம் -02

## பிளானறி ஓ கொணரின்

# இடம் பெயர்ந்தவன்

சு.மகேந்திரன்

மிஸிஸ் மக்கின்ரயரின முகம், மதக்கோட்பாடுகளினால் ஏற்பட்ட திடமான உணர்வினால் சிகப்பானது. முன்பு அவளது தா யாரை, பாலுணர்வு பற்றிய பேச்சுக் கள், எப்படி உணர்ச்சிவசப்படுத் துமோ, அதேபோல் கிறிஸ்து என்ற சொல் அவளை உணர்ச்சி வசப்படவைத்தது. 'கௌசக்போவ தற்கு ஒரு இடமில்லாவிட்டால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. உலகிலுள்ள மேலதிக ஆட்களு டைய பொறுப்பை எல்லாம் நான் சுமக்க முடியாது.

இவற்றை எல்லாம் கிழ வர் செவிமடுத்ததாகவே தெரிய வில்லை. அவரது கவனமெல்லாம் அந்த ஆண்மயிலிலேயே பதிந் திருந்தது. அது சிறு அடியாக வைத்து, மறுபுறமாக நகர்ந்து, விரிந்துகிடந்த தோகையை தனது தலையால் தொட்டது, 'என்ன மாதிரியான உருவமாற்றம்' என் றார் பாதிரியார்.

அவர் எதைப்பற்றிப்பேசு கிறார் என மிஸிஸ் மக்கின் ரயரு க்கு விளங்கவில்லை. 'முதல் காரி யம், இங்குகௌசக்கை கொண்டு வந்திருக்கவே தேவையில்லை' என முறைத்தபடி அவள் கூறினாள்.

இன்னும் சில வாரங்களு க்கு சோட்லிதிரும்பவும் எஸ்ரேற் றிற்குவராமல் விட்டிருந்தால், வேலை செய்வதற்கென வேறு ஒருவனைத்தேடும் வேலை, மிஸிஸ் மக்கின்ரயருக்கு ஏற்பட்டி ருக்கும், அவளுக்கும் அவனைத் திரும்பவும் வேலைக்கு வைத் திருக்க விரும்பமில்லைத்தான். பரிட்சியமுள்ள அந்தக்கார் றோட்டால் வந்து, அவளது வீட்டின் முன்நின்ற போது, தானே ஒரு நீண்ட பரிதாபகரமான பயணத்திலிருந்து திருப்பித்தனது சொந்த இடத்திற்கு வந்தது போன்ற உணர்வு அவளுக்கு உண்டாகியது. மிஸிஸ் மக்கின்ரயருக்கு அப்போது தான் மிஸிஸ் சோட்லியின் உறவை தான் இழந்து விட்டிருந்த உணர்வு சட்டெனப்புரிந்தது. மிஸிஸ் சோட்லி அங்கிருந்து சென்ற பின்பு, பேச்சுத்துணைக்கு எவருமே அவளுக்குக்கிடைக்க வில்லை. அவள் மிஸிஸ் சோட்லி தனது பெரியஉடலை அசைத்து அசைத்து படிக்கட்டுகளால் ஏறி வருவதை காண கதவுப்பக்கமாக வந்தாள். கறுத்தத்தொப்பியுடன், சிவப்பு மற்றும் நீலநிறங்களில் ஈச்ச மரங்கள் வரையப்பட்டிருந்த சேட் டையும் அணிந்துகொண்டு, தனியா ளாக சோட்லி அங்கு நின்றான், அவனது முகத்திலிருந்த பள்ளங் கள் ஒரு மாதகாலத்துக்கு முன் னிருந்ததை விட, ஆழமாகியிருந் தன. முகம் கெட்டுநொந்து கொப்ப ளங்களுடன் திகழ்ந்தது.

'நல்லது மிஸிஸ் சோட்லி எங்கே' என்றாள் மிஸிஸ் மக்கின் ரயர்.

'இறந்துவிட்டாள்' இங்கி ருந்து வெளியேறிய அன்று அவ ளுக்கு ஸ்ரோக் ஒன்று ஏற்பட்டது. ஒரு சவத்தின் சாயல் அவனது முகத்தில்தெரிந்தது. நான் அந்தப் போலிஸ்காரனைத்தான் அவளது சாவிற்கு காரணம் சொல்வேன். அவன் தான் அவளைக்கொன்று விட்டான் என்றே நினைக்கிறேன்.

அவனுக்கு அவள் பிசாசிடமிருந் துள்ளான் எனத்தெரிந்திருந்தது. அவள் அப்படித்தான் என்னிடம் கூறியிருக்கிறாள்.

மிஸிஸ் சோட்லி இறந்த அதிர்ச்சியிலிருந்து மீளமிஸிஸ் மக்கின்ரயருக்கு மூன்று நாட்க ளெடுத்தன. "அவர்கள் தனது சுற்றத்தவர்கள் என்றே எவரும் நினைத்திருப்பார்கள்" எனத்தனக் குள் கூறிக்கொண்டாள். அவனது மனைவி அங்கு இருக்கமாட்டாள் என்ற இந்தப்புதியநிலையில், சோட்லியை வேலைக்கு அமர்த்திக் கொள்ள மனவிருப்பமில்லாம லிருந்ததும், அவனைத்தோட்ட வேலைக்கமர்த்தினாள். மாத இறுதியில் வேலையிலிருந்து நிறுத் துவதற்கான முன் அறிவித்தலை கௌசக்கிற்கு கொடுக்கப்போவ தாகவும், அதன்பின்னர் கால்நடைப் பராமரிப்பை சோட்லி எடுத்துக் கொள்ளமுடியும் எனவும், சோட் லிக்குக்கூறினாள். தொழுவத்தில் வேலைசெய்வதையே சோட்லி விரும்பியதால், அதற்காக காத் திருக்க அவன் தயாராக இருந் தான். போலிஸ்காரன் அங்கிருந்து போய்விட்டால், அதுவே தனக்கு ஓரளவிற்காயினும் திருப்தியைத் தருமென சோட்லிசொல்ல, அதுவே தனக்கும் மிகப்பெரிய அளவிலான நிம்மதியைத்தரும் என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர். ஏற்கனவே இருந்த உதவியாளர்களில் தான் திருப்தி யடைந்திக்க வேண்டும் எனவும், அதைவிட்டுவிட்டு உலகின் வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்களை உதவிக்கு அமர்த்திக்கொண்டது பிழைதான் எனவும், அதற்காக மன்னிப்புக்கேட்டுக்கொண்டாள்.

தான் வெளிநாட்டவரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை எனவும், அவர்கள் முதலாவது மகாயுத்தத்தின் போது நடந்து கொண்ட விதத்திலிருந்து, அவர் களை மட்டிட முடியும் எனவும் சோட்லி கூறினான். அவர்களில் பல ரைக் கண்டுவிட்டதாகவும், எவ ருமே எம்மவரைப்போலில்லை எனவும், தனக்கு கைக்கிரினைட் ஒன்றை எறிந்தவனது முகம், நினைவுகூர்ந்தபோது அது கௌசக் கினது போல் வட்டமான மூக்குக் கண்ணாடி அணிந்த முகமாக இருந்ததாகவும் சோட்லி கூறினான்.

'ஆனால் கௌசக் ஒரு போலிஸ்காரன் யேர்மனியன் அல்ல' என்றாள் மிஸிஸ் மக்கின் ரயர்.

'அவர்களில் பெரியதாக எந்த விதவேறுபாடுகளுமில்லை' என சோட்லி விபரித்தான்.

நீகிரோக்களும் சோட் லியின் வரவால் மகிழ்ச்சியடைந் தனர். இடம் பெயர்ந்தவன் தன் னைப்போல் நீகிரோக்களும் கடுமை யாக உழைக்கவேண்டும் என எதிர்பார்த்தான். சோட்லியோ அவர் களின் வரையறையைத்தெரிந்து வைத்திருந்தான். அவனே ஒரு போதும் நல்லதொரு உழைப்பாளி யாக இருந்ததில்லை. மிஸிஸ் சோட்லி முன்பு அவனை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தாள். அவள் இப்போது இல்லை. ஆகை யால் முன்பை விட எல்லாவற்றை யும் மறந்துவிடுபனாகவும், மெதுவாகச் செயல்படுபவனாகவும் சோட்லி மாறியிருந்தான்.

தான் வெளியேற்றப்படப் போகிறேன் எனச்சிறிதேனும் சந் தேகம் கொள்ளாமல், முன்பு போலவே முனைப்பாகச்செய்து கொண்டிருந்தான். இடம்பெயர்ந் தவன் வேலைகளை அவள் ஒரு போதுமே முற்றுப்பெறாது என எண்ணியிருந்த வேலைகள் எல்லாம், மிக விரைவிலேயே முடி ந்து வந்தன. ஆனால் கௌசக்கை தொலைத்துக்கட்டுவது என்ற தீர் மானத்தில், மிஸிஸ் மக்கின்ரயர் மாறாதிருந்தாள். அவ்விடத்தில் விறைத்த அவனது உருவம், அவசரத்துடன் அங்குமிங்கும் அலைந்து திரிவதே எல்லாவற்றிற் கும் மேலாக அவருக்கு ஒரு வகை எரிச்சலைக்கொடுத்திருந்தது. "தன்னை அந்த வயதான பாதிரி யார் நன்றாக ஏமாற்றிவிட்டார்" என எண்ணிக்கொண்டாள். "அவன் திருப்தியைத்தராவிட்டாலும் கூட, அதைப்பொருட்படுத்தாது, அவ னைக்கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்ற சட்டத்துடன் கூடிய கடமைப்பாடு ஏதும்யாரு க்குமில்லை என்றாலும் கூட, மானசீகமான கடமைப்பாடு ஒன்று எல்லோருக்கும் உண்டு" என பாதி ரியார் கூறியபடியிருப்பார்!

"தனது மானசீகமான கடமைப்பாடு, சோட்லிபோன்ற சொந்த நாட்டுக்காக சண்டையிட்ட தனதாட்களுக்கே உரியது, கௌக் கைப்போல் சொந்த லாபங்களுக் காக என்ன என்ன கிடைக்கின்ற னவோ, அவற்றை எல்லாம் அனுப விக்க வந்திருக்கும் இவர்களுக் கானதல்ல என்று இடம்பெயர்ந்த வன் வெளியேறும் போது பாதிரி யாருக்கு கூறிவிட வேண்டு மென வும்" மிஸிஸ் மக்கின்ரயர் நினைத் தாள். அம்மாதத்தின் முதலாம் திகதி வந்தபோது பாதிரியார் வராததால், போலிஸ்காரனுக்கு கொடுக்க வேண்டிய முன்னறிவித்தலை, சிறிது காலத்துக்கு பின்போட வேண்டிவந்தது.

சோட்லி தான் எப்போ துமே "ஒரு பெண் எதைச்செய் வேன் எனக்கூறுகிறாளோ, நிச்சய மாக கூறியபடி செய்யவே மாட் டாள்" என்பதை தெரிந்து வைத்திரு க்க வேண்டும் என்று தனக்குள்ளே கூறிக்கொண்டான். "அவளது உறுதியற்ற தன்மையை, எவ்வளவு காலத்துக்குத்தன்னால் பொறுத் துக்கொள்ள முடியுமென்று" அவனால் தீர்மானிக்கமுடியவி ல்லை. "அவள் இப்போது மனமிள கிய ஒரு பெண்ணாக மாறியிரு ப்பதுபோலவும், அத்துடன் போலி ஸ்காரனை அங்கிருந்து வெளியேற் றப்பட்டால், அவனுக்கு வேறு ஒரு வேலை அமைவது கடினமாக இருக்குமென அவள் பயப்படுகி றாள் எனவும்," சோட்லிக்குத் தோன்றியது. இதில் உள்ள உண் மையை உணர்ந்துகொள்வான். தானும் தனதுமனைவியும் மட்டுமே வெள்ளை இன உதவியாளர் களாக இருந்தபோது இல்லாம லிருந்த சுருக்கங்கள் அவளது முகத்தில் தோன்றியுள்ளதை அவன் அவதானித்தான். எப்போதும் மிஸிஸ் சோட்லியைப் பற்றிச்சிந் திக்கும் போது, ஒரு பழைய வாளி வற்றிய கிணற்றுக்குள் போவது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்படுவதுண்டு.



(தொடரும்)

## ஊக்க மாத்திரை

# வெற்றியின் பாதைகள் கரடுமுரடானவை அதைத்தாண்டி வெற்றியில் மகிழ்வோம்

வகுப்பில் முதல் மாணவனாக வரவேண்டும் என்ற ஆசை யாரு க்குத்தான் இல்லை. ஒரு வகுப் பில் பல கெட்டிக்காரர்கள் இருப பார்கள். பல புத்திசாலிகள். இருப் பார்கள். கிட்டத்தட்ட சமபலம் உள்ளவர்களில் யாரோ ஒரு மாணவன்தான் முதலாவதாக வரு கிறான். இவனது வெற்றியின் இரகசியம் தான் என்ன? கஷ்ரப் பட்டுபடித்து முன்னேறியிருக் கிறான். அதாவது வெற்றி இலக கைநோக்கிய பயணத்தில் கஷ்ர ங்களைச்சகித்து முன்னேறியிருக் கிறான்.

தாலாட்டும் தூக்கம், கவர்ந்திழுக்கும் இளமைக்கேயு ரிய சினிமா, ரீவி, றேடியோ மோ கம், பருவ ஈர்ப்புகள் எல்லா வற் றையும் முறியடித்து - அதாவது மனதை கல்வியின் பால் ஒரு நிலை ப்படுத்தி வெற்றியீட்டியிருக்கிறான். சிரமங்களை எதிர்கொள்ளத்தயங் காத எமது மனநிலை தான் வெற் றிகான உரமாகும்.

வெற்றி மீது ஆசை வைக்கும் பல ரும் அதை நோக்கிப்போகும் பாதையைக்கண்டு பயப்படுகிறார் கள். இருப்பதைக்கொண்டு சிறப் புடன் வாழ்ந்தால் போதாதா?' என்று சலிப்போடு வரட்டு வேதா ந்தம் பேசுகிறார்கள்.

உண்மைதான். வெற்றிப் பாதை என்பது கல்லும், முள்ளும் நிறைந்த காட்டுப்பாதைதான். மனத் தைரியத்தோடு காட்டை ஊடறுத்து கல்லிலும், முள்ளிலும், மழையி லும், வெயிலிலும், பசியிலும் தாக த்திலும் பயணம் செய்கின்ற ஒரு வீரபோராளியின் மனநிலை தான் வெற்றியின் பயணம்.

ஆம்! வெற்றியின்பயணம் என்பது வலியும்வேதனையும் நிறைந்தது. முயற்சியையும், உழைப்பையும் உள்ளடக்கியது. ஆலயங்களில் விறகுகளை எரித்து தணல் மீது நடந்து தீக்குளிப்பது போன்ற பயணமே வெற்றிக்கான பயணம். இது எல்லோராலும் முடிவதி ல்லை. ஆனால் எல்லோராலும் செய்யக்கூடியதுதான். ஏன் இந்தச் சிரமம் என்று பலரும் எதிர்வினை யாகச்சிந்திக்கிறார்கள்.

'இது கடினம் வேண்டாம் இந்த முயற்சி' என்று பின்வாங் கும் சலிப்புணர்வு தான் வெற்றி யின் முதல்எதிரி. இப்படியான எதிர் வினையான உணர்வை அடக்கி, மனதிலிருந்து அதை அகற்றி விடுவது தான் வெற்றிச்சிகரத்தை அடைவதற்கான முதற்படியாகும்.

சிரமங்களைக் கண்டு அஞ்சி பின்வாங்குவதை விடுத்து, அச்சிரமங்களை எதிர்கொண்டு, அதைத்தகர்த்து முன்னேறினால் நாம் உயர்ந்த இலக்கை அடை யலாம் - சிலவேளைகளில் நாம் எதிர்பார்த்த இலக்கைவிட இன் னும் ஒருபடி கூடவும் முன்னேறி வெற்றிக்கனிகளை பறித்திட முடியும்.

சிரமம் என்பது கூட ஒரு வகை மனநிலை தான். ஒரு வருக்குச்சிரமமாகத் தெரிவது இன்னொரு வருக்கு இலகுவாகத் தெரிவதும் இவ்வாறான மனநிலையினால் தான். சில மாணவர்கள் படிப்பதைக் கஷ்ரமாகப் பார்க்கின்றார்கள். ஆனால் இன்னும் சிலரு க்கு அதுவே மகிழ்ச் சியாக இருக்கின்றதல்லவா? வாழ்வின் ஒவ்வொரு பயணத் திலும் இப்படியான எண்ண மாறுபாட்டிற்குக் காரணம் மனம்தான்! எனவே எதிலும் மனம் சோராதீர்கள்.

ச.முருகானந்தன்

அதிகம் குறை கூறுபவர்களே, அதிகம் குறை கூறப்படுவற்கு உரியவர்கள் - மேத்யூ ஹென்றி



# பிரியமான மேலங்கி

மிகுதன்

விடுதலைப் போரின் முதல் வரலாற்றைத் தொடக்கி வைத்தவர்களில் ஒருவன். சங்கரின்பின் அடுத்து சரிந்த அந்தப் பெருமலை. அவனது உடல் எங்கோ கடற்கரையில் தகனமானது. எதிரிகள் அவனுடைலை எரித்தனர். எரித்து சாம்பலையும் கரைத்தனர். கரைந்த சாம்பலாலேயே வரலாற்றை எழுதிவிட்டான் சீலன். அவனின் இழப்பென்பது விரல்களில் பெருவிரலின் இழப்பு. நெருக்கடி நிறைந்த போதிலெல்லாம் தோள் கொடுக்கும்: வைத்த பற்றுக் கூட இறுக்கமானதாய் இருக்கும். அந்தப் பெருவிரலில் தம்பிக்கு அழவற்ற அன்பு.

தோழர்கள் எல்லோரும் சோர்ந்திருந்தனர். முகம் வாடியிருந்தனர். இழந்துபோன தவிப்பு. இமைகளில் கூடியிருந்தது. அவர்களின் முகங்களில் தான் தவிப்பு ஆனால் இதயங்கள் அவிந்து கொண்டிருந்தன; அழுதுகொண்டிருந்தன. துரோகத்தில் அவர்களின் தூண் சரிந்துவிட்டது. ஒரு பெருவீரனை கணப்பொழுதில் இழக்க வேண்டியிருந்தது அவர்களுக்கு. உண்மையில் அவர்களால் சீலன் இல்லை என்பதை ஏற்க முடியவில்லை. ஆயிரம்பேர்களில் அவன் ஒருத்தனாக அல்ல. அப்போதெல்லாம் ஆறுபேர்களில் ஒருவன் அவன். "எவ்வளவு அற்புதமானவன் என் சீலன் ஆசையாக அல்லவா அவனுக்கு இதயச்சந்திரன் என்று பெயர் வைத்தேன் இவளவு சீக்கிரமாக என்னை விட்டுப் போனான்! அவனது மரணச் செய்தி பொய்யாகிப் போய்விடாதா! எவ்வளவு கஸ்ரங்களில் உயிருக்குயிராய் துணைநின்றவன''

'தம்பியின' இந்த மன ஓலம் பெருவிரல் இழந்த ஏனைய விரல்களின் தவிப்புதான்.

எல்லோரும் இப்படி இருந்துவிட்டால் அடுத்து என்னசெய்வது! இதற்கு நாம் ஒரு முடிவு கட்ட வேண்டும். நாங்கள் எங்காவது வெளிக்கிடுவம். தம்பியின் குரல் தீர்க்கமாய் ஒலித்தது. காம்பொடிந்து தொங்கிய இலைகளாகி இருந்தவர்களுள் தம்பியின் இந்த குரல் ஒரு புதுத் தெம்பை கொடுத்திருக்கவேண்டும் அனைவரும் நிமிர்ந்து இருந்தனர். ஊன்றியிருந்த கைகளை எடுத்து முன்னால் கட்டிக் கொண்டனர்.

அங்கு இருந்த மூத்த தோழர் ஒருவர் "உணர்ச்சி வேகத்தில் நாங்கள் செயற்பட்டமெண்டா எல்லாரையுமே இப்பிடி இழக்க வேண்டிவரும். நிதானமா. செயற்படுவம்."

"நாங்கள் பழிவாங்க வெளிக்கிடவில்லை.

"இது ஒரு படிமாற்றமாகவே இருக்கட்டும்."

"எங்களைத் தேடித் தேடித் தான் எதிரிஇவ்வளவு காலமும் வந்தான் இனி..."

இனி!

எல்லோரும் தம்பியின் முகத்தில் பதிலை தேடினார்கள். விறைத்திருந்தார்கள். தம்பி உறுதியாக கூறினார். "நாங்கள் நிதானமா இனி எதிரியை தேடுவம்; தாக்குவம்; அழிப்பம்.இது எங்களால் நிச்சயமா ஏலும".

எல்லோரும் இயல்பானார்கள். இப்பொழுது அவர்கள் சோரவில்லை. தவிக்கவில்லை. அழவுமில்லை. சுறுசுறுப்பானார்கள். சீலனின் நினைவுகள் அவர்களை நிறைத்திருந்தது. அவன் விட்டுப்போன வரலாறு அவர்களை ஊக்கப்படுத்தியது. அவனின் இழப்பு ஒரு படிமேலே கொண்டு சென்று விட்டிருந்தது அவர்களை. எதிரியை அவர்கள் தேடினார்கள் ஒவ்வொரு தோழரின் நடையிலும் வேகம் தொற்றிக் கொண்டது. தம்பியின் திட்டம் நிச்சயமாயிருந்தது அவர்களின் மனங்களில்.

தேடல்களில் அவர்கள் மறைந்துவிட்டதால் தேடிய எதிரிகளின் கண்களில் இருந்தும் அவர்கள் மறைந்து கொண்டனர்.

உணவை கண்டுவிட்ட பருந்தாக அவர்கள் மகிழ்ந்தனர். அவர்களில் தேடுதல் வேட்கைக்கு நல்ல சுனையாக அமைந்து விட்டது. அந்த எதிரிகளின் ரோந்து அணி. அவர்களின் தாகத்தை மேலும் அதிகப்படுத்தியது உள்ளிருந்து கனன்ற சீலனின் நினைவு.

அவன் நினைவாய் ஒரு சரித்திரம் படைக்க அவர்கள் அணிவகுத்தனர்; தயாராகினர். திட்டம் செயலாகும் நாளுக்காய்க் காத்திருந்தனர். 23.07.83ல் அன்று தாக்குதலுக்காக புறப்பட்டுப் போன அணியில்'தம்பி' தெளிந்த முகத்துடன் சீலனின் பிரியமான அந்த மேலங்கியை அணிந்திருந்தான். ●



# பொறுக்கி எடுத்த பூக்கள்

## முரண்பா(ட்)டுக்கள்

தூங்காதே தம்பி தூங்காதே
நீ - சோம்போறி என்றபெயர் வாங்காதே.

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

தூங்கமுன் கண்களை தழுவட்டுமே...
அமைதி உன் நெஞ்சில் நிலவட்டுமே....

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

தாலாட்டுப்பாடமாட்டேன் தாலாட்டுப்பாட மாட்டேன்
தமிழீழப்பிள்ளை என் பிள்ளை-அவன்
தலைசாய்த்துத்தூங்க இது நேரமில்லை...

**உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன்.**

## நானே நான் தான்....

'என்னை நான் எந்த இயக்கத்துடனும் இணைத்துக்கொண்டதில்லை. நான் நாளாவட்டத்தில் மிகவும் அமைதியான மனிதனாகிவிட்டேன். நான் வாழ்க்கை பற்றியே எழுதுகிறேன். இதயத்தின் அமைதியும், மனநிம்மதியும் என் அடிப்படைகளாகிவிட்டன. எனக்கு இப்போது வயது 47 ஆகிவிட்டது. எனக்குள் இருந்த காடுதிருத்தப்பட்டுவிட்டது. இருப்பினும் அது அழகாக இருக்கிறது. அது செயற்கையானது அல்ல... வசதியாக வாழ்வதற்காக இங்கும் அங்குமாக சில கிளைகள் வெட்டப்பட்டுள்ளன. அதனாலேயே நான் என் கவிதைகளில் குறைந்த வார்த்தைகளை பயன் படுத்துகிறேன். என் கவிதைகள் மிகவும் எளிமையானவையாகிவிட்டன....

**நெதர்லாந்துக் கவிஞர்,**
**ரிட்ஸ் - டி கூனிங்**

## ஒரு ஜப்பானிய ஹைக்கூ கவிதை

எப்பொழுதும் என்நிலத்தில்

பூஞ்செடிகளை வளர்க்க மாட்டேன்
இவை பூக்கும், வாடும் - பின்
பொழுதிற்குள் உதிர்ந்து விடும்
நன்றியிலாச் சென்மங்கள்...

**சோஷே -**

## ஒரு ஜென் தத்துவம்

பட்டாம் பூச்சிகள் அன்போடு தொடர்கின்றன
மலர்வளையம் சாத்தப்பட்டுள்ளது
சவப்பெட்டியின் மேல்...
ஆமாம் : வண்ணத்துப்பூச்சிகளுக்கு வாழ்வுக்கும்
சாவுக்குமிடையே எந்தவித பேதமுமில்லை.

## ஒரு கல்லறை வரிகள்

இது தெய்வத்தின்
துயிலிடம்,
மௌனமாக... மெல்லமாக
காலடி பதியுங்கள்
என் தாய்...
ஒரு அம்மா...
இங்கே துயில்கின்றாள்

ஒரு கல்லறைச்சுவரில் கரிக்கட்டியால் எழுதப்படிருந்த வாசகம்

## ஒரு பிரகடனம்

போற்றுபவர் போற்றட்டும் - புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்
தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொருகருத்தை எனதுள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்போன் - எவர்வரினும்
நில்லேன் அஞ்சேன்.

**பத்திரிகையாளர்**
**கண்ணதாசன்.**

## ஒரு 'பழ'மொழி

அவன் இறந்து விடுவான். அவன் செருப்பை நான் போட்டுக்கொண்டு வாழலாம் என்று நினைப்பவன் வாழ்நாள் முழுவதும் வெறுங்காலுடனேயே நடப்பான்.

**டேனிஷ் பழமொழி**

*யாழ்ப்பாணத்தில் இன்று மிகவும் சர்ச்சைக்குரியதாக பேசப்படும் இந்த விடயம் தொடர்பாக ஒரு வெளிப்படையான அரங்கை திறந்து விட்டிருப்பதை எண்ணி நிறைவடைகின்றோம். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் துரு.துரு. துருவனின் கட்டுரைக்கு அனுப்பிய பதிலை இங்கு முழுமையாக பிரசுரிக்கின்றோம்.*

*'நன்றி'*

*ஆசிரியர்,*
*வெள்ளிநாதம்.*

ஆசிரியர்,
வெள்ளிநாதம், ஈழநாதம்.
ஐயா,

"யாழ் தேசியப் பாடசாலைகளின் மோசடி நாடகங்கள் அம்பலத்துக்கு" என்ற தலைப்பில் தங்களின் இவ்வார இதழில் எழுதப்பட்ட செய்திக் கட்டுரை ஆதாரம், அடிப்படை ஏதுமின்றி முற்றிலும் தவறான - பொய்யான - அபாண்டமான - குற்றச்சாட்டுகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

அது தொடர்பாக தனிப்பட்ட முறையிலும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் என்ற முறையிலும் உண்மைநிலையைத் தெளிவுபடுத்தி விளக்கம் அறிந்துள்ளேன்.

முன்னைய கட்டுரைக்கு கொடுத்த அதே முக்கியத்துவத்தை இந்த விளக்கத்துக்கும் கொடுத்து அடுத்த இதழில் அதனை முழுமையாகப் பிரசுரிப்பதன் மூலம் பத்திரிகை தர்மத்தைப் பேணுவீர்கள் என உரிமையுடன் எதிர்பார்க்கிறேன்.

நன்றி.
இங்ஙனம்,
ந.வித்தியாதரன்,
(செயலாளர்)

# துரு.துரு துருவன் எழுதிய "யாழ். தேசிய பாடசாலைகளின் மோசடி நாடகங்கள் அம்பலத்துக்கு" கட்டுரைக்கு

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் வித்தியாதரனின் சீற்றமான பதில்

11-17 யூலை 2003 திகதியிட்டு 'ஈழநாதம்' - வெள்ளிநாதம் இதழில் 'யாழ். தேசிய பாடசாலைகளின் மோசடி நாடகங்கள் அம்பலத்துக்கு' என்ற தலைப்பில் 'துரு-துரு-துருவன்' என்பவரால் வரையப்பட்ட செய்திக்கட்டுரை தனிப்பட்ட முறையில் என்னையும் நான் சார்ந்த யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தையும் வேண்டுமென்றே இழிவுபடுத்தும் நோக்கோடு முற்றிலும் உண்மைக்குப்புறம்பான தகவல்களை உள்ளடக்கி - சோடிக்கப்பட்டு - எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கட்டடக்கட்டுமானத்தில் நடந்த மோசடி பாடசாலை மாணவர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது." என்பது முற்றிலும் தவறு.

கட்டடக்கட்டுமானத்தில் எந்த மோசடியும் இடம் பெறவில்லை. மாணவர்கள் மத்தியில் பெரும் விசனம் என்பதும் வேண்டுமென்றே சோடிக்கப்பட்டகட்டுக்கதை.

"1990 இல் இந்தப்பாடசாலையின் பழைய மாணவர் சங்க நிர்வாகம் அமைக்கப்பட்டது" என்று கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறு.

1905 ஆம் ஆண்டு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. "1998 இன் பின்னர் அதன் கூட்டமும் நடத்தப்படவில்லை." என்று கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் தப்பு. 1999 இல் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. யாழ்.நகரத்தை அண்டி, அரியாலை வரை யுத்தம் நடந்த 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் எட்டுப்பத்து மாதங்கள் தவிர ஏனைய காலத்தில் இதுவரை - சுமார் முப்பது- செயற்குழுக்கூட்டங்கள் ஒழுங்காக நடந்துள்ளன. கடந்த 25.05.2003 அன்று நடந்த செயற்குழுக் கூட்டத்தீர்மானப்படி 31.08.2003 அன்று அடுத்த வருடாந்தப்பொதுக்கூட்டமும் கூட்டப்படவிருக்கின்றது.

"பாடசாலைக்கு 77 லட்சம் ரூபா மதிப்பீட்டில் கட்டடம் ஒன்றைக்கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாசெலவில் ஒப்பந்தம் செய்யப்பட்டது" என்று கட்டுரையில் கூறப்பட்டது தவறு.

பல கட்டங்களில் அமையும் மூன்று மாடிக் கட்டடத்திற்கு முதல் கட்டமாகஒரு கோடி ரூபாவிற்கான உத்தேச மதிப்பீட்டிற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது என்பதே உண்மை.

"பழையமாணவர் சங்கமே ஒப்பந்தகாரராகி" என்று கட்டுரையில் குறிப்பிடப்பட்டது தவறு. யாழ். பல நோக்குக்கூட்டுறவுச்சங்கமே யாழ். செயலகத்துடன் ஒப்பந்தம் செய்து ஒப்பந்தப் பொறுப்பை ஏற்றது. அதன் பின்பு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அதனை யாழ்.இந்துக்கல்லூரிக்கு மறு ஒப்பந்தத்திற்கு விட்டது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே தனித்தனி ஒப்பந்தங்கள் சட்டரீதியாகச் செய்யப்பட்டுள்ளன.

கட்டட வேலைக்குரிய கொடுப்பனவை யாழ்.செயலகம் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்துக்கே வழங்கியுள்ளது. இனியும் வழங்கும். அதன் பின்னர் தனது வேலைக்கான பணத்தை யாழ். இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் யாழ். ப.நோ.கூ.சங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும். வங்கி ஆவணங்கள் இதற்குச்சான்று.

"2000யூனுக்குள் இந்தக் கட்டடம் முடிக்கப்பட வேண்டும்" - என்றுகட்டுரையில் குறிப்பிடப்பட்டது தவறு. முழுக்கட்டட வேலைக்கும் அப்படிக் காலக்கேடு எதுவும் ஒப்பந்தத்திலோ அல்லது வேறு வகையிலோ விதிக்கப்படவில்லை.

" E.P.D.Pயின் டக்ளஸ் தேவானந்தாவுடன் இருந்த நெருக்கத்தை வைத்து அவரின் கட்டுப்பாட்டில் இருந்த 'R.R.A.N' நிதியை இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்தலைவரான அரசஅதிபர் சண்முகநாதனும், செயலாளரும் கட்டட அமைப்புக்காக எடுத்தனர்" - என்று கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கத்தின் செயலாளரான நான் 'உதயன்' பத்திரிகையின் இணைஆசிரியராகவும் இப்போது ஆசிரியராகவும் பணியாற்றி வருபவன். இந்தப்பணியின் காரணமாக எனக்கும் E.P.D.P க்கும் இடையில் (1999 இல் நான் செயலாளராக தெரிவான காலம் முதல் 2001 டிசெம்பர் தேர்தலில் ஈ.பி.டி.பி பெரும் தோல்வியடையும் வரையான காலத்தில்) எத்துணை கருத்து முரண்பாடு, கோபதாபங்கள் இருந்தன. என்னுடைய உயிருக்கு உலை வைக்கும் முயற்சிகள் கூட (எனது கல்லூரிக்கு அருகில் வைத்து) மேற்கொள்ளப்பட்டன என்பதெல்லாம் யாழ்.மக்களுக்கும் எனது மண்ணின் விடுதலையை நேசிக்கும் சக்திகளுக்கும் நன்கு தெரியும். அப்படியிருந்தும் எனக்கும் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் அக்காலப் பகுதியில் நெருக்கம் இருந்தது போன்ற மாயத்தோற்றத்தைக் காட்டமுனைவது அதுவும் விடுதலைக்காகப் போராடும் சக்திகள் மத்தியில் இருந்து அத்தகைய முயற்சி எழுவது ஒருபுறம் வேதனையையும் மறுபுறம் வியப்பையும் தருகின்றது.

மேலும் அக்கட்டுரையில் " 85 லட்சம் ரூபா பணம் இவர்களால் பெறப்பட்டுவிட்டது. ஆனால், கட்டடம் இன்னும் முடியவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது முழுவதும் தப்பு.

கட்டட வேலைக்காக இதுவரை எமது சங்கம் பெற்றுக்கொண்ட தொகை 85 லட்சம் ரூபா அல்ல. அதிலும் அதிகம். இதுவரை ஒரு கோடி 34 லட்சத்து 70 ஆயிரம் ரூபா. யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மூலம் இக்கட்டடத்துக்காக எமக்குச் செலுத்தப்பட்டுள்ளது. இந்தக்கட்டட வேலை தொடர்பாக யாழ்செயலகத்தின் பெயரில் வெளியான தகவலில் தவறு இருப்பதும் அதில் குறிப்பிட்டதை விட மேலும் 48லட்சம் ரூபா எமக்குச்செலுத்தப்பட்டிருப்பது குறித்தும் நாமே யாழ். செயலக அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம்.

"முடிந்த கட்டட வேலைதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் முடிந்த வேலையின் பெறுமதி 45லட்சம் ரூபாவாகும். மிகுதி40 லட்சம் ரூபாவுக்கான வேலை எங்கு என நலன் விரும்பிகள் கேட்கின்றார்கள்" - என்று கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருப்பதும் அடிப்படை அற்றது.

இதுவரை முடிந்த கட்டடவேலை தொடர்பாக வேறு யாரும் உத்தியோகபூர்வமாக மதிப்பீடு செய்யவில்லை. சுமார் ஒன்றரைக்கோடி ரூபாவுக்கான பணி - கட்டட வேலையில் 80 சதவீதப்பணி முடிவுற்றிருப்பதாக எமது சங்கம் மதிப்பீடு செய்துள்ளது. அது பற்றிய விவரங்களை - உரிய ஆவணங்களுடன் - யாழ்.ப.நோ. சங்கம் மூலமாக யாழ்.செயலகத்தில் சமர்ப்பித்துள்ளோம். யாழ். செயலக நிர்மாணப் பொறியியலாளர்கள் மூலம், முடிவுற்ற கட்டடப்பணிகளை ஆரம்பத்திலிருந்து முழுதாக மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை யாழ்.அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். இருவாரங்களுக்குள் அவரது அறிக்கை வெளியாகும் என எதிர்பார்க்கிறோம். அப்போது கட்டி முடிக்கப்பட்ட கட்டுமானப்பணியின் உண்மையான மதிப்பீடு வெளியாவதோடு எம்மால் பூர்த்தி செய்யப்பட்ட கட்டுமானப் பணிக்கான எஞ்சிய பணமும் எமக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கிறோம்.

சுமார் ஒன்றரைக் கோடியளவில் முடிந்துள்ள மிகப்பெரிய கட்டுமானப்பணியை உரிய மதிப்பீடு செய்யப்படாத நிலையில் 45 லட்சம் ரூபா வேலையே முடிந்துள்ளதாக குறிப்பிடுவதற்கு ஏதேனும் ஆதாரத்தை கட்டுரையாளரால் தரமுடியுமா எனக் கோர விரும்புகிறோம்.

"1998 இன் பின் கூட்டப்படாத பழைய மாணவர் சங்கக்கூட்டத்தை கூட்டுமாறு யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 75 பழைய மாணவர்கள் கையெழுத்திட்டு கடிதம் அனுப்பினர். யாப்பின்படி 30 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கோரினால் சங்கம் கூட்டப்படவேண்டும். ஆனால் சங்கத்தைக் கூட்ட பழையமாணவர் சங்கம் தயாராகவில்லை எனத்தெரிவித்துள்ளது" - என்று கட்டுரையில் கூறப்பட்டு இருப்பதிலும் தவறுகள் நிறைய.

"1998 இன் பின் அல்ல. 1999 ஆம் ஆண்டின் பின்னரே வருடாந்தப்பொதுக்கூட்டம் கூட்டப்படவில்லை. 2000 ஆம் ஆண்டில் யுத்தம் காரணமாக பொதுக்கூட்டம் கூட்டும் முயற்சிதடைப்பட்டது. அதன் பின்னர் பெரிய கட்டுமானப்பணி ஒன்று தொடர்ந்ததால் கூட்டத்தை கூட்டுவது சற்று தாமதமாகியது.

பழையமாணவர்கள் என 75 பேரின் பெயர்களும் ஒப்பங்களும் குறிப்பிட்டு - கூட்டத்தை கூட்டுமாறு யாப்பை மேற்கோள் காட்டி - அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்ள பெயர்களில் ஓரிருவரைத்தவிர வேறு எவரினது பெயரும் எமது சங்கஉறுப்பினர்களின் பட்டியலில் இல்லவேஇல்லை. சங்கஉறுப்பினர்கள் அல்லாத பெயர்களில் இருப்போர் சங்க யாப்பின் கீழ் கூட்டத்தைக் கூட்டுமாறு கோருவது குறித்து சங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்கமுடியுமா?

அத்தோடு " சங்கத்தை கூட்ட பழைய மாணவர் சங்கம் தயாராகவில்லை எனத்தெரிவித்துள்ளது." எனக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி சங்கத்தின் நிர்வாகிகளோ, சங்கமோ யாருக்கும் தெரிவிக்கவில்லை.

சங்கஉறுப்பினர்கள் அல்லாதோரின் பெயரில் வரையப்பட்ட கடிதம் என்ற ரீதியில் கூட்டத்தைக் கூட்டுவது குறித்து அவர்களுக்கு சங்கம் உத்தியோக பூர்வமாக பதிலளிக்கவில்லையே தவிர, அந்தக்கடிதத்தில் இடப்பட்ட திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே 25.05.2003 அன்று நடந்த செயற்குழுக்கூட்டத்திலேயே - சங்க ஆண்டுப் பொதுக் கூட்டத்தை ஓகஸ்டில் நடத்துவது என்றும் செயலாளர் அறிக்கை மற்றும் பொருளாளர் அறிக்கை ஆகியவற்றின் தயார் நிலையையும், நல்லூர்த் திருவிழா நாட்களையும், கல்லூரி நிர்வாகத்தின் வசதிகளையும் கருத்திற்கொண்டு கூட்டத்திற்கான சரியான திகதியை தீர்மானிக்கும் பொறுப்பை செயலாளரிடம் ஒப்படைப்பது என்றும் செயற்குழு முடிவு செய்துள்ளது.

உண்மை நிலையை உணர்ந்த பாடசாலையின் உயர்தர மாணவர்கள் 1500 பேர் கையெழுத்திட்டு சங்கத்தைக் கூட்டுமாறு கேட்டுள்ளனர். ஆனால், சங்கம் கூட்டப்படவில்லை" என்று கட்டுரையில் கூறப்பட்டிருப்பது நகைப்புக்குரியது.

தரம் 6 முதல் உயர்தர வகுப்பு வரையுள்ள இப்பாடசாலையில் மொத்த மாணவர் எண்ணிக்கையே சுமார் 1,700தான். அதிலும் உயர்தரம் படிப்போர் 750பேர் இருப்பார்களோ என்பது தெரியாது. அப்படி 1,500பேர் இருப்பதாக ஒரு பேச்சுக்கு வைத்துக்கொண்டாலும் அவர்களின் ஒப்பத்தோடு கடிதம் ஏதும் சங்கச்செயலாளரான எனக்கு கிடைக்கவில்லை. அப்படிக்கிடைத்தாலும் கூட பழையமாணவர் சங்கவிவகாரத்தில் பாடசாலை மாணவர் பங்களிப்புக்குறித்து சிந்திக்க வேண்டியிருக்கும்.

எனினும், வேறு சில விவகாரங்கள் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் அல்லாதோர் பாடசாலைக்குள் கையெழுத்து வேட்டைக்கு முயற்சித்ததாக சில தகவல்கள் எமக்குக்கிடைத்தன. பாடசாலை நற்பெயரை பேணும் பொறுப்பு எமக்கு உள்ளது என்ற கடப்பாடு காரணமாக வேறு சிலர் மீதான உண்மைக்குற்றங்களை பகிரங்கமாக ஆராயாமல் தவிர்க்கும் போக்கில் அவற்றை இங்கு குறிப்பிடாமல் விடுகிறேன்.

பாடசாலை சமையலறைக் கட்டட விடயம் தொடர்பாக கட்டுரையாளரின் குற்றச்சாட்டும் முற்றிலும் தவறானதும் அபத்தமானதுமாகும் என்பதும் எமக்கு உறுதியாகத்தெரியும். எனினும், அந்த விவகாரத்தோடு எமது சங்கத்துக்குத் தொடர்பு ஏதும் இல்லை என்பதால் அவற்றை விளக்குவதைத்தவிர்க்கிறேன்.

"அமெரிக்க பழைய மாணவர் சங்கம் பாடசாலை பழைய மாணவர் சங்கத்திற்கு 5,000 அமெரிக்க டொலர்களை அனுப்பியிருந்தது. அது பற்றி எந்தவிதப்பதிலும் தமக்கு இல்லை என அமெரிக்க பழைய மாணவர் சங்கம் கூறுகின்றது" - என்று கட்டுரையில் கூறப்பட்டிருப்பதும் தப்பானது.

அமெரிக்கப் பழைய மாணவர் சங்கம் அனுப்பியதொகை 4,000ஆயிரம் அமெரிக்க டொலர் (அப்போதைய பெறுமதியில் 2லட்சத்து 92ஆயிரம் ரூபா) கல்லூரி அதிபருக்கு ஊடாக எமது வங்கிக் கணக்கில் இப்பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதிபரின் கோரிக்கைக்கு ஏற்ப - அவரது சிபாரிசில் வரும் - பெரும் தொகை செலவினங்களுக்கு எமது சங்கம் தொடர்ந்து கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது. அமெரிக்க பழைய மாணவர் சங்கம் தனது உதவு தொகையை கல்லூரி அதிபர் ஊடாக அனுப்பியதோடு, அதன் மேல் நடவடிக்கைகள் குறித்துத்தங்களுடன் கருத்துப் பரிமாறிக்கொள்ளும் படி அதிபரையே பெயர் குறிப்பிட்டு எழுத்து மூலம் கோரியிருந்தது.

எனவே, மேலதிக விளக்கத்தையோ தகவல்களையோ கொடுக்கவேண்டிய பொறுப்பு எங்களுடையதல்ல. எனினும் அவ்வாறு செய்யும்படி அதிபரோ அல்லது அமெரிக்க பழைய மாணவர்சங்கமோ எம்மைக் கேட்டிருந்தால் அதைச்செய்ய நாம் பின்நின்றிருக்கவும் மாட்டோம்.

"பிரிட்டன் பழைய மாணவர் சங்கம் 23 லட்சம் ரூபாவை அனுப்பியிருந்தது. நீண்டகாலமாக இதற்கு என்ன நடந்தது எனத்தெரியாமல் இருந்தது, பிற்காலத்தில் பிரிட்டன் பழைய மாணவர்சங்கம் இது பற்றிக்கேள்வியெழுப்ப அப்போதுதான் அப்பணம் வைப்பிலிடப்பட்டது. அதுவரை அப்பணம் யாரிடம் வட்டிக்குக் கொடுக்கப்பட்டது என நலன்விரும்பிகள் கேள்வி எழுப்புகின்றனர்" - என்று கட்டுரையில் பச்சைப்புளுகு கட்டவிழ்த்துவிடப்படிருக்கிறது.

கடந்த ஆண்டு மார்ச்சில் திகதியிடப்பட்ட கடிதத்தோடு அனுப்பப்பட்ட இக்காசோலை ஏப்ரல் மாதம் எமக்குக்கிடைத்தது. அதன் பின்னர் நடந்த எமது செயற்குழுக்கூட்டத்தீர்மானத்துக்கு அமையவும் நிதியை அனுப்பிய லண்டன் சங்கத்தலைவர், பொருளாளர், உபதலைவர் ஆகியோரின் கோரிக்கைக்கு ஏற்பவும் கடந்த ஆண்டு மேமாதம் நிலையான வைப்பில் அது இடப்பட்டுள்ளது. லண்டனில் இருந்து அனுப்பப்பட்ட அந்தக் காசோலை Realise பண்ணிய திகதியிலிருந்து நேரடியாக எமது சங்கத்தின் பெயரில் நிலையான வைப்பில் இருப்பதோடு இப்போது இவ்வாண்டின் வட்டியோடு சுமார் 25 லட்சத்தை அதன் பெறுமதி தாண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட காசோலை மாற்றப்பட்டு பணமாக்கப்படவுமில்லை. வங்கியிலிருந்து பெறப்படவுமில்லை. அது யாருக்கோ வட்டிக்குக் கொடுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு அபாண்டமானது ஆதாரமற்றது.

"இந்தப்பழைய மாணவர் சங்கத்துடன் அதிபர் ஒத்துவராத காரணத்தால் அவரை மாற்றுமாறு சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது" என்று கட்டுரையில் கூறப்பட்டிருப்பதும் கற்பனையின் அடிப்படையில் அமைந்தது.

பாடசாலை சமூகத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டிய - களத்தில் இயங்குகின்ற - ஓர் அமைப்பு என்ற முறையில் பாடசாலையின் நலன் குறித்து சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கடப்பாடு பழைய மாணவர் சங்கத்துக்கு உண்டு.

வட தமிழீழத்தில் மட்டுமல்லாமல் முழுத் தமிழ் இனத்தினதும் பெருங்கல்வித் தாயாக விளங்குபவள் யாழ். இந்து அன்னை. அவளது செயற்பாட்டில் பழையமாணவர் சங்கமான எமக்கு மட்டுமல்ல, தமிழீழக்கல்விக்கழகம், கல்வி மேம்பாட்டுப் பேரவை போன்ற கல்விக் காவலர்களுக்கும் அதீத அக்கறை உண்டு.

எனவே, அதிபருக்கு எதிரான முறைப்பாடு விடயத்தில் எமது சங்கத்தின் செயற்பாடு மற்றும் போக்குக்குறித்து ஈழநாதம் போன்ற விடுதலைக் குரல்கள் இந்தக் கல்விக் காவலர்களோடு கலந்தாலோசித்து உண்மையை அறிய முற்பட்டிருப்பார்களாயின் இப்படி எழுதியிருக்கமாட்டார்கள் என்பது உறுதி.

"அதிபரை விசாரிக்கவென அமைச்சிலிருந்து குழு வந்தது, ஆனால் குழுவை முன்னதாக அழைத்துச் சென்ற பழைய மாணவர் சங்கம், அவர்களுக்கு சிறப்பான விருந்து வழங்கிக் கௌரவித்தது" என்பது அப்பட்டமான முழுப்பொய். விசாரணைக்கு முன் அதன் உறுப்பினர்களை, சங்கப் பிரதிநிதிகள் எவரும் சந்திக்கக் கூடவில்லை. அதற்கு மாறாக விசாரணைக்கு ஆள்கள் அழைக்கப்பட்ட விதம், விசாரணைக்குழு குறித்து எமது சங்கத்துக்கு சந்தேகத்தைத் தருகிறது என்று விசாரணைக் குழுவை நேரடியாக எழுத்தில் குற்றம் சுமத்தி - தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக்கு பிரதியுடன் - கடிதம் ஒன்று எமது சங்கத்தால் விசாரணைக் குழுவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஒரு மறைமுகமான முரண்பாட்டு நிலையுடன்தான் விசாரணைக் குழுவை எமது சங்கஉறுப்பினர்கள் எதிர்கொண்டனர் என்பது தான் முழு உண்மை.

"இப்படியாக அடாவடிகள் அங்கு தொடர, கட்டட மோசடி தொடர்பாக யாழ்.அரசஅதிபர் செ.பத்மநாதன் அறிக்கை ஒன்றை சிறிலங்கா புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்குக் கொடுத்திருந்தார்" - எனக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு அடாவடிகள் ஏதும் இடம்பெறவில்லை.

யாழ்.இந்துக்கல்லூரி விடுதிக்கட்டடத்தில் மோசடி இடம்பெற்றதாக யாழ். அரசஅதிபர் தெரிவிக்கவில்லை. மீண்டும் ஒரு தடவை அவருடன் தொடர்புகொண்டு கட்டுரையாளர் இதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். கடைசியாக வழங்கப்பட்ட தொகைக்கான கணக்கு விவரம் இன்னும் செயலகத்துக்கும் கிட்டவில்லையென்றே அவர் குறிப்பிட்டுள்ளார். அதுவும் சில மாதங்களுக்கு முன்னர் அவர் அனுப்பிய அறிக்கையில் அது இடம்பெற்றிருந்தது. இப்போது அவர் சார்பில் கோரப்பட்ட கட்டடவேலைகள் பற்றிய - ஆவணங்கள் யாழ்.செயலகத்துக்கு வழங்கப்பட்டு, வேலை மதிப்பீடு செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் அறிக்கை எமது சங்கம் தொடர்பாக "துரு.துரு,துருவன்" வரைந்த கட்டுரையின் நச்சு நோக்கை அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டும் என எதிர்பார்க்கிறோம். அதற்கு அதிக காலம் செல்லாது. ஓரிருவாரங்கள் போதுமென எதிர்பார்க்கிறோம்.

ஈழத்தமிழரின் ஞானக்களஞ்சியமாகிய யாழ். இந்துவை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றுவதற்கான வரலாற்றுக்கடமை எமது சங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதனை நமது தாயகத்தின் கல்விக் காவலர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அவர்களின் ஆசியோடும் ஆதரவோடும் - நீதி, நியாயமான முறையில் - எமது கல்வித்தாயின் எதிர்கால எழுச்சியை உறுதிப்படுத்த நாம் முயன்றுள்ளோம். அதைத்திசை திருப்பி-திரித்துக்காட்டி - சிலரின் பதவிக்கதிரைகளைத்தக்க வைக்கும் முயற்சியாக எம் மீது அபாண்டமான பழிசுமத்தும் நடவடிக்கை சிலரால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும், எமது பாடசாலையின் பெயர் அவமானமாகிவிடக்கூடாது என்பதற்காக அவற்றைப் பகிரங்கமாக விவரித்து, விளக்கி, பிரச்சாரம் செய்வதைத் தொடர்ந்து தவிர்த்து வருகிறோம்.

ஆனால், நான் ஒரு குறிப்பிடத்தக்க பத்திரிகையாளன் என்ற முறையில் என் மீது இயல்பாகவே காழ்ப்புணர்வு கொண்டிருக்கக்கூடிய வேறு பத்திரிகைகளை இத்தகைய சிலர் தொடர்ந்து பயன்படுத்தி வருவதும் அவர்களின் பொய்ப்பிரச்சாரத்திற்கு அப்பத்திரிகைகள் முண்டு கொடுத்து முக்கியத்துவம் கொடுப்பதும் விசனத்துக்குரியன.

விடுதலைப்போருக்கு ஆதரவானவன் நான் என்ற தங்கள் கருத்துக்காரணமாக-எனக்கு எதிரான பிரச்சாரம் என்ற நோக்கோடு-இத்தகைய திரிபு வேலைகளுக்கு 'தினமுரசு' போன்ற உள் நோக்கம் கொண்ட பத்திரிகைகள் இசைந்து போவதை - அதற்காககளம் அமைத்துக் கொடுப்பதை என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது.

ஆனால், 'ஈழநாதம்' போன்ற பத்திரிகைக்கும் அதுவா போக்கு? 'நீயுமா புரூட்டஸ்?' என்று தான் கேட்கத் தோன்றுகின்றது.

சரியான விசாரணைகள் நடந்தால் பசப்புரையை பரப்புரையாக்கும் விசமிகளின் உண்மைச் சொரூபம் அம்பலமாகும் என எதிர்பார்க்கிறோம். நாம் வேண்டுவதும் அதுவே.

ந.வித்தியாதரன்.
(செயலாளர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்)

பிரமாண்டங்களை அள்ளித் தெளித்தும், கோடிக்கணக்கான ரூபாய்களை விரயம் செய்யும் தமிழக வர்த்தக சினிமா சூழலில், மெகாசீரியலில் மூலம் மகாஜனங்களை மந்த புத்திக்குள்ளாக்கும் விசச் சூழலில் தமிழீழத்தில் இருந்து வெளிவந்திருக்கிற அற்புதமான சினிமா 'கடலோரக் காற்று' என்றால் அது மிகையாகாது. நீண்ட இடைவெளிக்குப் பின்பு வெளிவந்திருக்கும் படம் இது. வீடியோபடம் என்றாலே- அது நாடக பாணியில் தான் அமைந்திருக்கும், அதில் காட்சிப்படுத்தல்களை வெளிப்படுத்துவது கடினம் என்ற கூற்றுக்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு சினிமா என்ற மொழி, இலக்கணங்களை உள்வாங்கி காட்சிக் கவிதையாக வீசியிருக் கிறது. கடலோரக்காற்று. சில தொழில்நுட்பகுறைபாடுகளையும், கலைநுட்பகுறைபாடுகளையும் கொண்டுள்ளபோதும், அதன் எளிமைத் தன்மைக்காகவும், சினிமா என்ற மொழியை புரிந்து கொண்டு அதனை படைப்பாற்றலுடன் வெளிப்படுத்தியிருக்கும் இயக்குநர் கேசவராஜனின் திறமைக்காகவும் நாம் கடலோரக் காற்றையும் அதன் கலைஞர்களையும் பாராட்டியே தீர வேண்டும்.

தமிழீழ சினிமா தனக்கான தனித்தன்மையுடன் மிளிர்வதற்கான வீரிய வித்து ஊன்றப்பட்டுவிட்டது. 'காற்று வெளி', 'செவ்வரத்தம்பூ', 'இனி', போன்ற நல்ல குறும் படங்களைத் தந்த தமிழ்சினிமா இன்று அதன் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்திருக்கிறது. மண்ணும், மண் சார்ந்த போராட்டங்களும் அதில் போராளிகளும் மக்களும் கொண்டுள்ள உறவுகள், மனித உணர்வுகள், மானுட விழுமியங்கள், போன்ற பல கோணங்களில் இருந்தெல்லாம் இவை பேச முனைகின்றன. குறும் படங்கள் இவற்றை தமக்கேற்ற மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிப்படுத்தின என்றால் கடலோரக்காற்று அதைத்தாண்டி ஒரு முழு நேரத் திரைப்படமாக வெளிவந்திருக்கிறது. ஏற்கனவே உருவான நல்ல குறும் படங்களின் தாக்கம் கடலோரக் காற்றில் வெளிப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் தமிழக தமிழ்சினிமாவிலிருந்தும் தனக்கான சில அம்சங்களை தேர்ந்தெடுத்திருக்கிறது. அவற்றை வர்த்தக சினிமா என்றோ அல்லது குப்பைகள் என்றோ ஒதுக்காமலும் அதேநேரத்தில் தமிழீழ சினிமா பாரம்பரியத்தில் நின்று கொண்டு மண்வாசனையுடன் வீசியிருக்கிறது 'கடலோரக்காற்று'. இது தான் இதன் கலைரீதியான வெற்றியாகிறது. பிரச்சாரரீதியான படங்கள் வெறும் பிரச்சாரம் என்றளவிலேயே குறுகிப்போக காற்றுவெளி, கடலோரக் காற்று, செவ்வரத்தம்பூ போன்ற படங்கள் சிரஞ்சீவியாக நிலைத்து நிற்கப் போகின்றன. அது மட்டுமல்லாமல் அவைதான் தமிழீழத் திரைப் படங்கள் என்ற தேசிய அடையாளத்தையும் பெற்றுத்தரப்போகின்றன. இவை குறித்தெல்லாம் நீண்ட மதிப்பீடுகள், விமர்சனங்கள் செய்யப்பட வேண்டும். இது விமர்சகர்களும் படைப்பாளிகளும் இணைந்து பணியாற்ற வேண்டியகளம். அதற்கு சற்று நீண்ட காலமும் தேவைப்படும். எனவே கடலோரக்காற்று மதிப்பீட்டுடனே இதனை நான் தற்போதைக்கு நிறுத்திக்கொள்கிறேன்.

யார் இவர்கள்? கைகளில் மலர்களை ஏந்திய வண்ணம் கடலை நோக்கிச்செல்கிறார்கள். இளம் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள், நடுத்தர மனிதர்கள், என்ற சிறிய கூட்டம் தான் அந்த கடலோர கிராமத்து மக்கள். அவர்கள் மெல்ல மெல்ல அடியெடுத்து அலையை அண்மித்தவுடன் குனிந்து மலர்களை அலைகளில் தவழ விடுகிறார்கள். மற்றவர்க்காய், தமக்காய் மரணித்த அந்த மனிதப்பிறவிகளுக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள். அவர்கள் ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாய் சிறியகூட்டம்தான். ஆனால் அவர்களில் பலமுகங்களைப் பார்க்கின்றோம். தாய், தந்தை, உற்றார், நண்பர், போராளிகள், காதலி, சகோதரி என ஒருவருக்கே

# தமிழீழத்திலிருந்து வீசிய




சுவிஸில் இருந்து
அனலை- அரிகரபுத்திரன்

பல முகங்கள். அந்த கூட்டத்தில் சம்மாட்டியாரும் இருக்கிறார். அவரிடம் வட்டிக்கு கடன்வேண்டி தொழில் புரியும் மீனவனும் நிற்கிறான். பள்ளி மாணவ மாணவிகளும் நிக்கிறார்கள் புலம் பெயர்ந்து வந்து தொழில் புரியும் மீனவன் 'மட்டக்கிளப்பான்' நிற்கிறான். ஆக இவர்கள் தான் சமூகம். கமறா இப்போ கீழிறங்குகிறது. அவர்களின் கால்களையும். அதில் மலர்கள் வந்து தழுவித்தழுவி



விலகிச்செல்வதையும் காண்பிக்கிறது. அடுத்த காட்சி சகோதரியின் முகம் நெருக்கமாகத்தெரியும் பின்னணியில் அவளது தம்பி அவள் கூப்பிட்டும் நில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறான். இந்தக்காட்சி படத்தின் இறுதியில் இடம்பெறும் காட்சி. இந்த காட்சி ஒன்றே போதும் இதன் தரம் குறித்து உணர.

கதை இதுதான். யுத்தம் நடந்து கொண்டு இருக்கும் காலகட்டம். கடலலைகள் வந்து தாலாட்டும் அழகிய கடலோரக்கிராமம். அங்கே மீன்பிடித்தொழிலையே பிரதானமாக கொண்ட சில குடும்பங்கள், ஆண் போராளிகளின் ஒரு அணியின் முகாமும், பெண்போராளிகளின் ஒரு அணியின் முகாமும் அமைந்திருக்கின்றன. ஆண் போராளிகள் அணியில் நாலைந்து பேரில் ஒருவன் மட்டும் சற்று வித்தியாசமானவன். நகைச்சுவையுணர்வு நிரம்பியவன். அதிக மனித நேயம் கொண்டவன். இவனுக்கும் அவனது சகபோராளிகளுக்கும் இடையேயான போராட்ட உணர்வையும், கிண்டலும் கேலியும் கலந்த வாழ்வை எடுத்துச்சொல்கிறது ஒரு பகுதிக்கதை. மற்றைய இரண்டு குடும்பங்களில் ஒரு குடும்பம் சம்மாட்டியார் குடும்பம், மற்றது அவரை அண்டிப்பிழைக்கும் நடுத்தர குடும்பம். சம்மாட்டியாருடைய மகனும் மற்றைய குடும்பத்துப்பெண்ணும் காதலிக்கிறார்கள். அவளது தங்கை அங்கு தொழில் புரியும் பாவனையில் இரகசியமாக வந்து இருக்கும் போராளிகளில் உள்ள ஒருவன் மேல் காதல் வயப்படுகிறாள். இன்னொருவர் சற்று முதிய மனிதர் தனிக்கட்டை தனியே வாடியமைத்து வாழ்கிறார். இவருடன் புலம்பெயர்ந்து வந்து அந்த கிராமத்து மக்களிடையே ஐக்கியமாகிவிட்ட இன்னொரு தனி மனிதன் மட்டக்கிளப்பான். இந்த பலதரப்பட்ட மனிதர்களின் வாழ்வில் யுத்தம் குறிப்பாக கடற்படை ஏற்படுத்தும் அனர்த்தங்கள். கிராமத்து மக்கள், தமக்கிடையில் கொண்டுள்ள உறவுகள், முரண்கள், போராளிகளுடனான அவர்களது பிணைப்புகள் இவைதான் இப்படத்தின் கதை. பல்வேறு முரண்களுடன் நெருக்கடிகளுடன் வாழும் இந்த மனிதர்களுடன் பம்பலாக வாழ்ந்த இளைஞர்கள் திடீரென காணாமல் போவதும் அவர்கள் தமக்காக மரணித்தார்கள் என்ற நிதர்சனமும் அவர்களை விழிப்படையவைக்கிறது. தேடிச்சோறு நிதமும் திண்டு பல சின்னஞ் சிறுகதைகள் பேசிக்கூடிக் கிழப்பருவம்எய்யும் வேடிக்கை மனிதராய் தாம் வாழ்கையில் தமக்காய் சிலர் மரணிப்பது எல்லாவற்றையும் கடந்தது. அவர்களை ஒற்றுமைப்படுத்துகிறது. ஆவர்கள் ஒவ்வொருவரும் தமக்காய் மரணித்த அந்த இளைஞ்களுடன் ஏதோவொரு விதத்தில் உறவுடையவர்கள். இறுதிக் காட்சியில் அவர்கள் இணைந்து வருவது இதையே குறிக்கிறது.. நிஜத்தில் எப்படியோ? ஆனால் திரைப் படப்படைப்பில் கேசவராஜன் என்ற கலைஞன் தன்னலங்களற்ற ஒரு சமூகத்தையே கனவு காண்கிறான். திரைக்கதையமைப்பும் இந்தப் படத்தை பொறுத்தவரையில் வெற்றியென்றே சொல்லவேண்டும். இன்னும் கறாறாகச் சொன்னால் இத்திரை ஓவியத்தின் வெற்றிக்கு மூல காரணமே அதன் தெளிவான திரைக்கதை அமைப்புத்தான். அதே நேரத்தில் வித்தியாசமான திரைக்கதை அமைப்பும்கூட. பல்வேறு பிரிவினரின் கதைகளையும் தனித்தனியே அதற்கேயுரிய முக்கியத் துவத்துடன் சொல்லியும், அதேவேளை அதன் மைய இழை பிசகாமலும் சொல்லப்பட்டிருக்கிறது. கதாநாயகன், நாயகி அல்லது சில முக்கியபாத்திரங்கள் என்ற மைய நேர்கோட்டு முறையில் கதை சொல்லப்படாமல் இருப்பது இதன் விசேசம். இதில் எல்லாப்பாத்திரங்களுமே முக்கியத்துவமானவை தான். இந்த வித்தியாசமான அணுகு முறையினால்தான் இயக்குநர் தானொரு சிறந்த படைப்பாளியாகவும், கலைஞனாகவும் முத்திரை பதிக்கிறார்.

நடிப்பு, நடிகர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் அந்தந்த பாத்திரங்களாகவே வாழ்ந்திருக் கிறார்கள். ஒப்பனை பூசிய முகங்கள் இல்லாமல் நாம் சந்திக்கும் நமது சமூக மனிதர்களாகவேயுள்ளார்கள். நடிகர்களுக்கு ஏற்ற பாத்திரங்களைத் தேடாமல், பாத்திரங்களுக்கேற்ற நடிகர்களை தேடியிருக்கிறார் இயக்குநர். அதில் வெற்றியும் கண்டுள்ளார். நண்பர்களை (சகபோராளிகளை) மக்களை நேசிக்கும் 'நீதி' என்ற அந்தப் போராளியின் பாத்திரம் கச்சிதம். நகைச்சுவை இரட்டையர்களாக வரும் அந்த வெற்றுடம்பு மனிதர்கள் இருவரின் நடிப்பும் சற்று மிகையாக தோன்றினாலும் அது தேவையான ஒன்று என்றே கருதுகின்றேன். ஏனெனில் எல்லாமே இயல்பு யதார்த்தப் பாணியில் அமைந்திருந்தால் அது வரட்சியாகத் தானிருக்கும். அதேவேளை அது எல்லைகடந்தால் கேலிக்கூத்தாகவும் போய்விடும். இது அவர்களின் நடிப்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. கடலில் கடற்படையிடம் சிக்கி அந்த இரு நண்பர்களும் மரணத்தின் தறுவாயில் நிற்கையில் தனது நண்பனை கடலில் தள்ளி 'தப்பிப்போ' என்று கூறிவிட்டு தான் மரணத்தை எதிர்கொள்கிறான் அந்த 'மட்டக்கிளப்பான்' கோமாளிகளாகவும், நாடோடிகளாகவும் வாழ்ந்த அந்த மனிதர்களின் நட்பு நம்மை நெகிழச் செய்கிறது. அவனது மரணமும் தற்கொடை போராளிக்கு குறைந்ததல்ல. அதேபோல போராளி நண்பர்கள் தாங்கள் தற்கொடைத் தாக்குதலுக்கு போகும் பொழுது நீதியை மட்டும் 'நீ பஞ்சிபிடிச்சவன', 'உனக்கு உது சரிவராது நீ இரு நாங்கள் போறம்' என அவனைத்தவிர்த்துவிட்டு போவது ஒன்றும் தற்செயலானது அல்ல. அது அவர்கள் அவன் மேல் கொண்ட நட்பாலும், பாசத்தாலும் நேர்வது. சகமனிதர்களை நேசிக்கும், நகைச்சுவை உணர்வு நிரம்பிய, எதிரியை கூட மனிதாபிமானத்துடன் கவனிப்பதோடு அவனுக்கு சிகரட் வேண்டிக்கொடுக்கும் நீதிதான் எதிரிகளை அழிக்க தற்கொலைப் போராளியாகவும் செல்கிறான். இது தான் வாழ்வின் முரண். இந்த பாத்திரப்படைப்புக்கள் மூலம் தற்கொலைப்போராளிகள் பற்றிய இறுக்கமான பார்வைகள் தகர்த்தெறியப் பட்டிருக்கிறது.

காதலையும் கூட அந்தந்த மண்வாசனைக்கேற்ப அந்தந்த வெளிப்பாட்டு வடிவங்களுடன் வெளிப்படுத்தும் போதுதான் அதுகூட உயிரோட்டமான கலைப்படைப்பாகிறது. காதலிக்கும் இரண்டு ஜோடிகளில் ஒன்று கைகூடுகிறது. மற்றது இனிய நினைவாகவே நின்று விடுகிறது. குடிதண்ணீர் எடுக்கச்செல்லுமிடம் காதலர் சந்திக்கும் இடங்களாகவும், முதல் சம்பாத்தியத்தில் காதலிக்கு காப்பு, சட்டை வாங்கித் தருவதும் காதலை வெளிப்படுத்தும் மண்ணின் அடையாளங்கள். பழங் காலத்தில் காதல்விடுதூது புறாக்கள் என்றால், நவநாகரீக சமூகத்தில் ஈமெயில் என்றால் கடலோரக் காதலர்களுக்கு நண்டு விடுதூது. இயக்குநரின் முத்திரைகளுக்கு இப்படி ஏராளமான காட்சிகள்ளச் சொல்லலாம்.

ஒளிப்பதிவை செய்துள்ள கிருபாவின் தனித்தன்மை படம் முழுவதும் காட்சிகளாய் விரவியுள்ளது. கடலுக்கும் கடல் சார்ந்த கிராம மக்களுக்குமிடையிலான உறவும் பிணைப்பும் உயிரோட்ட மானது. தமிழீழத்தின் அழகான அந்த கடலையும் அந்த கிராமத்தையும் அதன் மக்களையும் அவற்றுக்கிடையிலான உறவையும் தனது மாறுபட்ட ஒளிப்பதிவுக் கோணங்களினாலும் காட்சிகளினாலும். உயிரோட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறர் ஒளி இயக்குநர் கிருபா. இதன் மூலம் படத்தின் பல பாத்திரப்படைப்புகளினூடே கடலையும் ஒரு பாத்திரமாக உலாவ விட்டிருக்கின்றார். யுத்தகாலங்களில் ஆழ் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வது ஆபத்தானது.

(மிகுதி அடுத்தவாரம்)

கலை அனைத்தும் இயற்கையைப் பின்பற்றி, இயற்கை போல்தோன்றுவதே -ஸெனெகா

# ஈராக்கிய குடிமகனின் வாக்குமூலம் - 09

*"வெறுப்பு மட்டுமா? கடலில் அமெரிக்கப்பீரங்கிப்படகுகளைக் கண்டால் பல கப்பல்காறர்கள் தமது சிறிய ரக ஆயுதங்களால் சுடத்தொடங்கிவிடுவார்கள். சுட்டுக்கொண்டே ஈராக்கிய எல்லைக்குள் தப்பித்துவிடுவார்கள். எங்கள் எண்ணெயைமறிக்க அவன்யார்?"* என்கிறார் கோபத்தோடு.

அமெரிக்கரை ஈராக்கியரின் எதிரியாகத்தான் அவரின் உரையாடலின்


சதாம்ஹுசைனின் மூத்தமகன் 'உதைன்'

தொனி அதிகம் சித்திரித்தது.அதேநேரம் சதாமின் ஆட்சிமீது வெறுப்பும் விசனமும் கொண்டவராகவும் இருந்தார்.

இதில் முரண் நகை என்னவென்றால் சதாமின் ஆட்சியை கவிழ்ப்பதில் உறுதிபூண்டு நிற்பது அமெரிக்காதான். ஆட்சியை இழுத்துக் கொண்டால் வால்மாட்டிக்கொள்ளும் என்ற நிலைதான் அந்த மக்களுக்கு என்று எண்ணினேன். சதாமைத் தூக்கி எறிய முழுவதும் அமெரிக்காவை ஆதரிக்கவும் முடியவில்லை. அமெரிக்காவை எதிர்த்து தனது ஆட்சியை காப்பாற்றிக் கொள்ளும் சதாமின் செயலை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. இது எல்லா மக்களுக்கும் ஏற்பட்டுவிட முடியாத ஒருவியத்தகு நிலைதான்.

நான் கேட்டேன் ''சதாமின் ஏகபிச்சயமாகக் கருதப்பட்ட ஆட்சியிலிருந்து தமது வாழ் நாளில் என்றாவதொருநாள் விடுபட முடியும் என்று ஈராக் மக்கள் நம்பினார்களா? அப்படி அவர்கள் சிறு நம்பிக்கை தன்னும் கொள்வதற்கு ஏதாவது வழி இருந்ததா?'

*"என்னென்று வரும் வழி? ஆனால் மக்கள் ஒன்றை விரும்பினார்கள். சதாம் மரணமடைந்ததன் பின் சதாமின் நம்பிக்கைக்குரிய மகனாக படையில் இருந்த இரண்டாவது மகன் குவாசி ஆட்சிக்கு வந்தால் அவன் ஓரளவு நீதி நியாயத்தோடு நாட்டை ஆளுவான் என்று எதிர்பார்த்தார்கள்.''*

இந்தச் செய்தி எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சதாமினை வெறுக்குமவர் சதாமின் நம்பிக்கைக்குரிய அவரது வாரிசை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கிற்கு வருவதற்கு என்ன காரணம் இருக்கமுடியும். இது ஒரு அதிர்ச்சிதரும் தகவலாக இல்லையா?

"சதாமின் நம்பிக்கைக்குரிய அவரது வாரிசையே நீங்களோ அல்லது உங்கள் மக்களோ ஓரளவேனும் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதற்கு அடிப்படையான சாத்தியப்பாடு என்ன? இது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதே" என்றேன்.

*"சதாம் எவரையுமே முழுமையாக நம்பும் மனிதரல்ல. தனது பாதுகாப்பின் எல்லாப் பொறுப்பையும் ஏற்றிருக்கும் தனது மகன் குவாசியைக்கூட முழுமையாக நம்புபவர் அல்ல. முழு உண்மையையும் சொல்லிவிடமாட்டார். குவாசி மூத்தமகன்போல் அல்ல. அவன் நல்ல பழக்கவழக்கம் உள்ளவன். எந்தக் கெட்ட செயல்களிலும் அவன் நேரடியாகச் சம்பந்தப்பட்டதில்லை. அவனைப்பற்றிக் கெட்ட வதந்திகள் கூட மக்களால் கதைக்கப்படுவதில்லை. ஆளுமையான தோற்றமும் கவர்ச்சியும் மிக்கவன். அராஜகவாதிகள் மத்தியில் அவன் இப்படியிருப்பதே அவன்மீது ஒரு நல்ல எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது.*

*"மூத்தவன் உதையின் ஒரு அசிங்கமான பேர்வழி. இவனுக்கு பெண்கள் என்றால் போதும். பெண்களை அடைவதற்காக எந்தக்காடைத்தனமும் பண்ணுவான். வீதியால் பெண்கள் போகமுடியாது. அவனது கண்ணுக்கு அழகானவளாக ஒருத்தி பட்டுவிட்டால் அவள் யாராக இருந்தாலும் தனது அடியாட்களைக் கொண்டு தன் படுக்கைக்கு எடுத்துவிடுவான். அவனது வாகனமென்றாலே பயப்பீதிதான். ஆனால் இப்போது அவருக்கு அதெல்லாம் முடியாது. அது ஆண்டவன் கொடுத்த தண்டனை."*

"விளங்கவில்லை எனக்குச் சரியாகக் கேட்பதற்கு வாய்வரவில்லை. எனது முகத்தில் தெரிந்த அதுபற்றிய ஐயத்தை அவர் தெரிந்து கொண்டு சொன்னார்."

*"மூத்தவன் உதைனின் மீது யாரோ கொண்ட ஆத்திரத்தினால் ஒரு கட்டடத்துக்குள் வைத்து இனந்தெரியாதவர்களால் இயந்திரத் துப்பாக்கியால் சுடப்பட்டார். கடைசிவரை சுட்டவர்கள் யார் என்று*



*அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. 18சன்னங்கள் அவரது உடம்பில் ஏறியது. ஆனாலும் அவர் சாகவில்லை. பதிலாக அவர் அந்தக்காயங்களால் ஆண்மை இழந்துபோனார். அது ஆண்டவனின் தீர்ப்பாக இருக்கவேண்டும். வேறு எப்படித்தான் இதைச் சொல்வது. அவனின் அடாவடித் தனங்களுக்கு மரணம் ஒரு தீர்ப்பாக இருக்காது என்று ஆண்டவன் எண்ணியிருக்கிறான் என நினைக்கிறேன்."*





சதாம் ஹுசைனும் அவரது இரண்டாவது மகன் 'குவாசி'யும்

பிரவீன்

"இப்பொழுது இவர் என்னசெய்கிறார்?"

*"இவரின் பொறுப்பில் தான் ஈராக் தொலைக்காட்சி நிறுவனம் இருக்கிறது. ஏனைய ஊடகங்களும் இவரின் கைகளில் தான் இருக்கின்றன."*

"இயங்கக்கூடியவராக இருக்கிறாரா?" என்றேன்.

*"ஓம் ஒரு விசயத்தில் தவிர மற்றும்படி இயங்குவார்."* என்றார் சிரித்துக்கொண்டு.

(ஒரு வாரம் காத்திருக்க)

# நேர்நோக்கு ரணிலுக்கு தடை என்ன?

**அமைச்சரவைத்தீர்மானம்** ஒன்றின் மூலமோ அல்லது சுற்றிக்கை ஒன்றின் மூலமோ புலிகள் கோருவது போன்ற ஓர் இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பை நிறைவேற்றலாம் ·என பிரதமர் ரணில்விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பின் இரண்டாம் கட்ட நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது போலவே யப்பானில் நடைபெற்ற உதவி வழங்குவோர் மாநாட்டிலும் இடைக்கால நிர்வாகசபை அமைக் கப்படும் எனக் கூறி உலக நாடுகளின் கைதட்டல்களையும் வாங்கிக்கொண்டார்.

சிங்களத் தலைவர்களைப் பொறுத்த வரை உலகத் தையும் மக்களையும் ஏமாற்ற இவ்வாறான வார்த்தைகளைக் கூறுவது வழமையானது தான். ஆனால் அவை செயல்வடிவம் பெறுவதுகிடையாது.அவ்வாறு செயல்வடிவம் பெற்றிருந்தால் இனப்பிரச்சினை காரணமாக 20 வருட கால தொடர் யுத்தம் நடைபெற்றிருக்கவும் மாட்டாது.

1972ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா கொண்டுவந்த அரசியலமைப்பை நிராகரித்து தமிழீழமொன்றே அரசியல் உரிமைகளுடன் வாழ ஒரேவழி என தமிழ்மக்கள் தீர்மானத்திற்குவந்து அதற்கென தீவிர சாத்வீகப் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தவேளை இந்தப் பிரச்சினைக்கு வட்டமேசை மாநாடு மூலம் தீர்வு காணப்படும் என.ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறினார். இதன் அர்த்தம் தமிழர் தரப்பும் சிங்களவர் தரப்பும் சம அந்தஸ்துடன் கருத்துக் களைப் பரிமாறி பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பதாகும்.

ஆனால் அவர் ஆட்சிபீடம் ஏறி புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கியபோது தமிழர் தரப்பு எதிர்க்கட்சித் தலைவராகக்கூட வரமுடியாதவாறான ஒரு தேர்தல் முறையை உருவாக்கினார். அத்துடன் அடுக்கடுக்காக தமிழர் மீது வன்முறைகள் ஏவிவிடப்பட்டன. இதன் உச்சக் கட்டமாக கறுப்புஜூலை அமைந்தது. இதன் விளைவுஆயுதப் போராட்டம் தான் தமக்குள்ள ஒரே வழியென தமிழ் மக்கள் முடிவு செய்யக் காரணமாயிற்று. பின்னர் பதவிக்கு வந்த ஆர். பிரேமதாசா "ஈழம் தவிர எல்லாம்" தமிழருக்கு வழங்கப்படும் எனக் கூறி உலகை நிதி உதவி வழங்கும் நாடுகளை - ஏமாற்றி வேண்டியளவு நிதி பெற்று தெற்கில் அபிவிருத்தியையும் வடக்கு கிழக்கில் யுத்தத்தையும் நடத்தினார். அவர் அமைத்த சர்வகட்சி மாநாடு "தமிழருக்கு என்னவழங்கலாம்" என்ற தீர்மானத்துக்கு வர முடியாது திணறி ''தமிழருக்கு என்ன வழங்கக்கூடாது'' என்ற ஒரு நீண்டபட்டியலுடன் முடிவுக்கு வந்தது.

1994இல் பதவிக்கு வந்த சந்திரிகாகுமாரரணதுங்க "தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உண்டு" எனக் கூறி இதனை ஒப்புக்கொண்ட ஒரேயொருதலைவிதானே என்றும் மார்தட்டித் திரிந்தார். ஏனெனில் இவருக்கு முன் இருந்த இடைக்கால சனாதிபதி டி.பி.விஜயதுங்க. "இனப்பிரச்சினை என்று ஒன்று மில்லை. பயங்கரவாதப்பிரச்சினையே உள்ளது" என்று கூறி வந்ததால், சந்திரிகா தான் அவ்வாறு கூறியதேஒரு முற்போக்குச் சிந்தனை என்றும் பெருந்தன்மை என்றும் தான் ஒரு நியாயமான தலைவி என்றும் உலகிற்கு நிறுவமுயன்றார். ஆனால் அவர் பிரச்சினைக்குப்பரிகாரமாக அதிதீவிரமான தமிழ்மக்கள் என்றுமே சந்தித்திராத யுத்தத்தையும் அவலத்தையுமே முன்வைத்தார்.

ஒட்டுமொத்தத்தில் சிங்களத்தலைவர்களால் இனப்பிரச் சினைக்குத்தீர்வாக இன அழிப்பு யுத்தமொன்றே முன்வைக்கப் பட்டது. இதன் விளைவு சிறிலங்காவின் பொருளாதாரம் மறை பெறுமானத்திற்குச் சென்று யுத்தத்தைக் கைவிட்டாலொழிய மீட்சியில்லை என்ற நிலைக்கு சிறிலங்காவைத்தள்ளியது.

இப்பொழுது சிங்களத்தலைமை சமாதானம் பேசு கின்றகாலம். இனப்பிரச்சினைக்கு சமஸ்டி முறையிலானதீர் வொன்றைப்பரிசீலிக்கலாம் என்ற இணக்கப்பாட்டுடன் சமா தானப் பேச்சுக்கள் தொடர்ந்தன. ஆனால் இறுதித் தீர்வை எட்டமுன் இடைக்கால நிர்வாகமொன்றை தமிழர்பகுதிகளில் உருவாக்குவது என்ற இணக்கமும் ஏற்பட்டது.

உண்மையில் இது ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் கால வாக்குறுதியாகும். ஆனால் அவர் பதவியேற்று 18மாதங்கள் ஆகிவிட்ட நிலையில் இதனை நிறைவேற்ற அவரால் முடியவில்லை. இவ்வாறான நிலையில் பேச்சு வார்த்தைகளைத் தொடரவும் யப்பானில் நடைபெற்ற உதவி வழங்குவோர் மாநாட்டில் தாம் கலந்துகொள்ளவும் வடக்கு கிழக்கில் இடைக்காலநிர்வாக சபை ஒன்றை அமைப்பதற் கான தீர்க்கமான திட்டவரைபுகளையே புலிகள் கோரியிருந் தனர். ஆனால் அரசாங்கத்தால் அது செயற்படுத்தப் படவில்லை.

ஆனால் உதவி வழங்குவோர் மாநாட்டில் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படும் என உலக நாடுகளுக்கு உறுதி மொழி வழங்கப்பட்டது. அதுவே பெரும் இழுபறியில் இருக்கையில் இப்பொழுது தமது ஆதரவாளர்கள் மத்தியில் அமைச்சரவைத் தீர்மானம் மூலமோ அல்லது சுற்றறிக்கைமூலமோ புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகசபையை உருவாக்கி விடலாம் என ரணில் கூறியிருக்கிறார்.

அவ்வாறாயின் அதனைச்செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தடையாக இருப்பது என்ன? அமைச்சரவையில் அவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறாரா? அவ்வாறாயின் அமைச்சரவையும் கூட அவரது கட்டுப்பாட்டில் இல்லையா?

சுற்றறிக்கை மூலம் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை உருவாக்கமுடியுமானால் அதில் அவர் தாமதம் காட்டுவது ஏன்?

இன்று சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்கநிலைக்கு உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த நிதி உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமைக்கும் நேரடித்தொடர்பு உண்டு. சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை நீங்கினால் மட்டுமே நிதி உதவி கிடைக்கும் நிலை உள்ளது.

எனவே இந்தத்தேக்கநிலையைப் போக்குவது சுலபம். தன்னால் ஒரே நொடியில் அதனைச் சாதித்து விட முடியும் என தனது ஆதரவாளர்களுக்குக் காட்டிக்கொள்ளவே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தனது முன்னோர்கள் வழியில் செல்வதனையே இது காட்டுகிறது

**வேலவன்**

புறப் பொருள் மூலம், ஆன்மீக அழகைப் புலப்படுத்துவதே கலை -ஸால் வெடார் தெ மாடரியாகா

படித்ததில் பிடித்தது

# சமாதான நதியும் போர்த்துப்பாக்கிகளும்

## ஐக்கிய நாடுகள் சபைக்கு பலஸ்தீனர்களின் முறையீடு



உள்ளங்கைகளில் புறாக்களைஏந்தி
இன்று நாங்கள் உம்மிடம் வந்துள்ளோம்
துயில் கலைந்து எழுந்த எங்கள் நாடு
பலஸ்த்தீனத்துடன்நாங்கள் வந்துள்ளோம்.

இருபது ஆண்டுகள் நாம் காத்திருந்தோம்
பெற்றவை எல்லாம் வார்த்தைகள் மட்டுமே
வெற்று வார்த்தைகள் மட்டுமே பெற்றோம்

எங்கள் காயங்கள் வலி தருகின்றன
எங்கள் எலும்புகள் நொறுக்கப்பட்டன
ஆயினும்
நாங்கள் உமக்கு நல்கிட வந்துள்ளோம்
ஈராக் நாட்டு றோசாப்பூக்களும்
டமஸ்கஸ் நகர நறிய மலர்களும்
வானம் பாடியின் இன்னிசைப்பாடலும்
சின்னக்குருவியின் பிரார்த்தனைக் கீதமும்
காதல் இரவுகள் அனைத்தும் கூட
நாங்கள் உமக்கு நல்கிட வந்துள்ளோம்

ஆண்டாண்டு காலமாய் அடித்து நொறுக்கிச்
சிதறப்பட்ட மக்களாய் வாழ்ந்தோம்
பெருந்தன்மையும் வீரமும் மிக்க
மக்களே நாங்கள்
அனைத்துக்காதலும் பெறுவதற்குரிய
அருகதை முழுமையாய் உடையவர் நாங்கள்
நட்புடன் வாழ நாங்கள்செய்யும்
கடைசி முயற்சி இதுவேயாகும்
கையில் நாம் தாங்கிய ஒலிவம் கிளையினை
நிலத்தில்வீச நிர்ப்பந்திக்காதீர்.

ஒரு புது ஒழுக்கம் உருவாக்குமாறு
உலகிடம்நாங்கள் விண்ணப்பம் செய்கிறோம்
மணல் மேடுகளிலும் மலைகளின் மீதும்
நாங்கள் வாழ்ந்தவர் என்பதை மறப்பீர்.

மணல்களை நாங்கள் போற்றினால் என்ன?
மரங்களை நாங்கள் மதித்தால் என்ன?
பிரகாசமான நட்சத்திரங்களை
எனது சகோதரி கழுவினால் என்ன?

எனது பாட்டி திறந்த கண்களால்
வெறித்துப்பார்ப்பதை காணும் நிலைமை
எனக்கேன் வருவான்?
வானத்தை நோக்கி நிர்வாணமாக
எனது தாயின் சடலம் கிடப்பதைக்
காணும் நிலைமை எனக்கேன் வருவான்?
காட்டு வழிகளில் தீர்க்க தரிசிகள்
சஞ்சாரம் செய்வதை நாங்கள் பார்த்துள்ளோம்
எனது பூமியின்புனித வழிகளில்
ஒளிரும் தாரகை தடம் பதித்துள்ளன
அநீதியால் துயருறும் எமது மக்கள்
காதலின் நட்பின் கீதமேயாவர்
எல்லா நாட்டு மக்களிடத்தும்
அவர்கள் அன்புக்கரம் இதோ நீட்டினர்
அந்தக்கரங்களைவெட்டி விடாதீர.

உடைந்து நொருங்கிய உள்ளத்துயருடன்
உலகில் உள்ள நாடுகளிடத்தில்
முன்பும்நாங்கள் முறையீடு செய்தோம்.

ஆயினும் நாங்கள் அவர்களின் திறந்த
கதவின் வெளியிலே தள்ளப்பட்டோம்.

உன் மனச்சாட்சி அசையவே இல்லை
கசக்கிப்பிழியும் அகதி வாழ்க்கை
சுமையாய் எம்மில் சுமத்தப்பட்டது
நாடுகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய்
திறந்த கரங்களால் வரவேற்கப்பட்டன
ஆயினும் நாங்களோ ஒதுக்கப்பட்டோம்.
எமது இளைஞரின் எமது பெண்களின்
எமது சிறார்களின் வேண்டுதல் எல்லாம்
உமது நெஞ்சினை உலுப்பவே இல்லை.
பிறகு வந்தது எம் போராட்டம்
தியாகங்களும் போர்களும் நிகழ்ந்தன
கொல்லப்பட்டோம் காயமடைந்தோம்
முறையீடுகள் மிகமிகக் குறைந்தன
எங்கள் கண்ணீரை நாங்கள் நிறுத்தினோம்
துப்பாக்கி முழக்கம் சொற்களை விடவும்
உரத்துப்பேசின
நீதிகோரும் எமது மக்களைத்
தடுத்திட வேண்டாம்
எமது புண்களைகிளறிட வேண்டாம்

ஓநாய்களாக வேட்டைப்பறவையாய்
ஒவ்வொரு நாளும் பலியிடப்படுகிற
ஆட்டுக்கடாய்களாய்
கணிக்கப்படுவதை நாங்கள் வெறுக்கிறோம்.

பயங்கர நிலைமை முடிந்திட வேண்டும்
எமது புண்ணிய பூமியின் ஊடாய்
சமாதான நதி பெருகிட வேண்டும்
என்பதே எமது பிரார்த்தனையாகும்.

நீதியும் சமாதானமும்
புதியதான ஒரு சிந்தனைப்பாதையும்
இவையே எமது வேண்டுதலாகும்

இனக்கொலை புரிந்து கரங்கள்தறித்த
கடந்த கால அச்சுறுத்தல்கள்
எதையுமே இங்கு உருவாக்கவில்லை

துப்பாக்கி முழக்கமும்
யுத்த பேரிகையும் தவிர
எதையுமே இங்கு உருவாக்கவில்லை.

பலஸ்தீனக் கவிதைகள்
அந்தொய்னே ஜபாறா

## முழங்காவில் கிருஸ்ணர் ஆலய




### நாக தரிசனம்

கடந்த 02.07.2003 கிருஸ்ணரைச்சுற்றி நாகபாம்பு
படமெடுத்து காட்சிகொடுத்தது. அபிசேகம் பூசை செய்யும்
வேளையிலும் அருகிலே படம்எடுத்தவாறுகாட்சிகொடுத்தது
இவ்அதிசயநிகழ்வு இரவு7.00மணிதொடக்கம் 12.00மணி
வரை நடைபெற்றது. பெருந்திரளானமக்கள்தரிசித்து
சென்றுள்ளார்கள். இவ்வாலய கட்டடவேலைகள் நடை
பெற்றுக்கொண்டிருக்கிறது. இத்திருப்பணிக்கு உதவவிரும்பு
வோர் நேரிலோ அல்லது இலங்கைவங்கி 27439 கிளிநொச்சி
எனும் இலக்கத்திற்கோ அனுப்பி உதவும் வண்ணம் அன்புடன்
கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை
நாக தரிசனம்.

(3556)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கேணல் சரா

(சின்னத்துரை ஜீவராசா)
கல்வியங்காடு

உங்கள் இலட்சிய கனவு நிறைவேறி
ஆனையிறவில் புலிக்கொடி ஏற்றப்பட்டது.
தமிழரின் இறுதி இலட்சியம்
தொலைவில் இல்லை.

ஜனனம்:- 19.04.1962
வீரச்சாவு: 27.07.1991

மானா குடும்பத்தினர்
கல்வியங்காடு.

(சி-8309)

## சனசமூக நிலையங்களிற்கு வெள்ளிநாதம் இலவசம்

ஈழநாதம் பத்திரிகையின் வாரவெளியீடான வெள்ளிநாதத்தினை சனசமூக நிலையங்களிற்கு காலாண்டிற்கு இலவசமாக நிலவன் வெளியீட்டகத்தின் நிதி ஆதரவுடன் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

கீழ்காணும் விபரங்களோடுஎம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

01. சனசமூக நிலையங்களின் விபரத்துடன் நிர்வாகத்தினரின் கடிதம்.

02. அந்தந்த கிராமசேவையாளர்களிடம் உறுதிப்படுத்திய கடிதம்.

03. சனசமூக நிலையத்திற்கு அண்மையிலுள்ள ஈழநாதம் விற்பனை முகவரின் முகவரி.

என்பவற்றுடன் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

குறிப்பு :-
நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்ட திகதி யிலிருந்து காலாண்டிற்கு வெள்ளிநாதம் வழங்கப்படும்.


## சிவா கோல்ட் ஹவுஸ்



இளம் நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை கைதேர்ந்த நிபுணர்களின் கைவண்ணத்தில் அழகாகவும் சிறப்பா கவும் அசல் 22கரட்டில் செய்து கொள்ள நாடவேண்டிய இடம்

நம்பிக்கை, நாணயம், தரச்சிறப்பு

சிவா கோல்ட் ஹவுஸ்

இல:56
தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

(சி-8303)

☎:024-23034



# அனுமார் பதில்கள்

● காதல் வலையில் விழாமல் இருப்பதற்கு என்னசெய்யலாம் அனுமாரே?

எஸ்.வி,
வட்டக்கச்சி.

கலியாணம் செய்யலாம் எஸ்.வி.யாரே. எதற்கும் விழுந்தவர் களையே கேட்டுப்பாருமன்.

● சர்வதேச வலைப்பின்னலைத் தாண்டி புலிகளால் இலட்சியத்தை அடையமுடியுமா அனுமாரே?

பிரபா,
சுவிஸ்.

வெர்ஷில் என்ற கி.மு.70ல் பிறந்த ரோமானியக் கவிஞரின் வாசகம் இது. ''அவர்களால் முடியும் ஏனென்றால் அவர்கள் தங்களால் முடியும் என்று நினைக் கிறார்கள்"

● சென்ற கரும்புலிகள் தினமன்று படையினரின் மனோநிலை எவ்வாறு இருந்திருக்கும்?

சசிக்குமார்,
ஸ்கந்தபுரம்.

வவுனியாவில் இடம்பெற்ற கரும்புலிகள் தின நிகழ்விற்கு பல கவசவாகனங்கள் சகிதமாக படையினர் வந்திருந்தார்களாம்.

● அனுமாரே! இந்த உலகில் நீங்கள் விரும்புவது எதனை?

இ.நிசா,
முரசுமோட்டை.

என்னை விரும்பும் இதயங்களை.

● இலங்கையின் இன்றைய ஜனாதிபதியைப்பற்றி என்ன கூறுகிறீர்கள் அனுமாரே?

இ.அனுஷா,
விசுவமடு.

தாய்க்கும் தகப்பனுக்கும் தப்பாமல் பிறந்த பிள்ளையாக வாழ்ந்து காட்டுகிறார்.

● யாழ்ப்பாணத்தில் மக்கள் மீது டாங்கியை ஏற்றி கொலை செய்த இந்திய இராணுவத்தை திரும்பவும் வரவேண்டும் எனக் கேட்கும் தாடிக் காற வீணையர் பற்றி என்ன நினைக் கிறீர்?

ஈ.எம்.சுகந்தன்,
வவுனியா.

''பூமாலை" தான் ஞாபகம் வருகிறது.

● நீங்கள் ஒரு சிற்பியாக இருந்தால் முதலில் என்ன சிற்பத்தை செதுக்க நினைப்பீர்கள்.

ச. அனுசன்,
புதுக்குடியிருப்பு.

எல்லோரும் இராமரைத் தான் சொல்வேன் என்று நினைப்பது தெரிகிறது. ஆனால் நான் அவரை யல்ல. மற்றவரைத் தான் !!!

● கொலைக்குற்றத்திற்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி இப்படி அழுகிறாரே?

வி.கே.ராசா,
கிளிநொச்சி.

உண்மையாகவோ! போலியாகவோ கண்ணீரின் ருசி புரியட்டும்.

● கலோ! அனுமார் ஈராக்கில் தற்பொழுதும் சதாமின் சிலைகளைத் தகர்க்கும் அமெரிக்கப்படைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

த.ரமேஸ்
யாழ்ப்பாணம்.

அவர்களின் தலைகளை உடைக்கும் ஈராக்கியப் படைகளை இப்படி யாவது பழிவாங்குவோம் என்று நினைக்கிறார்கள் போல.

● கலோ! அனுமார் பச்சைப் புலி என்று பிரதமரை விமல் வீரவன்ச கூறியுள்ளாரே?

க.துளசி ,
வள்ளிபுனம்.

தானும் சிங்கம் தன் எதிராளியும் சிங்கம் என்று எப்படிப்போய் வாக்குக்கேட்பது.

● நினைத்ததற்கெல்லாம் கவிதை எழுதிக்கழுத்தறுக்கும் நண்பனுக்கு ஒரு நல்ல அறுவை தா அனுமாரே?

டி.கண்ணன்,
திருகோணமலை.

காந்தியடிகள் அதிகம் சிக்கனத்தைக்கடைப்பிடிப்பவர். ஒரு முறை லண்டனுக்கு செல்லும் வழியில் கப்பலிலிருந்த ஆங்கிலே யன் ஒருவன் எதையாவது காந் தியை கேலிசெய்து எழுதி வந்து காந்தியிடம் கொடுத்து விட்டுப்போவான். காந்தியோ அதனை வாங்கி அதில குத்தியிருக்கும் குண்டுசியை கழற்றி டப்பி ஒன்றுக்குள் போட்டுவிட்டு கடிதத்ததை குப்பைக்கூடைக்குள் வீசி விடுவார். ஒரு நாள் இதைப்பொறுக்க முடியாத ஆங்கிலேயன் என்ன மிஸ்ரர் காந்தி அதைப்படித்துப் பாருங்களேன். அதில் சாரமொன்றும் இல்லையா? என்று கேட்டான்.

இருந்த சாரத்தைத்தான் நான் டப்பியில் எடுத்து வைத்து விட்டேனே என்று கூறி நகைத்தாராம் காந்தி.

● ஆனந்தசங்கரியை பாராளுமன்றில் கைதட்டி வரவேற்றார்களாமே எதிர்கட்சியினர்?

திலீபனா,
வள்ளிபுனம்.

ஆனந்தசங்கரிக்காக அவரது எதிரணியே கை கட்டி நிற்கும் போது எதிர்கட்சியின் கைதட்டல் என்ன பிரமாதம்.

● அனுமார்! இடைக்கால நிர்வாகசபை இழுத்தடிப்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தமிழ்,
வன்னி.

இடைக்கிலால ஏதோ நடக்கிது போல கிடக்கு.

● கடி ஜோக் ஒன்று அனுமாரே?

கருணைவேந்தன்,
காரைநகர்.

வள் வள் என்பது எனக்கு கடினம். ஹீ...ஹீ... இதுதான் எனக்கு சாத்தியம்.

---

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலுடன் 600 கோடி ரூபாய் பெறுமதியான நாவநவீன போர்த்தளபாடங்களை கொள்வனவுசெய்ய வேகம் காட்டும் அரசு... புலனாய்வுக் கட்டமைப்பை விருத்திசெய்ய அமெரிக்கா, இஸ்ரேலிய மற்றும் பிரிட்டிஷ் உதவிகளைப்பெறுவதில் துரிதம் காட்டும்அரசு, படையினரை எந்த நேரமும் தயார் நிலையில் இருக்குமாறு எச்சரிக்கை செய்வதில் விரைவு காட்டும் அரசு...

சண்டைக்கான வளங்களையும் தளங்களையும் மேம்படுத்துவதில் காட்டும் தீவிர அக்கறையில் ஒரு வீதமளவேனும் சமாதான நடவடிக்கைகளில் காட்டுவதாகத்தெரியவில்லை.

நாளுக்கொரு கருத்தும் பொழுதுக்கொரு அறிக்கையுமாக 'பேய்காட்டும்' நகர்வுகளிலேயே அரசு முனைந்துள்ளதாகத்தெரி கிறது.

'மீண்டும் யுத்தத்திற்கு சென்றால் நாம் கடனாளியாகி விடுவோம்' என்றும் பிரகடனம் செய்யும் ரணில் 'பணக்காரர்களாக இருந்தால் நாம் யுத்தத்தைத் தொடரலாம்' என்ற கோட்பாட்டை ஆதரிக்கும் ஒருவராகவே தெரிகி றார்.

ஆக... கடன் தொல்லையில் இருந்து மீளவே... பொருளாதாரக்கஷ்டங்களில் இருந்து மீளவே ரணில் தவிர்க்கமுடியாத வகையில் சமாதானத்தைப்பற்றி பேசி வருகிறார். (வெறும் பேச்சு மட்டுமே...) என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஒரு நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் வலுவற்ற காரணங்களையும், அர்த்தமற்ற விளக்கங்களையும், நடைமுறைச் சாத்திய மற்ற தீர்வுகளையும் முன்வைக்கும் ஒரு அரசு ஆக்கபூர்வமாக எதனையும் சாதிக்காது என்பது சொல்லித்தெரிய வேண்டிய விடயமல்ல...


அரசியலமைப்புக்கு வெளியே நின்று, விடுதலைப் புலிகள் கோருகின்ற இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பை அமைச்சரவைத் தீர்மானமொன்றின் மூலமோஅல்லது சுற்றறிக்கை ஒன்றின் மூலமோ ஏற்படுத்தக் கூடிய சுலபமான வழி இருக்குமேயானால், அதனை வெளிப்படையாக கூறி அறிக்கை விட்டு பிரச்சாரம் செய்வதை விட்டு அதனை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளில் ரணில் ஈடுபடலாமே... அவருக்கு அவரது தேசநலனில் அக்கறையிருந்தால்... சமாதானத்தின் மீது நம்பிக்கை இருந்தால்... அமைதித்தீர்வு மீது ஆர்வமிருந்தால்... எல்லாவற்றிற்கும் மேலாக சமாதான விரோத சக்திகளை எதிர்த்து - தடைநீக்கும் துணிச்சல் இருந்தால்... அவர் அதைத்தான் செய்யவேண்டும்.

பேச்சுக்கள் தேவையில்லை செயற்படமுடியுமா என்பதே கேள்வி...

இல்லையேல் ' பேச்சுப் பல்லக்கு... தம்பிகால் நடை ' என்ற பழமொழிக்கு உதாரணபுருஷராக மட்டுமே ரணில் இருக்க முடியும்.

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –28



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –28

..................................................
..................................................
..................................................
..................................................

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –27



சு. கார்த்திக்
வன்னி

### பரிசுக்குரியவரிகள்

ஏக்கம் எங்களுக்கு
சோற்றுக்கல்ல-நாளை
விடிகின்ற சுதந்திர
காற்றுக்காக.

### பாராட்டுக்குரியவரிகள்

ஈழத்துப் பஞ்சபாண்டவர்களின் மூத்தவனோ சிறைவாசம்
அண்ணனின் வருகைதனை எதிர்பார்த்து
ஆறாத வேதனையில் ஏங்கி
அன்னத்தை உண்ணாமல் காத்திருக்கின்றனரோ தம்பிமார்!

ம.சன்நிலா,
வவுனியா.

தட்டிலே சோறு
முகத்திலே கவலை
ஊட்டிவிடுவது யாரு
அம்மா நான் வருவேன் பாரு

நா.செல்வா
சேவியர்கடைச்சந்தி,கிளிநொச்சி.

உண்ண உணவிருந்தும்-பாலகரே
உணர்வுகள் பல இருந்தும்.
அன்னியனால் அழிந்துபோன
அன்னை அருகில்லைஎன ஏக்கமோ!

கனி,வட்டக்கச்சி
கிளிநொச்சி.

தட்டிலே போட்ட சாதத்தில்
கறி இல்லை கண்ணீர்தான் விழுகிறது
போனமாதம் மீன் கொண்டுவர
கடலுக்குப் போன அப்பாவை நினைத்து

மதி, கனகபுரம்
கிளிநொச்சி.

அன்றாட பிரச்சினை இது
தெரிந்து கொள் உலகே-எமது
அடிப்படை பிரச்சினை இதுவென்று
உணர்ந்து கொள்

கார்த்திகை
வட்டக்கச்சி.

சோற்றுக்கு கறிபோடுகினும்
வேற்றுமை கொள்வதில்லை
பற்றுக் கொண்டபுலிமாமா
பாசத்தோடு பரிமாறியதால்

சிவா
பருத்தித்துறை

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம்
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.



கடந்த 20-07-2003 அன்று தூயவன் அரசறிவியல் கல்லூரியில் இடம் பெற்ற தூயவனின் கள அனுப வத்தொடரான இன்னொரு போர் முகம் நூல் அறிமுகவிழாவில் நூலின் பிரதி ஒன்றை சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி நகுலன் அவர்கள் வழங்க அதனை கரும்புலி தனா அவர்களின் சகோதரி பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.



கல்வி கற்கும் வயதிலும் குடும்பத்தின் சுமை தாங்க முடியாத சிறுவயதிலேயே தொழில் தேடி கடற்கரை நோக்கி வந்து விட்ட இவர்களின் கதி!



முல்லைச்சமர் வெற்றிவிழா அண்மை யில் முல்லைத்தீவு நகரின் மத்தியில் அமைந்த மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நகரின் ஊடு அணி வகுத்துச்சென்ற வீரர்களும் பார்வையி டும் மக்களும்.









இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.